KALKI
3.2008 ரூ.8.00


கல்கி

80 பக்கங்கள்

குடும்பத்துடன் படிக்க...

தத்தளிக்கிறார் தயாநிதி!





டோனிக்கு மட்டும் ஆறு கோடியா?

- உலக கேரம் சாம்பியன் கேள்வி!



உத்திரவாதமான மேனிப் பராமரிப்பு
தலைமுறை தலைமுறையாக

50 ஆண்டுகளுக்கும் மேலாக, மேனிப் பராமரிப்பில் சிந்தால் நம்பகமான சோப் என்று தொன்றுதொட்டு பெயர் பெற்றுள்ளது. சிந்தால் சோப் மேனியின் எழிலை மேம்படுத்துகிறது. இதன் ஒப்பற்ற நறுமணம் நாள் முழுவதும் நீடித்து உங்களை புத்துணர்வுடன் வைக்கும். எனவே சிந்தால் பல தலைமுறைகளாக விசுவாசமான வாடிக்கையாளர்களை உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.



மேனிப் பராமரிப்பு என்றென்றும்

சுஜாதா - ஒரு சகாப்தம்!



"என்னுடைய ஆரோக்கியத்தை அவருக்குத் தரமுடியவில்லையே... அப்படிச் செய்ய முடிஞ்சிருந்தா, அவர் இன்னும் கூட அந்த வருஷம் வாழ்ந்திருப் பார்..."- எழுத்தாளர் சுஜாதா என்கிற ரங்கராஜனுக்குப் பெயர் கொடுத்த அவரது மனைவி கண்ணீர் மல்கச் சொன்னார். அந்த ஆரோக்கியதானம் மட்டும் சாத்தியமெனில், குறைந்தபட்சம் ஐயாயிரம் தமிழர்கள் சுஜாதாவின் வாழ்க்கையை நீட்டிக்க முன் வந்திருப்பார்கள்! அந்த அளவுக்குத் தமது எழுத்தால் ஒரு சாம்ராஜ்யம் ஸ்தாபித்தார் சுஜாதா.

பெல் நிறுவன பொறியியல் நிபுணராக, எலக்ட்ரானிக் வோட்டுப் பெட்டிக்கு வடிவம் கொடுத்த அவரது சாதனைகூட பின்னுக்குத் தள்ளப்பட்டு, தமிழ்ப் பத்திரிகை உலகிலும் எழுத்துலகிலும் அவர் நிகழ்த்திய புரட்சிதான் முந்தி நிற்கிறது. சுமார் பத்து - பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன், பேனா பிடித்து எழுத முயன்ற அத்தனை தமிழ் இளைஞர்களும் சுஜா தாவின் நடையால் பாதிக்கப்பட்டிருந்ததை உணர முடிந்தது. அவ்வளவு ஜனரஞ்சகமும் கவர்ச்சியும் மிக்கதான புது நடையாக இருந்தது. நவீனம், எளிமை, இளமை மிடுக்கு இணைந்த கலவையில், உலகின் அத்தனை விஷயங்கள் குறித்தும் எழுதிக் குவித்தார். எழுத்தின் அளவிலும் சரி, எடுத்தாண்ட படைப்புகளின் பல்சுவை பாங்கிலும் சரி, 'அமரர் கல்கி'க்கு அடுத்தபடி 'சுஜாதா'தான் என்று சொல்வது மிகை யாகாது. இத்தனைக்கும் சுஜாதா முழுநேர எழுத்தாளரானது பணி ஓய்வுக்குப் பிறகு தான்.

சுஜாதாவின் படைப்புகளில் இலேசான நையாண்டியும் சமூக விமர்சனமும் இழை யோடிக் கொண்டேயிருந்தாலும், உணர்ச்சி மிகுதி என்பதே இராது. இருப்பினும் உணர்ச்சிகளைக் கொட்டி எழுதிய இளைஞர் களை, அவர் அடையாளம் கண்டு ஊக்கு விக்கத் தவறவில்லை. மனம் விட்டுப் பாராட்டி எழுதி, பலப்பல இளைஞர் களுக்குப் புகழும் அங்கீகாரமும் பெற்றுத் தந்தது சுஜாதா செய்த மற்றொரு மிகப் பெரிய பணி.

ஒரு முறை கல்கியின் மார்மச் சிறப்பி தழைத் தயாரிக்கும் பொறுப்பை சுஜாதா ஏற்றபோது, பெங்களூரில் அவர் இல்லத்திலேயே இரண்டு நாட்கள் தங்கி, ஆலோசனைகள் நடத்தி, மேட்டர்கள் தயாரித்துத் திரும்பினார் கல்கி ராஜேந்திரன். கல்கிக்கு, சுஜாதா எழுதிய பல கதைகளும் தொடர்களும் மிக உயர்ந்த இலக்கியத் தளத்தைத் தொட்டன. வைரங் கள் (தொடர்கதை), மத்யமர் சிறுகதைகள் தொடர், கம்ப்யூட்டர் புரட்சி பற்றி எண்பது களில் எழுதிய தொடர், சமீபத்தில் எழுதிய நானோ டெக்னாலஜி பற்றிய தொடர்; இப்போது வெளியாகிக் கொண்டிருக்கும் வாரம் ஒரு பாசுரம்... இத்தொடரை

எழுதும்படி கேட்க நேரில் சென்றபோது உடனடியாக ஒப்புக்கொண்டதுடன், கல்கி பத்திரிகை எப்படி அமைய வேண்டும் என்று நீண்ட நேரம் ஆராய்ச்சி பூர்வமாகப் பேசினார்.

'வாரம் ஒரு பாசுரம்' முதல் பாகத்தை நிறைவு செய்ய முடிவு செய்து அது முற்றுப்பெற்ற சில வாரங்களுக்கெல்லாம், மீண்டும் தாமே கல்கி அலுவலகத்துக்கு போன் செய்தார் சுஜாதா... ''எங்கே போனாலும் 'ஏன் நிறுத்திட்டே?'ன்னு கேட்கறாங்க... திரும்பவும் எழுதறேன்'' என்றார் உரிமையுடன். மிகுந்த சந்தோஷத்துடன் ஒப்புக் கொண்டோம். சுஜாதா தம் வாழ்வில் கடைசியாக எழுதியவை, தற்போது வெளிவந்துகொண்டிருக்கும் வாரம் ஒரு பாசுரம்- இரண்டாம் பாகத்தின் இறுதி ஐந்து அத்தியாயங்கள்தான். அவற்றைக் கைப்பட எழுதுவதற்கு இயலாமல், மருத்துவமனையில் இருந்தபடி தமது உதவியாளரிடம் தொலைபேசியில் சொல்லி, தட்டச்சு செய்துதர வைத்திருக்கிறார்.

கணையாழி - காலச்சுவடு ரக ஏடுகள்;



குமுதம் - குங்குமம்; கல்கி - விகடன்; சின்னத்திரை - வெள்ளித் திரை; இணையம் - இலக்கிய மேடைகள் என்று ஊடக உலகின் ஒவ்வொரு இடத்திலும், மூலை முடுக்கு வரை சுஜாதாவின் மறைவு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சுதாரித்துக்கொள்ள நமக்கு நீண்ட நாளாகும்.

- சீதா ரவி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623, 2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 440/-
ஆறு மாதம் : ரூ. 220/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ்.டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

வியாசர்பாடியிலுள்ள இளவழகியை நேரில் பார்க்கச் செல்கிறவர்களுக்கு, நிச்சயம் அதிர்ச்சி காத்திருக்கும். ஒரு கேரம் உலக சாம்பியனின் வீடு என்கிற எந்த முகாந்திரமும் இல்லாத ஒண்டுக்குடித்தனம் அது. ''சின்ன வயசுல இதெல்லாம் பெரிய குறையா தெரியலை. ஆனா, இப்போ ஐந்து பேர் கொண்ட குடும்பத்துக்கு, இந்த வீடு போதவே மாட்டேங்குது. வீட்டுல ஒழுங்கா ப்ராக்டிஸ் செய்யவும் முடியறதில்லை'' என்கிறார் 23 வயது இளவழகி. விஸ்வநாதன் ஆனந்துக்குப் பிறகு, தமிழகத்திலிருந்து கிளம்பியிருக்கும் இன்னொரு உலக சாம்பியன்! சமீபத்தில் ஃப்ரான்ஸில் நடந்த உலக கேரம் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்று, உலக சாம்பியன் ஆகியிருக்கிறார். தமிழ் நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் நான்காவது உலக கேரம் சாம்பியன் இளவழகி. ஆனால், அவர் முகத்தில் அதற்கான எந்தச் சந்தோஷமும் இல்லை.



''இத்தனை சாதித்தும் குடும்பம் இன்னும் கஷ்டப்படுதேனு வருத்தமா இருக்கு. நான், தமிழ் மீடியத்துலதான் பத்தாவது வரைக்கும் படிச்சேன். அப்பா மீன்பாடி வண்டி ஓட்டறார். அதுல எங்க வண்டி ஓடுது. கைதானே எனக்கு மூலதனம். அதனால, வீட்டுல என்னை எந்த வேலையும் செய்ய விடமாட்டாங்க. காய்கறிகூட நறுக்கவிடமாட்டாங்க; ஒரு நாளும் சமையல் வேலை செஞ்சது கிடையாது. அப்பா இப்படிக் கஷ்டப்படறப்போ, பொறுப்பில்லாம கேரம் விளையாடுறியேனு நிறைய பேர் என்னை மட்டமாப் பேசுனாங்க. வீட்டுல ஊக்கம் கொடுத்தாலும், பொருளாதார நிலைமையும் இது மாதிரியான பேச்சுகளும், என்னை ரொம்பவே தொந்தரவு பண்ணுச்சு. இதுக்கெல்லாம் சரியான பதில் தரணும்னு கடுமையா உழைச்சேன். இன்னைக்கு சாம்பியன் ஆகியிருக்கேன். ஒரேயொரு சந்தோஷம், நான் ஃப்ரான்ஸிலிருந்து வந்தபோது, எனக்காக ஏர்போர்ட்டுல மீடியா காத்திருந்தது. இதுமாதிரியான அனுபவம் இதுவரைக்கும் எந்த கேரம் சாம்பியனுக்கும் ஏற்பட்டதில்லை'' என்று மகிழ்ச்சி கலந்த வருத்தத்தோடு பேசுகிறார் இளவழகி.

பொருளாதார நிலைமையில் எப்படி இவர் இத்தனை தூரம் வந்திருக்கிறார்? ''என்னோட தொடர்ந்து விளையாடின பலபேர், செலவுச் சுமை பொறுக்கமுடியாம இந்த விளையாட்டை விட்டே போய்ட்டாங்க. ஆனா, எனக்குக் கடவுள் மாதிரி ஒருத்தர் அமைஞ்சார். அவர்தான் கிறிஸ்துதாஸ்

மோ சமான

டோனிக்கு மட்டும் ஆறு கோடியா?

- உலக கேரம் சாம்பியன் கேள்வி!

காந்தி ஐ.ஏ.எஸ். விளையாட்டு ஆணையத்தோட செயலாளரா இருக்கார். கடந்த ஐந்து வருடங்களாக அவர்தான் என்னோட எல்லா செலவுகளுக்குப் பொறுப்பு ஏத்துக்கறார். இந்தியா சார்பாக நாங்க எந்தப் போட்டிக்குப் போனாலும் எங்க சொந்தச் செலவுலதான் போகணும்; அரசு எந்த உதவியும் கொடுக்காது. எந்த உதவியும் இல்லாமதான் தமிழ்நாட்டுல இத்தனை கேரம் உலக சாம்பியன்கள் கிடைச்சுருக்காங்க. கிரிக்கெட், டென்னிஸ் சம்பந்தமான போட்டிகளை அரசு நடத்துது; பரிசுத் தொகைகளை வழங்குது. ஆனால், கேரம் விளையாட்டுல இதுமாதிரியான எந்தவிதமான அடிப்படை உரிமைகளையும் எதிர்பார்க்க முடியாது. எந்தப் போட்டியில் ஜெயிச்சாலும், வெறும் சர்டிஃபிகேட் மட்டும்தான் கிடைக்கும். இப்போ உலக சாம்பியனா நான் ஜெயிச்சாலும், எனக்கு எந்தப் பரிசுத் தொகையும் கிடைக்கலை. ஏதோ சபிக்கப்பட்ட விளையாட்டாத்தான் கேரம் இருக்கு. விளையாடினா சர்டிஃபிகேட் கிடைக்கும். அது மூலமா இன்ஜினியரிங் சீட்டும் அரசு வேலையும் கிடைக்கும்ங்கறதாலதான் கேரமை நிறைய பேர் விளையாடறாங்க.''

சரி, அரசாங்கம் இவருக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்? ''இப்போ நான் சொல்றது எனக்கு மட்டுமில்லை, எல்லோருக்கும் சேர்த்துதான்'' என்று உணர்ச்சி வசப்பட்டபடி பேச ஆரம்பிக்கிறார் இளவழகி.

''நடிகர்களுக்கு பத்ம பூஷண், பத்மவிபூஷண் விருதுகள் கொடுக்கறாங்க. இந்தியாவோட பெருமையை நிலைநாட்டின கேரம் வீரர்களுக்கு, பெரிய அளவுல அரசு எந்த மரியாதையும் செஞ்சதில்லை. மகாராஷ்டிரா அரசு தன்னோட ஐந்து கேரம் வீரர்களுக்கு, தலா ஐம்பதாயிரம் கொடுத்து வெளி நாட்டுக்கு

"இந்தியா சார்பாக நாங்க எந்தப் போட்டிக்குப் போனாலும், எங்க சொந்தச் செலவுலதான் போகணும்; அரசு எந்த உதவியும் செய்யாது!"



● இளவழகி

விளையாட அனுப்புது. அதுமாதிரியான சூழ்நிலை தமிழ்நாட்டுலயும் வரணும். என்னைவிட ரேங்க் குறைவா இருக்கறவங்களுக்கு அரசு வேலை கிடைச்சிருக்கு. ஆனா, கேரம்ல உள்ள எல்லா முக்கியமான போட்டிகள்ல ஜெயிச்சும், எனக்கு இது வரைக்கும் எந்த வேலையும் கிடைக்காதது புதிராவே இருக்கு. போன ஆட்சி, இந்த ஆட்சின்னு நான் தொடர்ந்து கோட்டைக்குப் போய் மனு கொடுத்துக்கிட்டுதான் இருக்கேன். ஆனா, இதுவரைக்கும் என் மனுவை யாரும் சீந்தினதா தெரியலை. என்னையும் கேரம் விளையாட்டையும் அரசு கௌரவப்படுத்துற நாளுக்காக நான் காத்துக்கிட்டு இருக்கேன். தமிழக முதல்வர் என் சாதனைகளுக்கும் வேதனைகளுக்கும் மதிப்பு கொடுப்பார்னு நம்பறேன்'' என்று சொல்லும்போது இளவழகியின் கண்கள் குளமாகின்றன.



"என்னுடைய தேவை லட்சமோ கோடியோ அல்ல. குடியிருக்க ஒரு வீடு; நிரந்தர வேலை கிடைத்தால் போதும்!"

ஐ.பி.எல்.போட்டிக்காக கிரிக்கெட் வீரர்கள் கோடி கோடியாக ஏலம் போனது பற்றி கேட்டோம்.

''கிளாமர்மிக்க விளையாட்டு என்பதால கிரிக்கெட்டுக்குச் சிபாரிசும் ஸ்பான்ஸர்ஷிப்பும் சுலபமாகக் கிடைச்சிடுது. ஐ.பி.எல். ஏலத்துல போணிக்கு, சென்னையைச் சேர்ந்த 'இந்தியா சிமெண்ட்ஸ் கம்பெனி' ஆறுகோடி ரூபாய் கொடுத்திருக்கு. இந்தியாவின் வட மாநிலத்தைச் சேர்ந்த ஒரு வீரருக்கு, இவ்வளவு ஊக்கம் கொடுக்கற சென்னை கம்பெனி, என்னை மாதிரியான தமிழ் நாட்டு வீரர்களையும் ஊக்கப்படுத்தணும்'' என்கிறார்.

''ஒரு போட்டியில் நடிகர் அஜித், ஸ்பான்ஸர் கிடைக்காததாலதான் கார் ரேஸை விட்டுவிட்டதாச் சொன்னார். நல்ல நிலைமைல இருந்த அவருக்கே அந்த கதின்னா, நாங்க எல்லாம் எங்கே போறது? கேரம்ங்கறது தெருவுக்குத் தெரு ஆடற ஒரு விளையாட்டு. கிரிக்கெட்டுக்கு ஸ்பான்ஸர் பண்றவங்க, கொஞ்சம் எங்க மேலயும் கருணை காட்டணும். இப்பவும் சொல்றேன், எனக்கு யாராவது ஸ்பான்ஸர்ஷிப் கொடுத்தா, என்னுடைய கோரிக்கை லட்சங்களிலோ கோடிகளிலோ இருக்காது. இருக்க ஒரு நல்ல வீடு, நிரந்தர வேலை. இந்த இரண்டும் எனக்குக் கிடைச்சா போதும். ஆனால், உலக சாம்பியன் ஆன பிறகும் இந்தச் சௌகரியங்கள் கிடைக்கறதுல ஏதாவது சிக்கல் வந்தா, சாதிச்சவரைக்கும் போதும்னு கேரம் விளையாட்டை மூட்டை கட்டிடுவேன்.''

– சநகன்

அட்டை, படம் : ஸ்ரீஹரி


குஜராத் டுடே
நேரடி Exclusive ரிப்போர்ட்
ஜொலிக்கும் ஜோதி கிராம் திட்டம்!
மஹாத்மாவை மறந்துவிட்டதா போர்பந்தர்?
குஜராத்தை உயர்த்தும் தமிழர்கள்!
கல்வி வளர்க்கும் கே.கே.ஸ்கீம்!
நான் ஸ்டாப் மோடி - கல்கிக்கு அளித்த சிறப்புப் பேட்டி!
இன்னும் கூடுதல் தகவல்களுடன்
அடுத்த வாரம் முதல் கல்கியில்
ஆறு வார அதிரடி!
பட்டுப் புடவை
பரிசுப் போட்டியும்
உண்டு!

1997-98ம் ஆண்டுகளில், 'தனது கேபிள் நிறுவனமான எஸ்.சி.வி. நன்கு காலூன்ற வேண்டுமென்பதற்காக, இணையாகத் தொழில் செய்துகொண்டிருந்த ஹாத்வே கேபிள் நெட் ஒர்க்கை, போலீஸ் மற்றும் அதிகாரத் துணையுடன் அப்புறப்படுத்தினார் மாறன்' என்ற குற்றச்சாட்டு உண்டு. பாராளுமன்ற உறுப்பினர், மத்திய அமைச்சர் என்று அரசியல் உச்சத்தைப் பார்த்த தயாநிதிக்கு, இது சோதனைக் காலம்! எஸ்.சி.வி.யை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று இப்போது ஹாத்வேயின் கரம்பிடித்து களமிறங்கி விட்டார் அழகிரி! அன்று தயாநிதிக்கு உதவிய அதிகார பலமும் போலீஸ் பலமும் இன்று அழகிரிக்கும் உதவுகின்றன. போலீஸ் கமிஷனரிடம் தயாநிதி புகார் கொடுத்தால், அவற்றை மறுக்கிறார் கமிஷனர். தமிழக அரசியல் களம் குறித்த வார்னிங் சிக்னலாகவே இந்த நிகழ்வுகள்



தயாநிதி மாறன்,
'அ.தி.மு.க.வுக்குச் சென்றால்,
அடுத்த நாள் நாளிதழ்களில் ஜெ.வுடன் சேர்ந்து அவர்
புகைப்படம் வரும். மற்றபடி அ.தி.மு.க.வில்
அவர் நினைத்ததைச் சாதிக்க முடியாது' என்கின்றனர்!

நமக்குத் தெரிகின்றன!

கேபிள் தொழிலில் கை வைத்தது, தயாநிதியை ரொம்பவே கொதிக்க வைத்துவிட்டது. 'நாங்கள் ஒதுக்கப்பட்டோம்; எங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு செல்கிறோம்; எந்த அரசியலிலும் ஈடுபடவில்லை. அப்படியிருக்க எங்களை வியாபார ரீதியாகவும் அழிக்க நினைப்பது ஏன்?' என்று தயாநிதி காய்களை நகர்த்தத் துவங்கினார். ஜெயலலிதாவின் அறுபதாம் ஆண்டு பிறந்த நாள் அன்று, அவரைச் சந்தித்து அ.தி.மு.க.வில் தம்மை இணைத்துக் கொள்வார் தயாநிதி, என்று வதந்தி பலமாக அடிபடத் துவங்கியது. கோபாலபுரம் பற்றிக்கொண்டது; உளவுத்துறை போலீஸ் உலுக்கி எடுக்கப்பட்டது. 'என்ன நடக்குது' என்று முதலமைச்சரின் உதவியாளர்கள் உளவுத்துறையைக் கேள்வி

குதிக்கிறார் தயாநிதி!

கேட்டுக் குடைந்தனர். ஆனால், பிறந்த நாள் அன்று பதினொரு மணிக்கு ஜெயலலிதாவைப் பார்க்க தயாநிதி நேரம் பெற்றிருப்பதாக, வதந்தி பரவியதே தவிர, அதை உறுதி செய்யும் விதமாகத் தகவல் இல்லை. இதற்கிடையே, ஜெயலலிதாவின் பிறந்த நாளையொட்டி சன் குழும நாளிதழ்களில் வாழ்த்து விளம்பரங்கள் வெளிவந்தன. தினகரன் உயர்மட்ட நிர்வாகிகள், அ.தி.மு.க.வின் சீனியர் தலைவர்களான ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் ஆகியோரைச் சந்தித்து, விளம்பரங்கள் தொடர்பாகப் பேசி முடிவெடுத்ததாகத் தெரிகிறது. ஏற்கெனவே தயாநிதி, 'ஜெயலலிதாவை பையனூர் பங்களாவில் சந்தித்துவிட்டார்' என்று ஒரு வதந்தி கூடுதலாகப் பரப்பிவிடப் பட்டது!

ஆனால், மொத்த காட்சிகளையும் விமர்சிக்கும் அரசியல் நோக்கர்கள் தயாநிதி ஜஸ்ட் தி.மு.க.வை மிரட்டியிருக்கிறார்; அவ்வளவுதான். அழகிரி பிரிவு, 'இப்போதே தயாநிதி மாறன் சகோதரர்களின் செல்வாக்கை ஒடுக்க நினைக்க, கருணாநிதி குடும்பத்தின் இதர பிரிவுகளுக்கு அதில் சம்மதமில்லை. தயாநிதியின் சகோதரி வளைகாப்புக்கு ஸ்டாலினின் மகன் சென்று



கலந்துகொண்டு நல்லெண்ணம் வெளிப்படுத்தியுள்ளார்.



தயாநிதியிடம் பணமிருக்கலாம்; மீடியா பலமிருக்கலாம். சில சமயங்களில் அரசியலில் இவை வேலைக்காகாது. மக்கள் ஆதரவு பெற்ற தலைவர் அல்ல அவர். எனவே, அவர் எங்கு சென்றாலும் எங்களுக்குக் கவலையில்லை. அ.தி.மு.க.வுக்குச் சென்றால், அடுத்த நாள் ஜெ.வுடன் அவர் போட்டோ வரும். அதோடு சரி; அவரது தொலைக்காட்சியும், பத்திரிகையும் ஜெ. புகழ்பாட வேண்டி வரும். மற்றபடி அவர் பணம்

காங்கிரஸ் தலைமை.

சன் தொலைக்காட்சி, அறிவாலயத்தை விட்டுக் காலி செய்து முழுவதுமாக வேறு இடத்தில் இயங்கும் வரை, அரசியல் ரீதியாக எந்தத் தடாலடி நடவடிக்கையும் தயாநிதி எடுக்க மாட்டார் என்கிறார்கள். மத்திய சென்னை தொகுதியின் வளர்ச்சியைப் பொறுத்த வரை, அதிகாரிகள் யாரும் தயாநிதியைக் கண்டு கொள்வதில்லை. அவர் அனுப்பும் கடிதங்களுக்கும் பதில் இல்லையாம். தயாநிதி மாறன், அரசியல் ரீதியாக தற்போது பலவீனப்பட்டிருக்கலாம். ஆனால், அவர்

எதிர்காலத்தில் அழகிரியுடன் மோதல் வந்தால், தமக்கு உதவியாக தயாநிதி இருப்பார் என்று ஸ்டாலின் கருதுவதாகச் சொல்லப்படுகிறது.

கரையுமே தவிர, அந்தக் கட்சியில் அவர் நினைத்ததைச் சாதிக்கவே முடியாது. எனவே, அவர் ஜெயலலிதாவுடன் சேரவே மாட்டார்' என்கிறார் முக்கிய தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

எங்கிருக்கிறாரோ அந்த இடத்துக்குக் கூடுதல் பலம் தானாக வந்து சேரும். அதற்குக் காரணம், அவரது புத்திசாலித்தனம் மட்டுமல்ல; சன் குழுமம் என்ற மீடியா பலமும் அவர் கைவசம் இருக்கிறதே!



இதற்கிடையே டில்லியில் சோனியாவைச் சந்தித்து தொழில் ரீதியாக தம்மை முடக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளைச் சொல்லியிருக்கிறார் தயாநிதி மாறன்! வரும் பாராளுமன்றத் தேர்தலில், காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட வாய்ப்புக் கேட்டார் என்றும் வதந்தி! அவரைப் பொறுமை காக்கச் சொல்லியிருக்கிறது

'சன் டீ.வி Vs கலைஞர் டீ.வி' என்று கல்கி கவர் ஸ்டோரி வெளியிட்டபோது, தி.மு.க. ஏடான முரசொலி காட்டமாக 'ரியாக்ட்' செய்தது. ஆனால், இன்று குடும்பச் சண்டை தமிழக அரசியலையும் தமிழ் நாட்டின் எதிர்காலத்தையும் ஆட்டிப் படைக்க ஆரம்பித்திருப்பதுதானே உண்மை!

– ப்ரியன்



ஏழாவது படகு...

சென்னை போன்ற மெகா சிட்டி போலீசுக்கு, ஹெலிகாப்டர் வாங்க ஆலோசனை
- செய்தி

● ''யோவ் கபாலி, ஐயா கூப்பிடறார் ஸ்டேஷனுக்கு வா.''

''இன்னா வாத்யாரே, இப்பவும் சைக்கிள்தானா? ஹெலிகாப்டரு இட்டாந்திருந்தா எனக்கும் கௌரதியா இருக்குமில்ல. நானும் எப்பதான் ஹெலிகாப்டர் சவாரி போறது?''

● ''ஹெலிகாப்டர் வாங்கினது அமைச்சருக்கு ரொம்ப வசதியாப் போயிடுச்சு!''

''எப்படி?''

''இதோ பாரேன்... அவரோட பேரனை தினம் ஹெலிகாப்டர்லதான் ஸ்கூலுக்குக் கூட்டிட்டுப் போறாங்க!''

● ''என்னங்க கோயம்பேடு பக்கமா போவீங்களா?''

''ஏன் கேக்கறே?''

''மார்க்கெட்ல காய்கறி வாங்கி வெச்சிருக்கேன். ஹெலிகாப்டர்ல எடுத்துக்கிட்டு வந்து, நம்ம வீட்டு வாசல்ல போட்டுட்டுப் போயிடுங்க.''

உத்தமபுத்திரன்

● ''ஹலோ... இன்ஸ்பெக்டர் சாரா? நான் கான்ஸ்டபிள் பேசறேன். சத்யம் தியேட்டர் மேலதான் பறந்துட்டு இருக்கேன். கூட்டம் குறைவாதான் இருக்கு. வந்தா, டிக்கெட் வாங்கிடலாம்.''

● ''யோவ், இங்க இருந்த ஹெலிகாப்டரை எங்க காணோம்?''

''பக்கிரி அதைக் கடத்திக்கிட்டுப் போயி, நடு வானத்துலேருந்து குதிச்சுத் தற்கொலை பண்ணிக்கப் போறானாம்! இப்பதான் தகவல் வந்தது.''

● ''ஹலோ, போலீஸ் கன்ட்ரோல் ரூம்ல இருந்து பேசறேன். கந்தன் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் விமானத்துல தப்பிச்சுப் போறான். ஹெலிகாப்டரைக் குறுக்காட்டி, அவன்கிட்ட மாமூல் வசூல் பண்ணிக் கொண்டு வரவும். ஓவர்.''

● ''ஹலோ... லைட் ஹவுஸ் ஓரமா நிறுத்தி வெச்சிருக்கிற, ஏழாவது படகு

ஜாலி ஸ்டோர்ஸ்



இலவச முத்தம்...!

மறைவுல, இலவச முத்தம் கொடுத்துட்டு இருக்கற காதல் ஜோடிகள் 'பீச்'சை விட்டு வெளியே போங்க.''

● ''யோவ் ஏட்டு, எதிர்ல ஒரு ஹெலிகாப்டர் வருதே... எந்த ஸ்டேஷன்?''

''அது நம்ம டிபார்ட்மெண்ட் இல்ல சார். ரவுடி ரங்கன் நம்மளை வெறுப் பேத்தறதுக்காக அவனே சொந்தமா வாங்கி, நாம போற இடத்துக்கெல்லாம் வர்றான் சார்.''

● '''மாப்பிள்ளை போலீஸ்ல ஹெலிகாப்டர் ஓட்டுறாரு'ன்னா நம்ப மாட்டீங்கன்னுதான், பொண்ணு பாக்கறதுக்கு ஹெலிகாப்டர்லயே வந்தோம்.''


● ''என்னங்க, ஊர்ல இருந்து வந்திருக்கற சொந்தக்காரங்கள ஹெலிகாப்டர்ல ஏத்திக்கிட்டுப் போயி, கொஞ்சம் ஊரச் சுத்திக் காட்டுங்களேன்.''

●









2008 மார்ச் 9
சர்வஜித் மாசி 26
மலர் : 66
இதழ் : 32

தமிழ்த்திரு
நாடுதன்னைப்
பெற்ற தாயென்று
கும்பிடடி பாப்பா
- பாரதியார்

ரயில்வே பட்ஜெட்டில் விட்டுப்போனவை!


பயணிகள் போக்குவரத்துக் கட்டண விகிதம் அதிகரிக்கவில்லை. ஆனாலும், முந்தைய ஆண்டைவிட கடந்த ஆண்டின் வருவாய் பதினாலு சதவிகிதம் அதிகரித்திருக்கிறது. இது இந்திய ரயில்வேயின் பெருமைக்குரிய சாதனைதான். எதிர்க்கட்சியினர் ஏற்க மறுத்தாலும், 25,000 கோடி ரூபாய் லாபமும் 2008 - 2009ல் ரூ.82,000 கோடிக்கான வருவாய் இலக்கும் ஆரோக்கியமான முன்னேற்றத்தின் அறிகுறிகள் தான்.

ரயில்வே பட்ஜெட்டை, அனைத்துத் தரப்பினரும் மகிழ்ச்சியுடன் பயனடையும் வகையில் அமைத்துள்ளார் லாலு பிரசாத் யாதவ். பயணக் கட்டணம் குறைந்திருப்பதுடன் சரக்குக் கட்டணத்தில் சில சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. புதிய ரயில்கள், புதிய ரயில் பாதைகள், ஏற்கெனவே உள்ள பாதைகளை அகல ரயில் பாதைகளாக மேம்படுத்துதல், மாணவர்களுக்கு இலவச பயண வசதி என்று பல நல்ல விஷயங்களுக்குக் கோடிகளை ஒதுக்கீடு செய்கிறது இந்தப் பட்ஜெட். இந்த வெற்றி பெரும்பாலும் தனியார் மயமாதலால்தான் சாத்தியமாகியிருக்கிறது.

எனினும், மூன்று முக்கியமான விஷயங்கள் குறித்து, ரயில்வே அமைச்சர் போதிய கவனம் செலுத்தாதது கவலை தருகிறது.

முதலாவது, ரயில்கள் காலந்தவறாமல் இயங்குவதற்கான திட்டங்கள் என்ன? இத்தனை லாபம் ஈட்டும் துறை, தனது தாமதத்தால் பலரது நஷ்டத்துக்கும் பண, நேர விரயத்துக்கும் காரணமாகலாமா? நூறு சதவிகித நேரந்தவறாமை என்ற இலக்கை நிர்ணயித்து, அதற்குத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ளலாமே.





இரண்டாவது, ரயில்களின் வேகமும் எண்ணிக்கையும் பெருகும் அளவுக்கு, முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளைப் பெருக்கி, விபத்துகளைக் குறைக்க என்ன நடவடிக்கை? விபத்து நடந்து பிறகு, லட்சம் லட்சமாக நஷ்ட ஈடு தரப்பட்டு என்ன பயன்? ரயில் பாதை பராமரிப்பு, ஊழியர்களின் பணியும் கவனமும் விழிப்புணர்வும் மேம்பட பயிற்சி, விபத்துகளற்ற சேவை என்ற இலக்கை எட்ட ஊக்கத் தொகை, என்று நூறு சதவிகித பாதுகாப்பு நோக்கி நடைபோடுவது எப்போது?

மூன்றாவதாக, ரயில் நிலையங்களில் மட்டுமின்றி, ரயில் பாதைகளிலும் ரயில்களுக்குள்ளேயும் சுகாதாரம் காப்பது. இந்திய ரயில்வே துறை, கோடிக்கணக்கான லிட்டர் கழிவு நீரை நாடு முழுவதும் வெளியேற்றிச் சுகாதாரக் கேடு விளைவித்து வருவது, சமீபத்திய தேசிய மாநாடு ஒன்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. விமானங்களில் உள்ளது போன்ற கழிவுநீர் சேகரிப்பு வசதியுடன் கூடிய ரயில்களாக, அனைத்து ரயில்களும் மாற விரைந்து திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்.

இந்த மூன்று முக்கிய அம்சங்களிலும் அமைச்சர் முதல் அடி எடுத்து வைத்துள்ளாரே தவிர, தீவிர ஈடுபாடு காட்டவில்லை. இவற்றை விரைந்து கவனிப்பதுடன் வேறு சில வசதிகளும் செய்யலாம்:

* ரயில் நிலையங்களில் பயணிகளே தங்கள் பெட்டிகளை நகர்த்திச் செல்ல, விமான நிலையங்களில் உள்ளது போன்ற டிராலி வசதி.

* ரயில் நிலையத்தின் உள்ளேயிருந்து நகருக்குள் பயணம் செய்யக்கூடிய வகையில் பேருந்து வசதி. (அந்தந்த மாநகரப் பேருந்து நிறுவன ஒத்துழைப்புடன் இதனை நடைமுறைப்படுத்தலாம்)

* பயணத்தினூடே தேவைப்படக்கூடிய அவசர மருத்துவ சிகிச்சை / முதலுதவி போன்றவற்றை வழங்கும் பயிற்சி பெற்ற ஊழியர்களின் சேவை.

அடுத்த பட்ஜெட்டுக்குள் மேற்படி விஷயங்களில் லாலு பிரசாத் யாதவ் தீவிர கவனம் செலுத்தி, நடைமுறைப்படுத்த ஆரம்பித்தால், 'இது தமது கடைசி பட்ஜெட் அல்ல' என்று அமைச்சர் சொல்வதை நிச்சயம் வரவேற்கலாம்! ●



கவனத்தைக் கவர்ந்த கருத்து!

'பிராந்திய உணர்வைத் தூண்டி விட்டு, வன்முறை வழியில் அரசியல் லாபம் பெற முயற்சிப்பது அரசியல் வாதிகளுக்குக் கைவந்த கலை, என்பதற்குச் சமீப உதாரணம் ராஜ் தாக்கரே.

- எஸ்.உஷா, சென்னை

ஆபாசத்துக்கும், கவர்ச்சிக்கும் இடையே உள்ள மெல்லிய இடைவெளியைப் புரிந்து வைத்திருக்கிறார் அனுவர்த்தன். அவருடைய கருத்து எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கும்.

- க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

வட்டமேஜை

சுகம்புராஜ், 'சுகம்பு' விழுந்து விழுந்து சிரிக்க வைத்தது; கூடவே சிந்திக்கவும்.

- நீரார், செங்கோட்டை

காங்கிரஸ் - தே.மு.தி.க. நிச்சய தார்த்தம்? என போட்டு தி.மு.க. வினரை உசுப்பிவிட்டுப் பார்த்து விட்டீரே!

- டி.ராமகிருஷ்ணன், எரகுடி

வேதாவின், 'ஸ்ரீ சிவகாமி அம்மன்' படம் மனம் லயித்து கொள்ளை கொள்ளும்படி இருக்கிறது.

- கமலா ராஜசேகரன், பொள்ளாச்சி

ஆரோக்கியமான சினிமாவ்ன என்ன என்று இயக்குநர் சித்திக்கின் விளக்கம் ஆரோக்கியமானது.

- கே.வி.ராமன், சென்னை

கல்கி ராஜேந்திரனின் '70 முதல் 7 வரை' யதார்த்தங்களின் நிழலாய் இதழில் விறு விறு என்று செல்கின்றது!

- இந்திரன், நாகர்கோவில்

மும்பையில் நடைபெற்ற 'ராஜ் தாக்கரேவின் ரகளை' பற்றி, 'தேசிய பார்வையைத் தேர்தல் பார்வை எரித்து அழித்துவிட்டது' என்ற தலையங்க வரிகள் அருமை.

- வேல்முருகன், தேனி

ஃபீட்-போல்ட்

திருட்டிலேயே கேவலமானது அடுத்தவன் கற்பனையைத் திருடுவது. உதவி பாடலாசிரியர்களை பாடல் எழுத வைத்து, அதில் சில கவிஞர்கள் பிழைப்பு நடத்துவது திகைக்க வைத்துவிட்டது!

- த.சத்தியநாராயணன், அயன்புரம்

விவசாயத்தில் அரசு போதிய கவனம் செலுத்தவில்லையென்றால், நம்மாழ்வார் கூற்று முற்றிலும் உண்மையாகும் சாத்தியம் உண்டு.

- செல்வராஜா, சேலம்

சோ எழுதிய

மஹாபாரதம் பேசுகிறது ரூ. 600/-

வால்மீகி ராமாயணம் ரூ. 600/-

ஹிந்து மஹா சமுத்திரம் (3 பாகங்கள்) ரூ. 600/-

அதிர்ஷ்டம் தந்த அனுபவங்கள் ரூ. 145/-

இந்து தர்மம் ரூ. 75/-

எங்கே பிராமணன்? ரூ. 125/-

வெறுக்கத்தக்கதா பிராமணீயம்? ரூ 35/-

1. வந்தேமாதரம்	115.00	19. யாருக்கும் வெட்கமில்லை	40.00
2. வாஷிங்டனில் நல்லதம்பி	100.00	20. சட்டம் தலை குனியட்டும்	40.00
3. சர்க்கார் புகுந்த வீடு	100.00	21. எங்கே போகிறாய்?	40.00
4. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 1)	130.00	22. என்று தணியும் இந்த சுதந்திர தாகம்?	35.00
5. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 2)	75.00	23. இறைவன் இறந்து விட்டானா?	35.00
6. கூவம் நதிக்கரையினிலே (பாகம் 3)	40.00	24. இன்பக் கனா ஒன்று கண்டேன்	25.00
7. துக்ளக் படமெடுக்கிறார்	50.00	25. சாத்திரம் சொன்னதில்லை	40.00
8. அதிகப் பிரசங்கம்	45.00	26. சரஸ்வதியின் சபதம்	35.00
9. இவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்	50.00	27. ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ்டு	35.00
10. யாரோ இவர் யாரோ?	65.00	28. நேர்மை உறங்கும் நேரம்	30.00
11. சாதல் இல்லையேல் காதல்	80.00	29. மனம் ஒரு குரங்கு	40.00
12. மை டியர் பிரம்மதேவா	30.00	30. ஏன் கூடாது?	40.00
13. இந்தியா எங்கே போகிறது?	20.00	31. இரவில் சென்னை	40.00
14. துக்ளக் கேள்வி - பதில் I & II	100.00	32. முகமது பின் துக்ளக்	35.00
15. ஒண்ணரைப் பக்க நாளேடு	40.00	33. உறவுகள் இல்லையடி பாப்பா	40.00
16. காமராஜை சந்தித்தேன்	60.00	34. சம்பவாமி யுகே யுகே	40.00
17. புரட்சி கீதை	35.00	35. எதற்காக?	35.00
18. திரையுலகைத் திரும்பிப் பார்க்கிறேன்	45.00	36. உண்மையே உன் விலை என்ன?	45.00

எஸ். குருமூர்த்தி எழுதிய **தண்ணீர் விட்டோ வளர்த்தோம்** (3 பாகங்கள்) ரூ. 525/-

பரத்வாஜ் எழுதிய **ஆட்சி முறை - ஒரு பார்வை** - ரூ. 200/-

கிவாஜ எழுதிய

தமிழ்ப் பழமொழிகள் (4 பாகங்கள்) ரூ. 400/- **கி.வா.ஜ. பதில்கள்** (3 Vols) ரூ.165/

அபிராமி அந்தாதி விளக்கவுரை (4 பாகங்கள்) ரூ. 300/-

கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள் (6 பாகங்கள்) ரூ. 735/-

தேவன் எழுதிய

1 துப்பறியும் சாம்பு	ரூ.85.00	8 ஏன் இந்த அசட்டுத்தனம்	ரூ.55.00
2 சொன்னபடி கேளுங்கள்	54.00	9 விச்சுவுக்குக் கடிதங்கள்	55.00
3 மல்லாரி ராவ் கதைகள்	80.00	10 ராஜத்தின் மனோரதம்	50.00
4 அப்பளக் கச்சேரி	70.00	11 சீனுப்பயல்	80.00
5 ராஜியின் பிள்ளை	45.00	12 பார்வதியின் சங்கல்பம்	60.00
6 போக்கிரி மாமா	90.00	13 பல்லிசாமியின் துப்பு	75.00
7 மனித சுபாவம்	65.00	14 சின்னஞ் சிறு கதைகள்	65.00
		15 ரங்கூன் பெரியப்பா	52.00

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ் புத்தக நிறுவனம்)

(ப.லிட்) 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மைலாப்பூர் - சென்னை 600 004.

தொலை பேசி 24 64 13 14 www.alliancebook.com e.mail: srinivasan@alliancebook.com

எஸ்.பி.முத்துராமன்



ஸ்கூட்டரில் வந்த ரஜினி!

'ராணுவ வீரன்' படத்தில், ரஜினியின் தங்கை பாத்திரத்தில் நடித்தவர் நளினி! அதன் பிறகு, அவர் கதாநாயகியாக பல படங்களில் நடித்துப் புகழ்பெற்று, இன்றைக்கு சின்னத்திரை தொடர்களில் வெற்றிகரமாக வலம் வந்துகொண்டிருக்கிறார்.

'சுட்டாலு உன்னாரு ஜாக்கிரதா' அதாவது, 'சுற்றத்தினர் இருக்கிறார்கள், ஜாக்கிரதை' என்று ஒரு தெலுங்குப் படம். ரஜினியை நடிக்க வைத்து அந்தப் படத்தைத் தமிழில் எடுக்கும் எண்ணத்துடன், ஏவி.எம். நிறுவனத்தில் அதன் உரிமையை வாங்கினார்கள். ஏவி.எம்.சரவணன் ரஜினியை வரவழைத்துத் தம் எண்ணத்தைத் தெரிவித்தார். ஆனால், ரஜினி, ''நான் ஏற்கெனவே அந்தப் படத்தைப் பார்த்துவிட்டேன்; எனக்கு அந்தப் படம் பிடிக்கவில்லை; ஸாரி!'' என்று சொல்லிவிட்டார்.



● ராதிகா

அந்தக் கதையை ரஜினிக்கு ஏற்றபடி மாற்றி அமைத்தார் பஞ்சு அருணாசலம். ''இப்போ மறுபடியும் ஒரு தடவை அந்தப் படத்தைப் பாருங்கள்'' என்று ரஜினியிடம் சொல்லி, ஒரு நாள் இரவு பத்து மணிக்கு ஏவி.எம். தியேட்டரில் ரஜினிக்கு அதைப் போட்டுக் காட்ட ஏற்பாடானது. இரவு ரஜினிக்காகக் காத்துக்கொண்டிருந்தோம். திடீரென ஒரு ஸ்கூட்டர் வருவதைக் கவனித்தோம்; எங்களுக்கு இலேசான அதிர்ச்சி! ஸ்கூட்டரை ஓட்டிக்கொண்டு வந்தவர் ரஜினி!

படம் முடிய இரவு ஒரு மணியாகிவிட்டது. அதற்குள், ரஜினி ஸ்கூட்டரில் படம் பார்க்க வந்திருக்கிறார் என்ற நியூஸ், ஏவி.எம்.சரவணன் சார் காதுக்கு எட்டிவிட்டது. அவர் என்னை ஃபோனில் அழைத்து, ''படம் பார்த்தவுடன், ஸ்கூட்டரில் அவர் பாட்டுக்கு தனியாகக் கிளம்பிவிடப் போகிறார்; ரஜினியை, காரில் அனுப்பி வையுங்கள்'' என்று சொன்னார். ரஜினியிடம் இதைச் சொன்னபோது, ''உங்களுக்கு எதுக்கு சார் வீண் சிரமம்? நான் ஸ்கூட்டரிலேயே போய்விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டார்!

அதற்குள் மீண்டும் ஏவி.எம்.சரவணனிடமிருந்து ஃபோன் வந்துவிட்டது. தகவல் தெரிந்ததும், ''அப்படியானால் அவர் கூடவே, வேறு யாரையாவது காரில் போகச் சொல்லுங்கள்; அவர்



பத்திரமாக வீடு போய்ச் சேர்ந்து விட்ட தகவல் வந்த பிறகுதான் நான் தூங்கப் போவேன்'' என்றார்! அதன்படி, ரஜினியுடைய ஸ்கூட்டரின் பின்னாலேயே, ஒருவரை காரில் அனுப்பி வைத்தோம்!

''நீங்கள் இப்படி இருக்கக் கூடாது; உங்களுக்கென்று ஒரு குடும்பம் இருக்கிறது; தயாரிப்பாளர்கள் உங்களை நம்பி, அதிகப் பணம் முதலீடு செய்து படம் எடுக்கிறார்கள். நீங்கள் எது செய்தாலும் இவற்றையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்'' என்று ஒருமுறை எடுத்துச் சொன்ன போது, ரஜினி அதை ஆமோதித்தார்.

இரண்டாம் முறையாக படம் பார்த்த பிறகும்கூட, ரஜினி முழுமையாக கன்வின்ஸ் ஆகவில்லை. ''நீங்கள் ரொம்பவும் கேட்பதால் நடிக்க ஒப்புக்கொள்கிறேன்'' என்று சொல்லித்தான் தம் சம்மதத்தைத் தெரிவித்தார். ஆனால், பஞ்சு அருணாசலத்தின் மெருகூட்டப்பட்ட திரைக்கதை மற்றும் வசனங்களால் படம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது. அந்தப் படம்தான் 'போக்கிரிராஜா'.

போக்கிரி ரவி என்ற ரௌடி கேரக்டர், டீசன்டான மனிதரான ராஜா என்ற கேரக்டர் என்று படத்தில் இரண்டு விதமான கேரக்டர்கள். ரௌடி கதாபாத்திரத்தில் ரஜினிக்கு ஜோடி ராதிகா. இன்னொரு கேரக்டருக்கு ஜோடி ஸ்ரீதேவி. இரண்டு கேரக்டர்களிலும் நடிப்பில் ரஜினி வித்தியாசம் காட்டினார் என்றால், அவருடன் போட்டி போட்டுக் கொண்டு ராதிகாவும் ஸ்ரீதேவியும் நடித்தார்கள். ரௌடிப் பெண்ணாக ராதிகாவின் நடிப்பைப் பார்த்துவிட்டு, ''எம்.ஆர். ராதாவின் பெண் என்பதை நிரூபித்து விட்டாய்'' என்று பாராட்டுகளைத் தெரிவித்தேன். அதன் காரணமாகவே, இறுதியில் சண்டைக் காட்சியில் ராதிகாவையும் இடம்பெறச் செய்தோம். இன்னொரு பக்கத்தில், ஸ்ரீதேவி மிக மென்மையான நடிப்பால் ரசிகர்களைக் கவர்ந்தார். முழுக்க முழுக்க மலர்களைக் கொண்டே அழகான செட் போட்டு, ஒரு பாடல் காட்சியைப்

ரசிகர் மன்ற ராஜாக்கள்



சென்னையைச் சேர்ந்த கண்ணனுக்கு ரஜினியைத் தவிர்த்துவிட்டு வேறெதையும் பார்க்க முடியாது. அடிப்படையில் டிரைவரான கண்ணன், கார் ஓட்டுவதில்கூட ரஜினி ஸ்டைலை ஃபாலோ செய்கிறார். எப்பொழுதும் ரஜினிப் புகழ்பாடும் இவர், தம் பெரியம்மாவைக்கூட ரஜினியின் திருமண மண்டபத்தில்தான் வேலைக்குச் சேர்த்துவிட்டிருக்கிறார். ரஜினி படம் ரிலீசான முதல் நாளிலேயே படத்தைப் பார்த்துவிடும் இவர், அதற்குச் சொல்லும் காரணம் சுவாரஸ்யமானது. "திரையுலக முதல்வராக இருக்கிற ரஜினிப் படத்தை, முதல் நாளன்று பார்ப்பதுதான் என்னைப் போன்ற ரசிகர்கள் அவருக்குச் செய்யும் முதல் மரியாதை. ரஜினி அரசியலுக்கு வரணுங்க. அவரோட கரம் ஏழைகளோட கண்ணீரைத் துடைக்கணும். அது நிச்சயம் நடக்கும்!" என்கிறார். ஏன் ரஜினிக்கு ரசிகராக இருக்கீங்க என்று கேட்டால், ''ரஜினிக்கு ரசிகராக இல்லாதவன் வேறெந்த நடிகருக்கும் ரசிகனாக இருக்க தகுதியில்லாதவன்'' என்கிறார் முத்தாய்ப்பாக. உங்களோட ஆசை என்ன என்றால், ''சீக்கிரம் ரோபா ரெடியாகணும்'' என்கிறார் வெள்ளந்தியாக.

படம் பிடித்தோம். ஆர்ட் டைரக்டர் சலம் அமைத்த அந்த அருமையான செட் இன்னும் கண்ணுக்குள் இருக்கிறது.

'முரட்டுக்காளை' படத்தில் வித்தியாசமாக ஜெய்சங்கரை வில்லன் வேடத்தில் நடிக்க வைத்தது போலவே,

• 'முரட்டுக்காளை' படத்தில் வில்லன் ஜெய்சங்கர், ரஜினி




இந்தப் படத்தில் நவரசத் திலகம் முத்துராமனை வில்லனாக நடிக்கவைக்க விரும்பினோம். ஆனால், அவர் வில்லனாக நடிக்க ஒப்புக் கொள்வாரா என்ற தயக்கம் எங்களுக்கு இருந்தது. ஆனால், அவரை அணுகியபோது, ஜெய்சங்கரைப் போலவே, தயக்கம் ஏதுமில்லாமல், ''நீங்கள் கேட்கிறபோது, நான் எப்படி மறுக்க முடியும்?'' என்று சொல்லி தமது ஒப்புதலை அளித்தார். க்ளைமாக்ஸ் காட்சியில் நடித்துவிட்டு, வேறு ஒரு படப்பிடிப்புக்காக ஊட்டிக்குச் சென்றார் முத்துராமன். நாங்கள் படப்பிடிப்பு முடித்துவிட்டு, ஊர் திரும்பியபோது, அவர் மரணம் அடைந்த அதிர்ச்சித் தகவல் வந்தது.

முத்துராமன் சம்மந்தப்பட்ட காட்சிகளில் டப்பிங் பேச எங்களுக்குக் கைகொடுத்தது கூழாங்கல்தான்! எப்படி?

(பயணம் தொடரும்)

எழுத்து வடிவம் : **எஸ். சந்திரமௌலி**



ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்

2A, II Floor Mathura Enclave - No.95/123, Perambur High Road, Perambur, Chennai - 11

Ph 25511786 மொபைல் போன் : 9444035876

(நாமசங்கீர்த்தனத்துடன் அன்பர்களை அழைத்துச் செல்லும் ஆன்மிகச் சுற்றுலா குழு அமைப்பாளர்கள்)


கோடை விடுமுறையை முன்னிட்டு சிறப்பு ஒருநாள் தரிசனம்

1. 12.4.08 செட்டிபுண்ணியம், திருமலைவையாவூர், மயிலம், மதுராந்தகம், திருவெக்கரை
2. 19.4.08 தாமரைபாக்கம், சுருட்டப்பள்ளி, நாராயணவனம், நாகலாபுரம், காக்களூர்
3. 26.4.08 வல்லக்கோட்டை, மகாமேரு, காஞ்சிபுரம் (வரதராஜர், காமாஷி கோவில் மட்டுமே) உத்திரமேரூர், தென்னங்கூர்
4. 3.5.08 நவக்கிரக கோட்டை, வள்ளிமலை, தங்கால் ஆசிரமம், ஸ்ரீபெரும்புதூர்

மேற்படி ஒருநாள் பயணத்திற்கு ஒவ்வொன்றின் கட்டணம் ரூ.350/-

(52 இருக்கைகள் கொண்ட பஸ் மற்றும் காலை டிபன், காபி, சாப்பாடு உட்பட)

5. June சிங்கப்பூர், மலேசியா, பேங்காக், பட்டாயா - 12 நாட்கள்
6. July பாண்டியநாடு, ராமேஸ்வரம், திருநெல்வேலி, நவதிருப்பதிகள் - 7 நாட்கள், சோழ நாடு 40 திவ்யதேசங்கள் - 5 நாட்கள்
7. August கேரள மாநிலத்து மலை நாட்டு திவ்யதேசங்கள் - 6 நாட்கள்
8. August மந்த்ராலயம் மற்றும் நவபிருந்தாவனம் - 4 நாட்கள்.
9. Sept பத்ரிநாத் கேதார்நாத் யாத்திரை - 15 நாட்கள்.



V. சீனிவாசன் (அமைப்பாளர்)

பங்கு பெறுவீர்! பாக்கியவான்களாவீர்!

மேற்படி யாத்திரையின் கட்டணம் மற்றும் விவரம் அறிய சுய விலாசமிட்ட ரூ. 5/- ஸ்டாம்ப் கவருடன் விண்ணப்பிக்கவும். மாருதி யாத்திரை பக்தியுடன் பகவத் அநுகிரஹத்தைப் பெறுவதற்கே மிகுந்த சௌகர்யத்திற்கும், வசதிக்கும் அல்ல

Visit our Website: www.srimaruthitravels.com E.mail: vsrinivasan1952@yahoo.com

---

சரோஜா வைத்யநாத ஐயர் பரம்பரை ஜோதிடர்



ஜோதிடத்தில் 50 வருட அனுபவம் கொண்ட

"ஜோதிட வாணி"

ஸ்ரீமதி சரோஜா வைத்யநாத ஸ்வாமி ஐயர்

கைரேகை, ஜாதகம், நியூமராலஜி, வாஸ்து, சாமுத்ரிகா லக்ஷணம், திருமணப் பொருத்தம், அனைத்தும் பார்க்கப்படும்.

அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படும்.

வெளியூரில் வசிப்பவர்கள் அதிகபட்சமாக 5 கேள்விகள் வரை கேட்க ரூ.500/- கட்டணத்தை முன்னதாகவே அனுப்பவும்.

3, சுப்பாரெட்டி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33.

(மேற்கு மாம்பலம் காசி விஸ்வநாத கோயில், மற்றும் காஞ்சி சங்கர மடம் அருகில்)

Cell : 94451 63682, 94446 84006 — 24740887.

அலங்காநல்லூர் என்றதுமே ஜல்லிக்கட்டுதானே ஞாபகம் வரும்... இனி அந்தப் பெயரைக் கேட்கறபோது அச்சுவெல்லம் நம் நினைவில் இனிக்கட்டும்...

அலங்காநல்லூர் கரும்புத் தோட்டங்களில் அச்சுவெல்லம் தயாரிக்கப்படுகிறது. இதற்கென கிரஷ்ஷர் மிஷின், பெரிய கப்பரை மற்றும் அச்சுப் பெட்டி போன்ற சகல உபகரணங்களுடன் வெளியூர்க்காரர்கள் இந்தப் பகுதிகளில் வந்து, மூன்று மாதங்கள் தங்கிவிடுகின்றனர்.

''நட்ட கரும்பு முதல் சாகுபடி. அடுத்து வர்ற கட்டைக் கரும்பு ரெண்டாவது சாகுபடி. நாலஞ்சு வருஷத்துக்கப்புறம் மாற்றுப் பயிர் ஒரு வருஷம் பண்ணிட்டு, மறுபடியும் கரும்பு சாகுபடி. ஏன்னா, அச்சு வெல்லக் கரும்பு சாகுபடியில் விவசாயிகளுக்கு நல்ல வருவாய். நாற்பது வருஷமா தொடர்ந்து எங்கள் பகுதியில் இது நடந்து வருது. அலங்காநல்லூர் அச்சு வெல்லம்னா நாக்குல எச்சில் ஊறும்!'' என்கிறார் கரும்பு விவசாயி ஒருவர்.

''கரும்பு நட்ட ஒன்பது மாசம் கழிச்சு, வெட்ட ஆரம்பிப்பாங்க. டெய்லி பத்து ஆளுங்க கரும்பு வெட்ட வருவாங்க. வெட்டிக் குவிச்சிட்டுப் போயிடுவாங்க. கிரஷ்ஷர் மிஷின்ல கரும்பை விட்டுச் சாறு பிழியணும். அது கரும்புப் பாலா, ட்ரம்ல வந்து கொட்டும். இதுதான் என்னோட வேலை!'' எனக் கூறுகிறார் வேணி.

''அதிகாலை அஞ்சு மணிக்கு எங்க வேலைய ஆரம்பிச்சுடுவோம். ஒரு நாளைக்கு, கொறைஞ்சது அஞ்சு கப்பரை காய்ச்சுவோம். ஒரு கப்பரைக்கு, நூற்றியிருபது படி கரும்புப் பால். கரும்புச் சக்கைங்க (கோது) காய்ஞ்சு போனா ஜோரா எரியும். அதனால கோதுகளை அடுப்புக்கு விறகாப் பயன்படுத்திக்குவோம். கொதிச்சுப் பாகா மாறி வர்றதை, மர அச்சுப் பெட்டியில ஊத்தி நிரவிவுட்டு, அச்சு வெல்லமா எடுக்கறது என்னோட வேலை. இதெல்லாம்விட ரொம்ப முக்கியமானது, வெல்லப் பாகினைப் பதம் பார்த்து இறக்கறது. அதுதான் இந்த அச்சு வெல்லத் தயாரிப்புக்கே அச்சாணி. ருசியான சமையலுக்குச் சரியான அளவுல உப்பு போடற மாதிரி'' எனச் சொல்கிறார் கருப்பசாமி.



● வேணி



''கப்பரை சைஸே கொஞ்சம் வித்தியாசமா இருக்கும். உள்கூடு ஒன்பது அடி அகலம். மேல் கூடு பன்னிரண்டு அடி அகலம். கப்பரையில் கரும்புப் பாலைக் கொட்டிய பிறகு அடுப்பை எரிய விடணும். கொஞ்சமா சோடா மாவு பவுடர் போடணும். அப்பத்தான்





அலங்காநல்லூர் அச்சு வெல்லம்!

கால் மணி நேரம் கழிச்சு, நுரைச்சுக்கிட்டு அழுக்கு மேலே வரும். அதை வாரி யெடுத்துக் கீழே கொட் டணும். அச்சுவெல்லம் நல்ல கலரா வர்றதுக்கு, ஹைட்ரோஸ் கெமிக்கல் பவுடரை ஒரு கப்பரைக்கு கால் கிலோ போடணும்'' எனக் கூறுகிறார், வெல்லப் பாகு பதம் பார்க்கும் சுப்பிர மணி.

''ஒரு மணி நேரம் நல்லா கொதிக்க விடணும். கரும்புச் சாறு வெல்லப் பாகாகி, பொங்கி மேலே எழுந்து தானாகவே உள்ளே அடங்கும். கொதிச்சு அடங் கியவுடன் பதமா வர்றதுக்கு, ஐம்பது மில்லி தேங்காயெண் ணெய் விடணும். அஞ்சு நிமிஷம் கழிச்சு வெல்லப் பாகு ஆத்தும் மரத் தொட்டியில, கப்பரையைக் கவிழ்க்கணும். நல்லா ஆற வைக்கணும். அதனை மொண்டு அச்சுப் பலகையில் ஊத்தி நிரவி விடணும். பத்து நிமிஷத்துல அச்சு வெல்லம் ரெடி!



கருப்பசாமி

சுப்பிரமணி



எங்க சொந்த ஊரு உடு மலைப்பேட்டை. கார்த்திகை, மார்கழி, தை மாதங்கள்ல அலங்கா நல்லூர்ப் பகுதிகள்ல அச்சு வெல்லம் தயாரிச்சுத் தரு வோம். மாசி, பங்குனி, சித்திரை மாதங்கள்ல பழனி பகுதியில இந்தத் தயாரிப்புல இருப்போம்...''

அச்சு அசலா லாபம் தர்ற தொழில்தான்!

செய்திச் சித்திரம்:

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

கடிதக் கலகம் :

'முதல்வர் கருணாநிதி தகாத வார்த்தைகளைப் பிரயோகம் செய்துவிட்டார். ஜெயலலிதாவின் சேலை, அமைச்சர் துரைமுருகனால் இழுக்கப்பட்டது' என்றது அ.தி.மு.க. தரப்பு.

முதல்வரைப் பார்த்து கிரிமினல் என்றார் ஜெயலலிதா. 'முதல்வரையே தாக்கப் பாய்ந்தனர் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள்' என்றது தி.மு.க. தரப்பு.

எல்லாவற்றுக்கும் பின்னணியில் இருந்தது ஒரு ராஜினாமா கடிதம்! யார் எழுதியது என்பதற்குமுன், அது சிக்கிய இடம்தான் சர்ச்சைக்குப் பெரிய காரணம்.

நடராஜன் (சசிகலா) ஒரு காலத்தில் ஜெயலலிதாவுக்கு உதவியாளராக இருந்தது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அந்தச் சமயத்தில் அ.தி.மு.க. தொண்டர்கள், தாங்கள் கட்டிய தேர்தல் டெபாசிட் தொகையை நடராஜனிடம் திரும்பக் கேட்கப் போக, அது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் விஷயம் காவல்துறைக்குச் சென்றுவிட்டது.

என்ன, ஏது என்று விசாரிக்க நடராஜனின் பெசன்ட் நகர் வீட்டுக்கு வந்த போலீஸார் தஸ்தாவேஜுகளைத் தேடப் போக, ஜாக்பாட்டாக ஒரு கடிதம் கிடைத்தது.

தம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வதாகவும், அரசியலை விட்டு விலகுவதாகவும் அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. எழுத்துக்குச் சொந்தக்காரர் ஜெயலலிதா! விஷயம் வெளியே கசிய, மிகப் பெரிய சர்ச்சை



கடிதத்தால்

உருவாகிவிட்டது. கட்சிக்குள் குழப்பம்; தொண்டர்கள் மத்தியில் சலசலப்பு.

இந்தக் கடிதம் வெளியானது, ஜெயலலிதா உள்ளிட்டோருக்கு ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. அதன் வெளிப்பாடே இந்த சட்டமன்றக் கலவரம் என்று தி.மு.க.வினர் மேடைக்கு மேடை சொல்லிக்கொண்டிருந்தனர்.

எரிப்புக் கலகம் :

கோகிலவாணி, ஹேமலதா, காயத்ரி.

இந்த மூன்று பெயர்களையும் தமிழகம் மறக்கமுடியாது! அரசியல் மேடைகளில் பல முறை உச்சரிக்கப்பட்டவை. முக்கியமாக, ம.தி.மு.க.

ஆர். முத்துக்குமார்

வந்த கலகம்!

பொதுச் செயலாளர் வைகோ, மேடைக்கு மேடை ஆவேசம் பொங்க உச்சரிப்பார்.

02.02.2000 அன்று திடீரென தொலைக் காட்சிகளில் ஃப்ளாஷ் நியூஸ்.

'கொடைக்கானல் ப்ளஸன்ட் ஸ்டே ஹோட்டல் தொடர்பான வழக்கில் ஜெய லலிதா குற்றவாளி என்று தீர்ப்பு.'

தமிழ்நாடு முழுக்க பலத்த அதிர்வுகள். கொதித்தனர் ரத்தத்தின் ரத்தங்கள். எங்கு பார்த்தாலும் ரகளை; வன்முறை. தமிழ் நாடே அதிர்ந்துபோயிருக்க, இவை எது வுமே தெரியாமல், சுற்றுலா போய்விட்டு பேருந்தில் திரும்பிக்கொண்டிருந்தனர், கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவிகள்.

சேலம் - பெங்களூர் நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்தது அந்தப் பேருந்து. அது தர்மபுரி மாவட்டம் இலக்கியம்பட்டி என்ற இடத்தை அடைந்தபோது, கலவரத் தில் ஈடுபட்ட ரத்தங்கள் அந்தப் பேருந்தைத் தடுத்தி நிறுத்தினர். தடுத்தவர்கள் கைகளில் பெட்ரோல் டின்கள். ஓட்டுநர் பதற, மாணவ - மாணவிகளையும் பதற்றம் தொற்றிக் கொண்டது.

சில நிமிடங்கள் கழிந்திருக்கும். மாணவி கள் வந்த பேருந்து, கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. பேருந்து முழுக்க கரும் புகை. உள்ளிருந்து ஒரே மரண ஓலம். உள்ளே இருந்த மாணவர்கள் சிலர், மற்ற மாணவிகளைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். கண்ணாடி ஜன்னல்களை உடைத்துக்கொண்டு சில மாணவிகள் வெளியே குதித்தனர்.

கோகிலாவாணி, காயத்ரி, ஹேமலதா - மூவரும் தீக்குப் பலியாயினர். தவிரவும், பேருந்தில் வந்த மற்றவர்கள் கால்கள் எரிந்து, கைகள் தீய்ந்து, முகம் கருகிக் கிடந் தனர். வெறும் உயிர் மட்டும் மிஞ்சியது.

வழக்கு பதிவானது. சம்பந்தப்பட்டவர் கள் கைதாகினர். சம்பவம் நடந்து ஏழாண்டுகள் கழித்து, தற்போது வழக்கின் தீர்ப்பு வெளியாகியிருக்கிறது. முக்கிய குற்றவாளிகளான ரவீந்திரன், முனியப் பன், நெடுஞ்செழியன் ஆகிய மூவருக்கும் தூக்குத்தண்டனையும் மற்ற இருபத்தைந்து நபர்களுக்கு ஏழாண்டு சிறைத் தண்டனை யும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தையே உலுக்கியெடுத்த சம் பவங்களுள் ஒன்று இது.

கைது கலகம் :

2004ஆம் ஆண்டு தீபாவளியை காஞ்சி பக்தர்கள் அத்தனை சுலபமாக மறந்துவிட முடியாது. அன்றைய தினம் காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரரும் விஜ யேந்திரரும் ஆந்திர மாநிலம் ஹைதரா பாத்தில் உள்ள மெஹபூப் நகரில் தங்கி யிருந்தனர். சென்னையில் இருந்து தனி விமானத்தில் ஹைதராபாத் சென்ற கமாண்டோ டீம், நேராக ஜெயேந்திரர் தங்கியிருக்கும் இடத்துக்குச் சென்றது.

'சங்கரராமன் கொலை வழக்கு தொடர்பாக உங் களைக் கைது செய்கிறோம்!'

கைது செய்த அடுத்த நொடி தமிழகம் முழுக்க காஞ்சிபுரம் பற்றிய பேச்சுதான். குறிப்பாக, முதல்வராக இருந்த ஜெய லலிதாமீது அத்தனை காஞ்சிமட பக்தர் களும் சீறிப் பாய்ந்தனர். தமிழக அரசிய லில் சக்திவாய்ந்த இந்துத்வமுகம் என்று சங்கப் பரிவாரங்களால் நினைத்துப் பார்க் கப்பட்ட ஜெயலலிதா, அவர்களுக்கு ஒரே நாளில் இந்து துரோகியாகிப் போனார்.

இந்து முன்னணி ராம கோபாலன், சோ.ராமசாமி, இல.கணேசன் என்று எல் லோருமே ஜெயலலிதாவுக்கு எதிரணியில். ஆங்காங்கே கண்டனக்கூட்டங்கள்; வசை மழைகள். காஞ்சிமட பக்தர்கள் அத்தனை பேருக்கும் இன்றும் ஜெயலலிதா என்றால் வேப்பங்காய்தான்!

(அடுத்த இதழில் யார்?)

இலந்தை மரம்

பள்ளிக்கூட மணி கடகடவென்று அடித்தது.

மணி சப்தம் காதில் வந்து மோதிய கணமே, மண்டைக்குள் வண்டுகள் குடைவதைப் போல ராமசாமிக்கு வலி எடுத்தது.

நேற்றைக்கே தயார் பண்ணி வைத்திருந்த மூங்கில் குச்சியைச் சுழற்றியபடியே வாசற்படியில் வந்து உக்கிரமாய் நின்றார்.

'இன்றைக்கு வரட்டும் அந்தப் பசங்க! முதுகுத் தோலை உரித்துவிடுகிறேன்...'

பற்களை நறநறவென்று கடித்தார்...

ராமசாமியின் கோபத்துக்குக் காரணமே வாசலில் இருக்கிற அந்தப் பெரிய இலந்தைமரம்தான்.

தடிமனான அடிப்பகுதியோடு, உயரமாய் அடர்த்தியாய் பந்தலிட்டதைப் போல படர்ந்திருந்தது அந்த இலந்தை மரம். கிளைகள் முறிந்து விழுகிற அளவுக்குக் காய்த்திருந்தது.

மரத்துக்குக் கீழேயும் பழங்கள் கொட்டிக்கிடந்தன.

இந்தப் பகுதியில் யார் வீட்டிலும் இதுபோன்ற இலந்தைமரம் இல்லவே இல்லை. மலை இலந்தையோ என்று சந்தேகப்படுகின்ற அளவுக்குப் பெரிக பெரிசாய் இருக்கும். சில இலந்தை மரங்கள் குறிப்பிட்ட சீசனில் மட்டும்தான் காய்க்கும். ஆனால், இந்த மரத்தில் அப்படியில்லை. ஒரு பக்கம் பூவும் இன்னொரு பக்கம் பிஞ்சும். நடுக்கிளைகளில் காயும், மற்ற கிளைகளில் செங்காயும் பழங்களுமாய்க் காட்சியளிக்கும். பள்ளிக்கூடத்தில் மணியடிக்கப்பட்டதும் அவசர அவசரமாய் மத்தியான உணவை விழுங்கிவிட்டு, இங்கே ஓடிவந்துவிடுவார்கள் இலந்தை மரத்தை முற்றுகையிடுவதற்கு.

''டேய்... மேல் கிளையில் பாருடா... லட்டுலட்டாய்ப் பழுத்திருக்கறதை...''

எங்கேதான் போய்ப் பொறுக்கி வருவார்களோ தெரியாது. கூழாங்கற்களும், நாட்டு ஓட்டுச் சில்லுகளும் அவர்களுடைய கைகளில்தான் இருக்கும்.

முதல் வகுப்புப் படிக்கிற பொடியனிலிருந்து, ஐந்தாம் வகுப்புப் பெரிய பையன் வரைக்கும் அவரவர் விருப்பப்படி கையிலிருக்கிற கல்லை வீசியெறிவார்கள்.



சில சமயங்களில் அவர்களுக்குள் இலந்தைப் பழத்தைப் பொறுக்குகிற பிரச்னையில் சண்டைகளும் ஏற்படும். ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டு அழுவார்கள்.

பழத்தைக் குறிவைத்து அவர்கள் வீசுகிற கல் குறி தப்பி, ராமசாமியின் வீட்டுக் கூரையிலும் திண்ணையிலும் வாசலிலும் 'பொத்', 'பொத்' என வந்து விழும். ஒருமுறை அவருடைய நெற்றிப்பொட்டில் வந்து விழுந்து சதை பிய்ந்து இரத்தம்கூட வழிந்திருக்கிறது.



ஆத்திரத்தின் உச்சிக்கே போய்விடுவார் ராமசாமி.

ராமசாமி ஓய்வுபெற்ற அரசு ஊழியர்.

மனைவி விசாலம் இறந்து ரொம்ப வருடங்கள் ஆகிறது.

ஒரு பையன், ஒரு பெண் என இரண்டு பிள்ளைகள்.

பையன் சாஃப்ட்வேர் இன்ஜினியராக அமெரிக்காவில் இருக்கிறான். கல்யாண மானதும் மனைவியோடு அங்கேயே போய் செட்டில் ஆகிவிட்டான். இப்போது அவனுக்கு இரண்டு குழந்தைகள். மகளும் அமெரிக்காவில்தான் இருக்கிறாள் கணவனோடு.



மகேஷ்வரன்

''எங்களோட வந்துடுங்கப்பா...''

அவரை எத்தனையோ முறை கெஞ்சிக் கூப்பிட்டுவிட்டார்கள்.

''எனக்கு இங்கே இருக்கறதுதான் ஒத்து வரும். என் கடைசி மூச்சை இங்கே தான்விடணும்...'' மறுத்துவிட்டார் ராமசாமி.

மகனும், மகளும் அதற்குமேல் அவரை வற்புறுத்தவில்லை. தானே சமைத்து, பசிக்கும்போது சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக்கொள்கிற இந்த வாழ்க்கை அவருக்குப் பழகிவிட்டது.

இலந்தை மரம் பழுத்ததில் இருந்து... செய்தித்தாளைப் புரட்டக்கூட நேரமில்லை. பசங்களை விரட்டத்தான் நேரம் சரியாக இருக்கிறது.

சனி, ஞாயிறு என்றால் பசங்கள் இங்கேயேதான் சுற்றி வருகிறார்கள். பசங்களைக் கூப்பிட்டு...

''சத்தம் போடாம கீழே கெடக்கற பழங்களைப் பொறுக்கிக்கிட்டு ஓடிடுங்க'' என்று பலதடவை அவர் பெருந்தன்மையோடு நடந்துகொண்டாலும் அவர்கள் அதை மதிப்பதில்லை.

ஒரே கூச்சல்தான்...

கீழே கிடக்கற பழங்களைக் கைநிறையப் பொறுக்கிய பிறகும் அவர்கள் திருப்தியடையவில்லை. மறுபடியும் கல்லைத் தான் தேடுகிறார்கள். ராமசாமியின் எரிச்சலையும் கோபத்தையும் தூண்டிவிடுவதே அதுதான்.

''உங்க ஸ்கூல் பசங்களைக் கண்டிச்சு வைக்கக் கூடாதா டீச்சர்?'' பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியையிடமே இரண்டு மூன்று தடவை போய் முறையிட்டுவிட்டார்.

''அந்தப் பக்கம் போகாதீங்கடான்னு, நாங்க எத்தனையோ முறை பசங்ககிட்டே சொல்லியாச்சு. அவனுங்க காதுலயே வாங்கிக்கறதில்லை. சனி, ஞாயிறு லீவு நாட்கள்ல உங்கவீட்டு இலந்தை மரத்துப்

பக்கம் வர்றதுக்கெல்லாம் நாங்க பொறுப்பாக முடியாது.''

தலைமையாசிரியை சொல்கிற பதிலில் ராமசாமிக்குத் திருப்தியே இல்லை.

'இத்தனை சொல்லியும் விரட்டியும் திட்டியும், ஸ்கூல் டீச்சரிடம் போய் முறையிட்டும்கூட பசங்களின் தொல்லை குறையவே மாட்டேங்குதே. பேப்பர்ல ஒரு செய்தியைக்கூட ஒழுங்கா படிக்கவிட மாட்டேனுங்கறாங்களே...

என்றைக்கும் இல்லாமல் அன்று ஆத்திரம் கூடியிருந்தது.

மூங்கில் குச்சியைச் சுழற்றியபடியே இலந்தை மரத்தை நோக்கி ஓடினார்.

''டேய்... தாத்தா வர்றாருடா... அடிக்கப் போறாருடா...''

பசங்கள் தலைதெறிக்க ஓடினார்கள்.

வேலிக்கு அந்தப் பக்கமாய் நின்றிருந்த ஒரு சிறுவன் ராமசாமியைப் பார்த்து கேலியாய்ப் பாட்டு பாடினான்.

''தாத்தா தாத்தா... தை; தாத்தா தலையில நெய்...''

''படவா... பிச்சுப்புடுவேன் பிச்சு...''

''எங்கே பிய்ங்க பார்ப்போம்...''

அவன்... குறும்பாய்ப் பழிப்புக் காட்டி விட்டு ஓடிவிட... அவன் மீதிருந்த ஆத்திரத்தில், கையில் அகப்பட்ட ஒரு சிறுவனை, தாவிப் பிடித்து முதுகில் சுள்ளென்று ஓர் அடி வைத்தார்.

''அம்மா...'' என அவன் வீறிட்டு அலறினான்.

சாயங்காலம் நான்கு மணிக்கு அடி வாங்கியவனுடைய அம்மா, கோபத்தோடு வந்து அவர் வீட்டு வாசலில் நின்று தொண்டை கிழிய கூச்சலிட்டாள்.

''யோவ் பெரியவரே...! மூளைகிளை பிசகிப்போயிடுச்சா உனக்கு? இந்தப் பச்சை மண்ணு... ஏதோ தெரியாத்தனமா ரெண்டு இலந்தைப் பழத்தை வந்து பொறுக்கியிருக்கு. போனா போகுதுன்னு விடாம... உயிர்போறாப்ல இப்படியா அடிக்கறது? கீழே கொட்டி வீணா போறதையும் புள்ளைங்க பொறுக்கக் கூடாது... பின்ன என்னத்துக்கு அந்த மரம்? வெட்டி எறிய வேண்டியதுதானே?''

ராமசாமி மௌனமாக நின்றார்.

அவளோடு பதிலுக்குப் பதில் பேசி பிரச்னையைப் பெரிதாக்க விரும்பாதவராய் அமைதி காத்தார்.

பழத்தைக் குறிவைத்து அவர்கள் வீசுகிற கல், ராமசாமியின் நெற்றியைப் பதம் பார்த்தது!



அவள், கத்திக் களைத்து நகர்ந்தாள்.

'பின்ன என்னத்துக்கு அந்த மரம்? வெட்டி எரிய வேண்டியதுதானே?'

அவன் கோபமாய் உதிர்த்துவிட்டுப் போன வார்த்தை. அவருக்குள் திரும்பத் திரும்ப எதிரொலித்தது.

மறுநாள் அதிகாலையிலேயே தோளில்



கோடாரியோடு இரண்டு ஆட்கள் வந்து விட்டார்கள்..

''ஐயா... இந்த மரத்தையா வெட் டணும்ங்கறீங்க?''

பழங்கள் சிதறிய இலந்தை மரத்தை ஏற இறங்கப் பார்த்துத் தயங்கினார்கள்.

''ஆமா...''

''பழமும் காயும் பிஞ்சும் சிதறியி ருக்கே கொஞ்சநாள் கழிச்சு வெட்ட லாங்க.''

வந்திருந்தவர்களில் ஒருவன், இலந்தை மரத்தின் கிளை ஒன்றை கையினால் உலுக்கிக் கொட்டிய பழங்களைப் பொறுக்கி ருசித்தான்.

''ம்ஹூம்... இப்பவே இதை வெட்டி யாகணும். அப்பத்தான் எனக்கு நிம்மதி...''

''அது பாட்டுக்கு ஒரு ஓரமா நின்னுட்டு போகுது... என்னத்துக்கு வெட்டணும்?'' என்றான் மரம் வெட்டி ஒருவன் -

பழத்தின் ருசிக்கு அவன் மயங்கி யிருந்தான்.

''வெட்ட முடியாதுன்னா போய்க்கிட்டே இருங்க... நான் வேற ஆளுங்களை வெச்சு வெட்டிக்கறேன்...''

ராமசாமி இரைந்தார்.

அப்போது வீட்டுக்குள் தொலைபேசி மணியடித்தது. ரிஸீவரை எடுத்துப் பேசு வதற்காக வேகமாக உள்ளே ஓடினார்.

''ஹலோ...''

''நான்தான்ப்பா பேசுறேன். மணி அடிச்சுக்கிட்டே இருக்கு. ரிஸீவரை எடுக் காம எங்கேப்பா போனீங்க?''

மறுமுனையிலிருந்து அமெரிக்காவில் இருக்கும் அவருடைய மகன் பேசினான்.

''மரம் வெட்டறதுக்கு ஆளுங்க வந்தி ருந்தாங்கப்பா... அவங்களோட பேசிக் கிட்டு வாசல்ல நின்னுக்கிட்டிருந்தேன்!''

பிரச்னையைச் சுருக்கமாய்ச் சொல்லி முடித்தார்.

''எல்லாம் சரிதான்... ஆனா, ஒன்றை மறந்துட்டீங்களே...'' என்றான் மறுமுனை யிலிருந்து.

''என்னடா..?''

''அந்த இலந்தை மரம், நம்ம அம்மா வெச்ச மரம்ப்பா! எனக்கும் தங்கச்சிக்கும் இலந்தைப் பழம்ன்னா ரொம்ப இஷ்டம்னு, எங்கிருந்தோ பிடுங்கி வந்து, வேலி கால்ல அந்தக் கன்றை நட்டுவெச்சு வளர்க்க அம்மா எவ்வளவு சிரமப்பட்டாங்க? எல்லாத்தை யும் எப்படிப்பா மறந்தீங்க? அந்த மரம் அம்மா மாதிரி! அந்த மரத்தைப் பார்க்க றப்ப, எனக்கும் தங்கச்சிக்கும் அம்மா வையே பார்க்கறது போல தோணும். நாங்க அடுத்த மாசம் இந்தியாவுக்கு வர்றதுகூட உங்களையும் அந்த மரத்தையும் பார்க் கணும்ங்கற ஆசையிலதான்.''

அவனது குரல் உடைந்து ஒலித்தது; வெளியே ஓடிவந்தார். மரம் வெட்டிகள் அடிமரத்தை வெறித்துப் பார்த்து வெட்ட அருகே போனார்கள். ''வேணாம்... வெட்ட வேணாம்''

திடீரென்று எழுந்த மென்காற்றில் பழங்களைப் பொலபொலவெனக் கொட்டி யது அந்த இலந்தைமரம்.





காஸ்ட்ரோ இல்லாத

'தற்காலிகமாக விடைபெறுகிறேன்' என்று 2006, ஜூலை 26 அன்றே ஃபிடல் காஸ்ட்ரோ அறிவித்துவிட்டாலும், கியூபாவில் உள்ள ஒருவரும் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. எங்கே போய் விடப்போகிறார் மனிதர்? ஓய்வுதானே வேண்டும்? எடுத்துக்கொள்ளுங்கள். குணமான பிறகு திரும்ப வந்தால் போச்சு.

கியூபர்கள் வளர்ந்த விதம் அப்படி. 1959ல் நடைபெற்ற கியூபப் புரட்சிக்குப் பிறகு, காஸ்ட்ரோவைத் தவிர வேறு எந்தத் தலைவரையும் அவர்கள் அறிந்தது கிடையாது. ஒரு தலைமுறையே அப்படித்தான் அங்கு பிறந்து வளர்ந்திருக்கிறது. கியூபாவின் நகமும் சதையும் ரத்தமும் ஆன்மாவுமாக ஃபிடலை அவர்கள் கருதுகிறார்கள்.

காஸ்ட்ரோ அவர்களைத் தயார்ப்படுத்த ஆரம்பித்தார். 'தோழர்களே, என் உடல் நிலை மிகவும் அபாயகரமாக உள்ளது. பொறுப்புகளை ரால் காஸ்ட்ரோவிடம் அளிக்கிறேன்.' கொஞ்சம் சோகத்துடன் இதை ஏற்றுக்கொண்டார்கள் கியூபர்கள். யார்? நம் ரால்தானே!

பிறகு, ஓர் அறிவிப்பு. 'எதற்கும் தயாராக இருங்கள்.' சீறிவிட்டார்கள் கியூபர்கள்.



'எதற்கும் என்றால்? என்ன பேசிக்கொண்டிருக்கிறீர்கள் ஃபிடல்? நீங்கள் இல்லாத கியூபாவை எங்களால் கற்பனைகூட செய்து பார்க்க முடியாது.'

இந்த ஒரு விஷயத்தில் மட்டும் காஸ்ட்ரோவுக்கு வெற்றி கிடைக்கவில்லை. அவரால் மக்களைச் சமாதானப்படுத்த முடியவில்லை; தம்மளவில் அவர் தயாராக இருந்தார். அதிபருக்கான தேர்தல் நாள் நெருங்கும் சமயம் பார்த்து, சென்ற வாரம் திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். 'நான் இந்தத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை.'

சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலில் ரால் காஸ்ட்ரோ வெற்றிபெற்று அதிபர் பதவி ஏற்றிருக்கிறார். நாற்பது ஆண்டுகள் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். கியூபப் புரட்சியின்போது காஸ்ட்ரோவுடன் சேர்ந்து துப்பாக்கி தூக்கியவர்.

காஸ்ட்ரோ பதவியைத் துறந்தபோது ஜார்ஜ் புஷ் ஆப்பிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். எதெற்கென்று யாருக்கும் தெரியாது. விஷயம் கேள்விப்பட்டதும் அப்படி ஒரு குதூகலம். 'கியூபாவுக்கு உதவ நான் தயாராக இருக்கிறேன். கியூபர்கள் சுதந்திரக் காற்றை அனுபவிக்க, என்னால் ஆன அத்தனை உபகாரங்களையும் செய்வேன்.' உறுதிமொழி அளித்திருக்கிறார்.

எனில், இத்தனை காலம் கியூபர்கள் சுவாசக் கோளாறுடன் வலம் வந்தார்களா? ஹிட்லரிடம் வாக்கப்பட்ட யூதர்கள்போல் அடங்கி, ஒடுங்கி தினம் தினம் செத்துப் பிழைத்துக்கொண்டிருந்தார்களா? என்னதான் நினைத்துக்கொண்டிருக்கிறார் புஷ்?


என்ன மாதிரியான உதவிகளை புஷ்

மருதன்



ஷால் செய்ய முடியும்? ஒன்றே ஒன்றுதான். பாக் தாத்தில் செய் ததை ஹவானாவிலும் செய்ய முடியும்!

இன்னொன்றும் சொல்லியிருக்கிறார். சிறைச்சாலையில் கிடந்து நாசமாகிக்கொண்டிருக்கும் கைதிகளுக்கு, இனி புது வாழ்வு கிடைக்கும். அவர் சொல்ல வருவது என்ன



கியூபா!

வென்றால், காஸ்ட்ரோ என்னும் கொடுங் கோலன் பிசாசுபோல் கண்டபடி எல்லோரையும் தூக்கி 'உள்ளே' போட்டுவிடுகிறார். அவர்கள் இனி சாந்தம் அடையலாம்.

உண்மைதான். உலகின் மிகக் கொடூரமான சிறைச்சாலை கியூபாவில்தான் உள்ளது. மனித குலம் கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத அட்டூழியங்கள் அங்கே நடைபெற்று கொண்டிருக்கின்றன. இந்த நிமிடம் வரை. ஆனால், அந்தச் சிறைச்சாலையை நிர்வகிப்பது காஸ்ட்ரோவின் அரசாங்கம் அல்ல; அமெரிக்க அரசாங்கம். அந்தச் சிறைச்சாலையின் பெயர் குவந்தனாமோ பே. நிச்சயம் ஒழித்தழிக்கப்பட வேண்டிய கொடுமைக்கூடம் என்று ஐ.நா. பரிந்துரைத்திருக்கும் பகுதி.

புஷ் வேண்டுமானால் அழைத்துப் பார்க்கட்டும். 'கியூபர்களே, என்னிடத்தில் வாருங்கள். உங்களைக் கட்டிப் போட்டிருக்கும் சங்கிலிகளை அறுத்துக்கொண்டு வாருங்கள். நான் உங்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறேன். உங்களுக்காக ஒரு பொன்னுலகம் காத்துக்கொண்டிருக்கின்றது. வருவார்களா? நிச்சயம் மாட்டார்கள். அமெரிக்காவில் உள்ள பணக்காரக் குழந்தைகள் மட்டுமே படிக்கக்கூடிய, உயர் ரக பள்ளிகளில் கிடைக்கும் கல்வியின் தரம், கியூபாவின் அரசாங்கப் பள்ளியில் கிடைக்கும் கல்வியின் தரத்துக்கு ஈடானது! இலவச மருத்துவம். இலவச கல்வி. சுகாதாரம். மக்கள் நலப் பணிகள். வலுவான தலைமை.

காஸ்ட்ரோ அமைத்திருக்கும் அடித்தளம் உறுதியானது. அந்த அடித்தளத்தில்தான் கியூபா கம்பீரமாக நிமிர்ந்து நின்றுகொண்டிருக்கிறது. காஸ்ட்ரோ பதவியில் இல்லாது போனாலும், அவர் வழிகாட்டுதலுடன் கியூபா துடிதுடிப்புடன் உயிர்த்திருக்கும். ●

18

''சிவராத்திரி என்னிக்கு வர்றது? கொஞ்சம் பஞ்சாங்கத்தைப் பார்த்துச் சொல்லேன்'' என்று மனைவி விஜயாவிடம் கேட்டுக் கொண்டேன்.

அமரர் கல்கி, பிறந்த குக்கிராமமான புத்தமங்கலத்தில், தெருவின் இரு முனைகளிலும் சிவன் கோயில் ஒன்றும், பெருமாள் கோயில் ஒன்றும்.சின்னச் சின்னதாக உண்டு. சிவன் கோயிலை ஒட்டியும், பெருமாள் கோயிலை நோக்கியவாறும் ஒரு குட்டி அனுமார் கோயிலும் இருக்கிறது. வாலில் மணி கட்டிக்கொண்டு அதை உயர்த்தி ஆட்டியவாறு ஆஞ்சனேயர் பெருமாளை வழிபடும் நிலையில் இருக்கிறார். வைகுண்ட ஏகாதசி அன்று, பெருமாள் கோயிலிலும், சிவராத்திரியன்று சிவன் கோயிலிலும் சிறப்பு ஆராதனைகளுக்கு 'கல்கி' உறவினர்களும், நண்பர்

கல்கி ராஜேந்திரன்

களும் ஏற்பாடு செய்வோம். எனவேதான், பிப்ரவரி தொடங்கியதும் சிவராத்திரி பற்றிய சிந்தனை.

பஞ்சாங்கத்தை எடுத்து வந்து பிரித்த விஜயா, ஏதோ நினைவுகளில் ஆழ்ந்து போனவளாக அமர்ந்திருந்தாள். கொஞ்ச நேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு, ''என்ன யோசனை'' என்று கேட்டேன்.

திடுக்கிட்டு என்னைப் பார்த்தவள், நிகழ்காலத்துக்குத் திரும்பியவளாக, ''ஒன்றுமில்லை, சிவராத்திரி என்றதும் மகாபெரியவாள் ஞாபகத்தில் இருந்து விட்டேன்'' என்றாள்.

''ஆமாமாம், சிவராத்திரி அன்று அப்பாவும் அம்மாவும் அநேகமாக காஞ்சிபுரத்தில்தானே இருப்பார்கள்! ஒருசில தடவைகளில் அவர்களோடு நீயும் போயிருக்கிறாயே'' என்றேன்.

''பெரியவாள், சந்திரமௌளீசுவரருக்குப் பூஜை பண்ணினதைப் பார்க்கக் கிடைச்சது ஒரு பாக்கியம்; பூஜையின் போது, அம்மாவுக்கு உதவியாக பின்பாட்டுப் பாடக் கிடைச்சது இன்னொரு பாக்கியம்'' என்றாள் விஜயா. பூஜை எத்தனை அழகா இருக்கும்! வில்வதளங்களாலும் தும்பைப் பூக்களாலும், விருட்சி, மல்லி, முல்லை மலர்களாலும் அர்ச்சனை பண்ணுவா. முடியற சமயத்துல பார்த்தால், படிப்படியா பல வர்ணங்களில் திட்ட

* பெரியவாளின் ஆசியும்...
இசையரசியின் பக்தியும்...



மிட்டு பூ அலங்காரம் பண்ணினது மாதிரி இருக்கும்!

''அர்ச்சனை ஆரம்பிச்சுக் கொஞ்ச நேரமான பிறகு, இலேசாகத் திரும்பி அருள்பொங்கும் கண்களால் பார்ப் பார். பெரியவாளுக்குக் கைங்கர்யம் பண்றவர்கள்ல ஒருத்தர், 'பாடச் சொல்லி ஆக்ஞை' என்பார். உடனே அம்மா பாடுவா...''

''என்னென்ன பாட்டு...?''

''கஞ்சதளாயதாக்ஷி; க்ஷீரசாகரசயன (மாயாமாளவகௌளை); நாகேந்திரஹாராய; சம்போ மகாதேவா...''

''பௌளியா? பந்துவராளியா?''

தில்தான் பெரியவா, 'சம்போ மகாதேவா தெரியுமோ'ன்னு ராதாவைக் கேட்டிருக் கார். 'பௌளியா, பந்துவராளியா'ன்னு ராதா சந்தேகம் எழுப்ப, 'பந்துவராளி'ன்னு பெரியவா சொல்லியிருக்கா. ராதாவும் அந்தப் பாட்டைப் பாடி பெரியவா அனுக்கிரஹத்தைப் பெற்றாள்.

இந்தச் சம்பவத்தை ராதா, சென்னை திரும்பிய பிறகு அப்பா - அம்மாவிடம் சொல்ல, அப்போது முதல் பந்துவராளியில் அமைந்த சம்போமகாதேவா பாட்டை, (தியாகையர் கிருதி) பெரியவா முன்னிலை யில் பாடறதை அம்மா வழக்கமாகக் கொண்டாள்.''

''பாட்டின் பொருளுடன் இசை இழையும்போது ஒருவித அத்வைத நிலை; நல்ல பாட்டைக் கேட்கும்போது, நம்மை மறந்து அதில் ஒன்றுவது இன்னொருவித

மகா பெரியவா கேட்ட ஒன்ஸ்மோர்!



* 'காற்றினிலே வரும் கீதம்'

விஜயா சிரித்தாள். ''இதே கேள்வியை ராதா (ராதா விசுவநாதன்) ஒரு சமயம் பெரியவாளிடமே கேட்டா!'' என்றாள்.

''அதென்ன விஷயம்?''

''ஒரு சமயம் ராதா, ஒரு பிரார்த்தனை நிமித்தம் காஞ்சிபுரத்திலேயே மூணு நாள் தங்கி, பெரியவா சந்நிதியிலேயே பெரும் பொழுதைக் கழித்தாள். அந்தச் சந்தர்ப்பத்

அத்வைத நிலை! பெரியவாளுக்கு, சங்கீதத் தில் இத்தனை ஈடுபாடு இருந்ததில் வியப் பில்லை.''

''ஈடுபாடுன்னா கொஞ்ச நஞ்சமில்லை; ஒன்ஸ்மோர் கேட்குமளவுக்கு ஒரு ஈடுபாடு!'' என்றாள் விஜயா.

''அதென்ன சமாச்சாரம்? சொல்லு, சொல்லு!'' என்று தூண்டினேன்.

''மகாபெரியவாளிட மிருந்து பூஜைகளையெல் லாம் புதுப்பெரியவா ஏற்றுக் கொண்ட சமயம் அது. நாங்க போன போது புதுப்பெரியவா பூஜை பண்ணிண்டி ருந்தா. மகா பெரியவா தரிசனம் தரலை. பாடச் சொல்லி உத்தரவு கிடைத்தபோது, மடத்தில் கைங்கர்யம் பண்ணிண்டிருந்த பலருள் ஒருவர், '' 'ஸ்ரீ ஷண்முக ஜனக' பாடலாமே; மகாபெரியவாளுக்கு ரொம்பப் பிடிச்ச பாட்டாச்சே'' என்று யோசனை சொன்னார். அப்படியே பாடினோம். தீபா ராதனை முடிஞ்சு புறப்பட்டுவிட்டோம். அப்போ, ''உத்தரவாகிறது, உத்தரவாகிறது'' என்று சொல்லிக்கொண்டே ஒருவர் ஓடி வந்தார். ''ஸ்ரீ ஷண்முக ஜனக பாடலை இன்னொரு தரம் பாடச் சொல்லி மகா பெரியவா ஆக்ஞை'' என்றார். ஆச்சர்யத் துடன் எல்லோரும் திரும்பிப் போனோம். சங்கராபரண ராகத்தில் அமைந்த அந்தப் பாட்டை அம்மா நின்றபடியே பாடினா. சற்று மறைவாக இருந்து மகாபெரியவா கேட்பதை உணர முடிந்தது. அம்மா பாடறச்சே, மெய்சிலிர்க்கும் அனுபவம் பலருக்கு ஏற்படும். ஆனா, இது அம் மாவுக்கே மெய்சிலிர்க்கும் அனுபவம்! எனக்கோ ஒரே நடுக்கம். எப்படி அம் மாவுக்கு உதவியா பாடினேன்; எப்படி சுருதி பெட்டியை நழுவவிடாமல் சமாளித் தேன்னு எனக்கே புரியலை!''

''அதுவும் பெரியவா அனுக்கிரஹம் தான். அதிருக்கட்டும், மறுபடி பாடச் சொல்லிக் கேட்கும்படி அந்தப் பாட்டில் என்ன விசேஷம்?''

''ஷண்மத ஸ்தாபகர் ஆதிசங்கரர் தவிர, ஸ்ரீமன் மகாதேவேந்திர சரஸ்வதி என்ப வரைப் பற்றியும், அந்தப் பாட்டில் ஒரு குறிப்பு வருது. ஒருவேளை அதனால் இருக்கலாம். பரமாச்சார்யாள் மனசு நமக் கெப்படித் தெரியும்?'' என்றாள் விஜயா.

பாமரர் - பேரறிஞர்; துறவி - கிருகஸ்தர்; அரசியல்வாதி - தொழிலதிபர்; குழந்தைகள் - பெரியவர்கள் என்று எல் லோரையும் கட்டிப்போடும் ஒரு தெய்விக சக்தி எம்.எஸ். அவர்களின் இசைக்கு இருந் தது. அந்த சக்திதான், "Who am I a mere Prime Minister before the Queen of Songs" என்று நேருஜியைப் பேச வைத் தது.

ஒரு சமயம் ஏ.எம்.எம். அருணாசலம் (முருகப்பா குரூப்) எம்.எஸ். அம்மாவின் கச்சேரியில் முதல் வரிசையில் சதாசிவத் துக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தார். வழக் கம்போல ஏதோ நல்ல காரியத்துக்காக நிதி உதவிக் கச்சேரி. ஐயாயிரம் ரூபாய்

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா, "பங்காரு! என்பது வயசு பாட்டா இது! பூலோகத்துக்கு வைகுண்டத்தையே கொண்டு வந்துட்டியே! என்றார்."




நன்கொடை அளித்துவிட்டு வந்திருந்தார் ஏ.எம்.எம். நான், அவர்களுக்குப் பின்னால் இரண்டாவது வரிசையில் உட்கார்ந்திருந் தேன். சங்கராபரணம் ராக ஆலாபனை முடிந்ததும் ஏ.எம்.எம்., ''சதாசிவம்! நான் கொடுத்த ஐயாயிரம் ரூபாய் இந்த ஒரு ராக ஆலாபனைக்கே சரியாப் போச்சு!'' என்றார். டிக்கெட், நன்கொடை என்றெல் லாம் இருந்தாலும், உன்னதமான கலை யைப் பணத்தைக் கொண்டு மதிப்பிட முடியாது என்பதை உணர்ந்திருந்த ரசிகர் அவர்.

இந்த நிகழ்ச்சியை நான் விவரித்ததும்

விஜயா இன்னொரு சம்பவத்தை நினைவு கூர்ந்தாள்.

"ஹிந்தி மீரா திரைப்படத்துக்காக பம்பாயில் ரிகார்டிங் நடந்துகொண்டிருந்தது. அதே ஸ்டுடியோவில் அம்மாவுக்குப் பிறகு லதாமங்கேஷ்கரின் ரிகார்டிங் நடக்க இருந்தது. லதா, கொஞ்சம் முன்னதாகவே வந்துவிட்டார். எம்.எஸ். ரிகார்டிங் நடந்து கொண்டிருப்பது தெரிந்ததும், 'நானும் கேட்கிறேன்' என்று சொல்லி ரிகார்டிங் அறையில் அமர்ந்துகொண்டார். அம்மாவின் ரிகார்டிங் முடிந்ததும், ''இப்போ என் மனசெல்லாம் எம்.எஸ். அவர்களின் இசையிலேயே லயிச்சிருக்கு. என்னால் இப்பப் பாட முடியாது. நான் நாளைக்கு வர்றேன்'' என்று சொல்லிகிளம்பிப் போய் விட்டார். அப்புறம் ஸவுண்ட் ரிகார்டிங் இன்ஜினீயர் சொல்லித்தான் அம்மாவுக்கு லதா வந்திருந்த விவரமே தெரிய வந்தது!''



❋ ரசிகர்கள் இதயத்தில் இசையரசி...

''பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா முன்னிலையிலும் அம்மா கச்சேரி பண்ணியிருக்காளே'' என்றேன் நான், விஜயாவின் நினைவலைகளைத் தூண்டும் விதமாக.

''பல சமயம் பாடியிருக்கா. கடைசியா அவர் பிறந்த நாளன்று பாடிய கச்சேரியில் காம்போதியில், 'ஓ ரங்கசாயி' இடம்பெற்றது. அதில், 'பூலோக வைகுண்டம் இதியனி' என்ற வரியில் நிரவல் பண்ணுவா அம்மா. கச்சேரியெல்லாம் முடிந்து கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, மறுபடியும் வந்தார் பாபா. ''பங்காரு! என்பது வயசுப் பாட்டா இது! பூலோகத்துக்கு வைகுண்டத்தையே கொண்டு வந்துட்டியே!'' என்றார்.

இந்த நிகழ்ச்சியை விவரித்த விஜயா, ''இப்ப நினைச்சுப் பார்க்கும்போது இதெல்லாம் பெரிய ஆச்சர்யமாய்த் தோணலை'' என்றாள்.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்று கேட்டேன்.

''பரமாச்சார்யாள் ஆனாலும் சரி, பாபாவானாலும் சரி, 'கல்கி', டி.கே.சி., நேருஜி, லதா மங்கேஷ்கர் என்று யாரானாலும் அவர்களுக்கு எம்.எஸ்.ஸைத் தெரியும்; அவருடைய இசையின் தெய்விகத் தன்மை தெரியும்; கர்நாடக சங்கீதத்தை உணர்ந்து ரசிக்கவும் தெரியும். ஆனால், இவற்றில் எதையுமே அறியாத ஒருத்தி, அம்மாவின் கச்சேரியைக் கேட்டு நெகிழ்ந்தாள்; கச்சேரி முடியும் வரை காத்திருக்கமுடியாமல் நெருங்கி மலர்ச்செண்டு ஒன்றை அளித்தாள். நெஞ்சில் கைவைத்து, நாத்தழுதழுக்க, ருஷ்ய மொழியில் ஏதோ சொல்லிப் புரியவைத்தாள் என்றால் அதுவல்லவா ஆச்சர்யம்!''

''யார் அந்தப் பெண்மணி?''

''மாஸ்கோவில் இந்தியக் கலைவிழா நடந்து முடிந்த பிறகு, ஒரு பல்கலைக் கழகத்தில் அம்மா மறுபடி கச்சேரி செய்த போது, அதைக் கேட்க வந்திருந்த ஒரு சராசரி ருஷ்யக் குடும்பத் தலைவி'' என்றாள் விஜயா. ''கச்சேரி முடிந்த பிறகு ஒரு standing ovation இருந்ததே, அது அந்தக் குடும்பத் தலைவிக்கும் சேர்த்துக் கொடுத்த பாராட்டாக எனக்குத் தோன்றியது!''

(பேசுவோம்)

மேஷம் : உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். சொத்துகள் வந்து சேரும். ஆடை, ஆபரணப் பொருட்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வந்தால் நற்பலன் மிகுதியாகும்.

கடகம் : எதிலும் அவசரம் காட்டாமல் இருப்பது நல்லது. வாக்குவாதம் தவிர்க்கவும். இல்லற வாழ்வில் விட்டுக்கொடுத்துப் போவது நற்பலனை அளிக்கும். வண்டி, வாகனங்களில் செல்லும்போது உஷார். வியாபாரத்தில் சற்று மந்தமான சூழ்நிலை காணப்படும். ராகு / கேது /

02.03.08 முதல் 08.03.08 வரை



ரிஷபம் : எந்தக் காரியத்திலும் டென்ஷன் நிறைந்து இருக்கும். பொறுப்பான பணியில் உள்ளவர்கள் உஷார். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வர தீமைகள் விலகி நற்பலன் கிட்டும்.

மிதுனம் : மிகவும் நற்பலன் நிறைந்து இருக்கும். சுப காரியம் கைகூடும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. வேலையில் இடமாற்றம் ஏற்படும். பணி உயர்வு கிட்டும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பரிகாரம் தேவை இல்லை.

குரு / சனி வழிபாடு செய்து வருதல் கெடுபலனைப் போக்கி, நற்பலனை உண்டாக்கும்.

சிம்மம் : சுபமான செய்திகள் தேடி வரும். பணக் கஷ்டம் இருக்காது. வேலையில் உயர்வு கிட்டும். திருமணக் காரியம் கைகூடும். மகப்பேறு பாக்கியம் ஏற்படும். வழக்கு வெற்றி அளிக்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வந்தால் நற்பலன் கிட்டும்.

கன்னி : வெளிநாட்டு அழைப்பு வந்து சேரும். வழக்கு வெற்றி அளிக்கும். உத்தியோகத்தில் நல்ல மாறுதல் ஏற்படும்.

செலவுகள் சுபமானதாக இருக்கும். பணக் கஷ்டம் விலகும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். கடன் தொல்லை தீரும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிட்டும். குரு /சனி வழிபாடு செய்து வருதல் கஷ்டங் களுக்கு விடுதலை கிடைக்கும்.

துலாம் : பூமி மூலம் ஆதாயம் கிட்டும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். வழக்கு, வியாபாரம் வெற்றி அளிக்கும். பணக் கஷ்டம் இருக்காது. வேலையில் நற்பெயர் ஏற்படும். வராத நிலுவைகள் வந்து சேரும். குரு / ராகு / கேது வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

விருச்சிகம் : வாக்கு, நாணயம் காப் பாற்றப்படும். ஆப ரணப் பொருட்கள் வாங்குவீர்கள். வேலையில் இட மாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதி கரிக்கும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக் கும். நண்பர், உறவினர்கள் மூலம் நன்மை உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். கல்வி வளம் மேலோங்கும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

தனுசு : செலவுகள் சுபமானதாக இருக் கும். நீண்ட கால கடன் தொல்லை தீரும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். சத்ரு தொல்லை விலகும். வழக்கு வெற்றி அளிக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பணத் தட்டுப்பாடு இருக்காது. குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். குரு வழிபாடு செய்து வர, நற்பலன் உண்டாகும்.

மகரம் : எதிலும் நிதானித்துச் செயல் படுவது நல்லது. எதிலும் விட்டுக் கொடுத்து, ஊருடன் ஒத்துப்போவது நற் பலனை அளிக்கும். கொடுக்கல், வாங் கலில் உஷார். உணவுக் கட்டுப்பாடு அவ சியம். தடை விலகி, திருமணம் கைகூடும். மறைமுக எதிர்ப்பு, தொல்லைகள் இருக் கும். வழக்கு, வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். சனி / ராகு / கேது / குரு வழி பட்டு வருதல் நற்பலனை அளிக்கும்.

கும்பம் : ரொம்பவும் மேன்மையான வாரம். வேலையில் நற்பெயர் ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். புதிய கடன் கிடைக்கும். நவீன பொருட் சேர்க்கை சேரும். குழந்தையால் மன மகிழ்ச்சி ஏற்படும். தொழிற்துறை அபி விருத்தி ஏற்படும். ராகு / கேது / சனி வழிபாடு செய்து வருதல் நலம் உண்டாகும்.

மீனம் : எதிர்ப்புகள் விலகும். வழக்கு வெற்றி அளிக்கும். இல்லற வாழ்வு நன் றாக இருக்கும். பண வருவாய் பெருகும். வெளியூர் பிரயாணம் வந்து சேரும். மேல்நாட்டு மனிதர்களால் அனுகூலம் ஏற்படும். உடல் நிலை நன்றாக இருக்கும். வேலையில் உயர்வு ஏற்படும். கடன் சுமை தீரும். வியாபாரத்தில் நல்ல அனுகூலம் ஏற்படும். குரு வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

தங்கம் விலை என்னிக்குக் குறையும்? எவ்வளவு குறையும்..? அதைச் சொல்லுங்களேன் பரத்வாஜ் ஸார்...!

நடக்குமென்பார்; நடக்கும்!

23. அருவிப் பாதை

உதயசூரியனின் பொற்கிரணங்களால், கொல்லி மலைச்சாரல் அழகு பெற்று விளங்கிற்று. பாறைகள் மீதும் மரங்கள் மீதும் ஒரு பக்கத்தில் சூரிய வெளிச்சம் விழுவதும், இன்னொரு பக்கத்தில் அவற்றின் இருண்ட நிழல் நீண்டு பரந்து கிடப்பதும் ஒரு விசித்திரமான காட்சியாயிருந்தது. வானவெளியெங்கும் எண்ணிறைந்த பட்சிகளின் கலகல த்வனி பரவி ஒலித்தது. அதனுடன் மலையிலிருந்து துள்ளிக் குதித்து ஆடிப்பாடி வந்த, அருவியின் இனிய ஒலியும் சேர்ந்து வெகு மனோகரமாயிருந்தது.

இந்த நேரத்தில் அந்த மலைச்சாரலுக்கு அருகில் இரண்டு உயர்ஜாதி வெண்புரவிகள் வந்துகொண்டிருந்தன. அவற்றின் மீது ஆரோகணித்திருந்தவர்கள், நமக்கு ஏற்கெனவே பழக்க முள்ளவர்களான சிவனடியாரும் பொன்னனும்தான்.

அவர்கள் அந்தக் காட்டாற்றின் கரையோரமாகவே வந்துகொண்டிருந்தார்கள்; பேசிக்கொண்டு வந்தார்கள்.

அமரர் கல்கி

சிவனடியார், சற்றுத் தூரத்தில் மொட்டையாக நின்ற பாறையைச் சுட்டிக்காட்டி, "பொன்னா! அந்தப் பாறையைப் பார்! அதைப் பார்த்தால் உனக்கு என்ன தோன்றுகிறது?" என்று கேட்டார்.

"ஒன்றும் தோன்றவில்லை சுவாமி! மொட்டைப் பாறை என்று தோன்றுகிறது; அவ்வளவுதான்."

"எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா? காலை மடித்துப் படுத்துத் தலையைத் தூக்கிக்கொண்டிருக்கும் நந்தி பகவானைப் போல் தோன்றுகிறது. இப்போது அந்தப் பாறையின் நிழலைப் பார்!"

பொன்னன் பார்த்தான். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "சுவாமி, நந்தி



மாதிரியே இருக்கிறதே!" என்றான்.

"சாதாரணக் கண்ணுக்கும், சிற்பியின் கண்ணுக்கும் இதுதான் வித்தியாசம். பொன்னா! சிற்பி, ஒரு பாறையைப் பார்த்தானானால் அதில் ஒரு யானையையோ, சிங்கத்தையோ அல்லது ஒரு தெய்வீக வடிவத்தையோ காண்கிறான். இன்னின்ன மாதிரி வேலை செய்தால், அது அத்தகைய உருவத்தை அடையும் என்று சிற்பியின்

பார்த்திபன் கனவு

மனதில் உடனே பட்டுவிடுகிறது...''

பொன்னன் குறுக்கிட்டு, ''சுவாமி! தாங்கள்...'' என்றான்.

''ஆமாம்! நான் ஒரு சிற்பிதான்! உலகத்தில் வேறு எந்த வேலையைக் காட்டிலும், சிற்ப வேலையிலேதான் எனக்குப் பிரியம் அதிகம். இப்போது நான் எடுத்துக்கொண்டிருக்கும் வேலையை மட்டும் பூர்த்திசெய்து விட்டேனானால்... இருக்கட்டும், பொன்னா! மாமல்லபுரம் நீ பார்த்திருக்கிறாயா?'' என்று சுவாமியார் கேட்டார்.

''ஒரே ஒரு தடவை பார்த்திருக்கிறேன் சுவாமி!''

''அதைப் பார்த்தபோது உனக்கு என்ன தோன்றியது?''

''சொப்பன லோகத்தில் இருப்பதாகத் தான் தோன்றியது...''

''ஆனால், அந்தச் சிற்பங்கள் உண்மையில் சொப்பனமில்லை! நாம் உயிரோடிருப்பதைவிட அதிக நிஜம். கல்லிலே செதுக்கிய அச்சிற்ப வடிவங்கள், நம்முடைய காலமெல்லாம் ஆன பிறகு, எத்தனையோ காலம் அழியாமல் இருக்கப் போகின்றன; நமக்கு ஆயிரம் வருஷங்களுக்குப் பின்னால் வரும் சந்ததிகள் பார்த்து மகிழப் போகிறார்கள். ஆகா! ஒரு காலத்தில், பொன்னா! மாமல்லபுரம் மாதிரியே, இந்த தமிழகம் முழுவதையும் ஆக்கவேண்டுமென்று நான் கனவு கண்டு கொண்டிருந்தேன்...''

''என்ன, தாங்களும் கனவு கண்டீர்களா?'' என்றான் பொன்னன்.

''ஆமாம்; உங்கள் பார்த்திப மகாராஜா மட்டும்தான் கனவு கண்டார் என்று நினைக்கிறாயா? அவர் சோழ நாட்டின் பெருமையைப் பற்றி மட்டுமே கனவு கண்டார். நானோ தமிழகத்தின் பெருமையைக் குறித்துக் கனவு கண்டுகொண்டிருந்தேன். பார், பொன்னா! புண்ணிய பூமியாகிய இந்த பாரத கண்டம் வடநாடு, தென்னாடு என்று பிரிவுபட்டிருக்கிறது. கதையிலும், காவியத்திலும், இதிகாசத்திலும் வடநாடுதான் ஆதிகாலத்திலிருந்து பெயர் பெற்று விளங்குகிறது. வடநாட்டு மன்னர்களின் பெயர்கள்தான் பிரசித்தியடைந்திருக்கின்றன. பாடலிபுரத்து சந்திரகுப்தன் என்ன, அசோக சக்கரவர்த்தி என்ன, விக்கிரமாதித்தன் என்ன! இவர்களுக்குச் சமமாகப் புகழ்பெற்ற தென்னாட்டு ராஜா யார் இருந்திருக்கிறார்கள்? நம்முடைய காலத்திலேதான், வடநாட்டு ஹர்ஷ சக்கரவர்த்தியின் புகழ், உலகெல்லாம் பரவியிருப்பதுபோல் மகேந்திர பல்லவரின் புகழ் பரவியிருந்தது என்று சொல்ல முடியுமா? தென்னாடு இவ்விதம் பின்னடைந்திருப்பதன் காரணம் என்ன? இந்தத் தென்னாடானது ஆதிகாலம் முதல் சோழ நாடு, சேர நாடு, பாண்டிய நாடு என்று பிரிந்து கிடந்ததுதான் காரணம்.

பெரிய இராஜ்யம் இல்லாவிட்டால், பெரிய காரியங்களைச் சாதிக்க முடியாது. பெரிய காரியங்களைச் சாதிக்காமல் பெரிய புகழ்பெறவும் முடியாது. வடநாட்டில் ஹர்ஷ சக்கரவர்த்தியின் இராஜ்யமானது, நீளத்திலும் அகலத்திலும் இருநூறு காத தூரம் உள்ளதாயிருக்கிறது. இந்தத் தென்

னாட்டிலோ பத்துக் காதம் போவதற்குள்ளாக மூன்று இராஜ்யத்தை நாம் தாண்ட வேண்டியிருக்கிறது. இந்த நிலைமை உதவாது. தமிழகம் முழுவதும் ஒரே மகாராஜ்யமாயிருக்க வேண்டும். தமிழகத்தின் புகழ், உலகெல்லாம் பரவ வேண்டும் என்று மகேந்திர பல்லவர் ஆசைப்பட்டார். நானும் அந்த மாதிரி கனவுதான் கண்டுகொண்டிருந்தேன். என் வாழ்நாளில் அந்தக் கனவு நிறைவேறலாம் என்று ஆசையுடன் நம்பியிருந்தேன். ஆனால், அந்த ஆகாசக் கோட்டையானது ஒரே ஒரு மனுஷனின் சுத்த வீரத்துக்கு முன்னால் இடிந்து, தகர்ந்து போய்விட்டது.''

''சுவாமி! யாரைச் சொல்லுகிறீர்கள்?'' என்றான் பொன்னன்.

''எல்லாம் உங்கள் பார்த்திப மகாராஜாவைத்தான்! ஆகா! அந்த வெண்ணாற்றங்கரைப் போர்க்களம் இப்போதுகூட என் மனக்கண் முன்னால் நிற்கிறது. என்ன யுத்தம்! என்ன யுத்தம்! வெண்ணாறு அன்று இரத்த ஆறாக அல்லவா ஓடிற்று? பூரண சந்திரன் வெண்ணிலாவைப் பொழிந்த அந்த இரவிலே, அந்தப் போர்க்களந்தான் எவ்வளவு பயங்கரமாயிருந்தது? உறையூரிலிருந்து கிளம்பி வந்த பத்தா





யிரம் வீரர்களில், திரும்பிப் போய்ச் செய்தி சொல்வதற்கு ஒருவன் கூட மிஞ்சவில்லை என்றால், அந்தப் போர் எப்படி இருந்திருக்க வேண்டும் என்று பார்த்துக்கொள்!'' என்று சுவாமியார் ஆவேசத்துடன் பேசினார்!

''ஐயோ! அந்தப் பத்தாயிரம் வீரர்களில் ஒருவனாயிருக்க எனக்குக் கொடுத்து வைக்கவில்லையே!'' என்றான் பொன்னன்.

''போரில் உயிரை விடுவதற்கு வீரம் வேண்டியதுதான், பொன்னா! ஆனால், உயிரோடிருந்து உறுதி குலையாமல் இருப்பதற்கு அதைக் காட்டிலும் அதிக தீரம் வேண்டும். அந்தத் தீரம் உன்னிடம் இருக்கிறது! உன்னைக் காட்டிலும் அதிகமாக வள்ளியிடம் இருக்கிறது; நீங்களும் பாக்கியசாலிகள்தான்!'' என்றார் சுவாமியார்.

''சுவாமி! வெண்ணாற்றங்கரைப் போரைப் பற்றி இன்னும் சொல்லுங்கள்!'' என்றான் பொன்னன்.

இந்த வீரப்போரைக் குறித்தும் பார்த்திப மகாராஜா, அந்திம காலத்தில் சிவனடியாரிடம் கேட்ட வரத்தைப் பற்றியும் எவ்வளவு தடவை கேட்டாலும் அவனுக்கு அலுப்பதில்லை.

சிவனடியாரும் அதைச் சொல்ல அலுப்பதில்லையாதலால், அந்தக் கதையை மறுபடியும் விவரமாகச் சொல்லிக்கொண்டு வந்தார்.

சற்று நேரத்துக்கெல்லாம் அவர்கள், காட்டாறானது சிற்றருவியாகி மலை மேல் ஏறத் தொடங்கியிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். இதற்கு மேல் குதிரைகளின் மீது போவது இயலாத காரியம். எனவே, மலைச்சாரலில் மரங்கள் அடர்த்தியாயிருந்த ஓர் இடத்தில் குதிரைகளை அவர்கள் விட்டார்கள். ''இவற்றை மரத்தில் கட்ட வேண்டாமா?'' என்று பொன்னன் கேட்டதற்கு, ''வேண்டாம'' என்றார் சிவனடியார்.

''இந்த உயர் ஜாதிக் குதிரைகளின் அறிவுக்கூர்மை அநேக மனிதர்களுக்குக் கூட வராது பொன்னா! உங்கள் இளவரசன் ஆற்று வெள்ளத்தில் போனதும், உனக்கு முன்னால் இந்த புஷ்பகம் வந்து எனக்குச் செய்தி சொல்லிவிடவில்லையா? இவ்விடத்தில் நாம் இந்தக் குதிரைகளை விட்டு விட்டுப் போனோமானால், அந்தண்டை இந்தண்டை அவை அசைய மாட்டா. கட்டிப்போட்டால்தான் ஆபத்து. துஷ்ட மிருகங்கள் ஒரு வேளை வந்தால் ஓடித் தப்ப முடியாதல்லவா?'' என்று கூறிவிட்டு, இரண்டு குதிரைகளையும் முதுகில் தடவிக் கொடுத்தார். பிறகு, இருவரும் அருவி வழியைப் பிடித்துக்கொண்டு மலை மேலே ஏறினார்கள்

> **''பொன்னா! உங்கள் இளவரசன் விக்கிரமன் ஆற்று வெள்ளத்தில் போனதும், உனக்கு முன்னால் இந்த புஷ்பகம் வந்து, எனக்குச் செய்தி சொல்லிவிடவில்லையா?''**

பெரிதும் சிறிதுமாயும், முண்டும் முரடுமாயும் கிடந்த கற்பாறைகளை வெகு லாகவமாகத் தாண்டிக்கொண்டு சிவனடியார் சென்றார். தண்ணீரில் இறங்கி நடப்பதிலாவது, ஒரு பாறையிலிருந்து இன்னொரு பாறைக்குத் தாண்டுவதிலாவது அவருக்கு ஒருவிதமான சிரமமும் இருக்கவில்லை. அவரைப் பின்தொடர்ந்து போவதற்கு பொன்னன் திணற வேண்டியதாக இருந்தது.

''சுவாமி! தங்களுக்குத் தெரியாத



வித்தை இந்த உலகத்தில் ஏதாவது உண்டா?'' என்று பொன்னன் கேட்டான்.

''ஒன்றே ஒன்று உண்டு பொன்னா! கொடுத்த வாக்கை நிறைவேற்றாமல் இருப்பது என்னால் முடியாத காரியம்'' என்றார் சிவனடியார்.

அவர் கூறியதை பொன்னன் சரியாகத் தெரிந்துகொள்வதற்குள், ''ஆமாம், உங்கள் பார்த்திப மகாராஜாவுக்கு நான் கொடுத்த வாக்கினால், என்னுடைய வாழ்க்கை மனோரதமே எப்படிக் குட்டிச்சுவராய்ப் போய்விட்டது பார்!'' என்றார்.

''அதெப்படி சுவாமி! முன்னேயும் அவ்விதம் சொன்னீர்கள்! பார்த்திப மகாராஜாவினால் உங்களுடைய காரியம் கெட்டுப் போவானேன்?'' என்று கேட்டான் பொன்னன்.

''வாதாபியிலிருந்து திரும்பி வந்தபோது, தென்னாடு முழுவதையும் ஒரு பெரிய மகாராஜ்யமாக்கிவிட வேண்டுமென்ற எண்ணத்துடனேயே வந்தேன். இந்தச் சின்னஞ்சிறு தமிழகத்தில் ஒரு ராஜாவுக்கு மேல் - ஓர் இராஜ்யத்துக்கு மேல் இடம்கிடையாது என்று கருதினேன். சோழ, சேர, பாண்டியர்களின் நாமதேயமே இல்லாமல், பூண்டோடு நாசம் செய்துவிட்டு தமிழகத்தில் பல்லவ இராஜ்யத்தை, ஏகமகாராஜ்யமாகச் செய்துவிட வேண்டுமென்று சங்கல்பம் செய்துகொண்டிருந்தேன். ஆனால், என்ன பிரயோஜனம்? பார்த்திபனுடைய சுத்த வீரமானது என் சங்கல்பத்தை அடித்துத் தள்ளிவிட்டது. அவனுடைய மகனைக் காப்பாற்றி வளர்க்க - சுதந்திர வீர புருஷனாக வளர்க்க - வாக்குக் கொடுத்துவிட்டேன். சுதந்திரசோழ இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு நானே முயற்சி செய்ய வேண்டியதாகிவிட்டது! இப்போது நினைத்தால், ஏன் அந்தப் புரட்டாசிப் பௌர்ணமி இரவில், போர்க்களத்தில் பிரவேசித்து பார்த்திபனுடைய உடலைத் தேடினோம் என்று தோன்றுகிறது. இதைத்தான் விதி என்று சொல்கிறார்கள் போலிருக்கிறது.''


இவ்விதம் பேசிக்கொண்டே பொன்னனும் சிவனடியாரும் மேலே மேலே ஏறிச் சென்றார்கள். சூரியன் உச்சி

வானத்தை அடைந்தபோது, செங்குத்தான பாறையிலிருந்து அருவி 'ஹோ' என்ற இரைச்சலுடன் விழுந்துகொண்டிருந்த இடத்தை அவர்கள் அடைந்தார்கள். அதற்கு மேல் அருவிப் பாதையில் போவதற்கு வழியில்லை என்பதை பொன்னன் தெரிவிக்க, சிவனடியார் சிந்தனையில் ஆழ்ந்தவராய் அங்குமிங்கும் பார்க்கத் தொடங்கினார்.

அருவி விழுந்தோடிய இடத்துக்கு இருபுறமும் கூர்ந்து பார்த்ததில், காட்டு வழி என்று சொல்லக்கூடியதாக ஒன்றும் தென்படவில்லை. இருபுறமும் செங்குத்தாகவும் முண்டும் முரடுமாகவும் மலைப் பாறைகள் உயர்ந்திருந்ததுடன், முட்செடிகளும் கொடிகளும் நெருங்கி வளர்ந்து படர்ந்திருந்தன. அந்தச் செடிகொடிகளையெல்லாம், சிவனடியார் ஆங்காங்கு விலக்கிப் பார்த்துக்கொண்டு கடைசியாக அருவி விழுந்துகொண்டிருந்த இடத்துக்குச் சமீபமாக வந்தார். அருவியின் தாரை விழுந்த இடம் ஒரு சிறு குளம்போல் இருந்தது. அந்தக் குளத்தின் ஆழம் எவ்வளவு இருக்குமோ தெரியாது. தாரை விழுந்த வேகத்தினால், அலைமோதிக்கொண்டிருந்த அந்தக் குளத்தைப் பார்க்கும்போதே மனத்தில் திகில் உண்டாயிற்று. குளத்தின் இருபுறத்திலும் பாறைச் சுவர் செங்குத்தாக இருந்தபடியால், நீர்த் தாரை விழும் இடத்துக்கு அருகில் போவது அசாத்தியம் என்று தோன்றிற்று. ஆனால், சிவனடியார் அந்த அசாத்தியமான காரியத்தைச் செய்யத் தொடங்கினார்.

அந்த அருவிக் குளத்தின் ஒரு பக்கத்தில் ஓரமாக பாறைச் சுவரைக் கைகளால் பிடித்துக்கொண்டும் முண்டு முரடுகளில் காலை வைத்துத் தாண்டியும், சில இடங்களில் தண்ணீரில் இறங்கி நடந்தும் சில இடங்களில் நீந்தியும் அவர் போனார். இதைப் பார்த்துப் பிரமித்துப்போய் நின்ற பொன்னன், கடைசியாக சிவனடியார் தண்ணீர் தாரைக்குப் பின்னால் மறைந்ததும், ''ஐயோ!'' என்று அலறிவிட்டான். 'ஒரு வேளை போனவர் போனவர்தானா? இனிமேல் திரும்ப மாட்டாரோ?' என்று அவன் அளவில்லாத ஏக்கத்துடனும் திகிலுடனும் நின்றான். நேரமாக ஆக அவனுடைய தவிப்பு அதிகமாயிற்று. சாமியாருக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் என்னென்ன விபரீதங்கள் விளையும் என்பதை நினைத்தபோது, அவனுக்குத் தலைசுற்றத் தொடங்கியது. 'அவரை விட்டுவிட்டு நாம் திரும்பிப் போவதா? முடியாத காரியம். நாமும் அவர் போன இடத்துக்கே போய்ப் பிராணனை விடலாம், எது எப்படிப் போனாலும் போகட்டும்' என்று துணிந்து பொன்னனும் அந்தக் கிடுகிடு பள்ளமான குளத்தில் இறங்கினான்.

(தொடரும்)



குரோதம்!

நிறைவேறாத ஆசையின் இரண்டு உருவங்கள்தாம் துக்கமும் கோபமும். நம் ஆசையின் நிறைவேற்றத்துக்குத் தடையாக இருந்தவர்கள், நம்மைவிடக் கீழ்ப்பட்டவர்களாக இருந்தால் அவர்களிடம் கோபத்தைக் காட்டுகிறோம். அவர்கள் நமக்கு மேலே இருந்துவிட்டால், கோபித்துக்கொள்ள முடியாமல், நமக்குள்ளேயே துக்கப்பட்டுக் கொண்டு அழுகிறோம். கோபத்தின் கெட்ட சக்தி காமத்தின் சக்தியைவிடப் பெரியது. இதை நளசரித்திரமான 'நைஷதம்' வெகு அழகாகச் சொல்கிறது. கலி அரசன் வருகிறான், அவனது சேனாதிபதிகளாகக் காமனும் குரோதனும் வருகிறார்கள். கட்டியக்காரன் இவர்களுடைய பெருமைகளைப் பாடுகிறான். குரோதனைப் பற்றி அவன் என்ன பாடுகிறான்? 'காமன் புகாத இடமில்லை என்பார்கள். ஆனால், காமனும் புகாத ஒரு கோட்டை உண்டு. அந்தக் கோட்டைக்குள்ளும் இந்தக் குரோதன் குடிகொண்டிருக்கிறான். அது எந்தக் கோட்டை தெரியுமா? துர்வாசருடைய இதயம்தான்' என்று குரோதனின் புகழைப் பாடுகிறான். காமமே அறியாத துர்வாச மகரிஷியும் கோபத்துக்கு ஆளானவர் என்று தாத்பரியம்.

நாம், இந்த மகாபாவியான குரோதனிடம் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கொஞ்சம் யோசித்துப் பார்த்தாலும் நமக்கே தெரியும்; யாரையும் கோபித்துக்கொண்டு சத்தம் போட நமக்குச் சிறிதும் யோக்கியதை இல்லை என்றும், யாரை நாம் கோபித்துக் கொள்கிறோமோ, அவர்கள் செய்கிற தவறுகளைவிடப் பெரிய தவறுகளைச் செய்தவர் நாம் என்பதும் நம் அந்தராத்மாவுக்குத் தெரியும். அப்படியே நாம் தவறு செய்யாவிட்டாலும்கூட, அந்த மனிதன் அந்தச் சூழ்நிலையில் செய்த தவறை, நாமும்கூட அந்தச் சூழ்நிலையில் இருந்தால், செய்திருக்கக்கூடும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

குரோதன் நம்முடைய பெரிய சத்ரு. அவனை அண்டவிடாமல் எப்போதும் நம்மைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
சுவாமிகள்



துறை சார்ந்த நூல்களை அலசி ஆராய்ந்து, சுருக்கமாகவும் சுவையாகவும் தெளிவுபடுத்தியுள்ளார்.



அறியவேண்டிய அபூர்வ ஆலயங்கள் - பனையபுரம் அதியமான், வானதி பதிப்பகம், 23/13, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை-17. விலை ரூ.100

பல நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த ஆலயங்களின் தனிச்சிறப்புகள், புராணம், வரலாறு, கல்வெட்டுச் செய்திகள், அமைவிடம் எனப் பல தகவல்களை, படிப்போரின் ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் எழுதியுள்ளார். கலையை நேசிக்கும் ஒவ்வொருவரையும் கவரும் கட்டுரைக்கேற்ற புகைப்படங்கள், நூலுக்குக் கூடுதல் சிறப்பு!

மக்களின் பாடகன்

வாழ்க்கை ஒரு பூந்தோட்டம் - நெல்லை கவிநேசன், குமரன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை - 17. விலை ரூ.100

பிரபல பத்திரிகையில் தொடராக வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு. கல்விமுறை, பெற்றோர் ஆசிரியர் உறவுமுறை, வாழ்க்கையில் உயர்வதற்கான அணுகுமுறைகள் என மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கும் தேவையான பல அருமையான ஆலோசனைகளை வழங்கியுள்ளார் நூலாசிரியர்.

லேட்டஸ்ட் ஹாய் மதன் பாகம் - 2 -மதன், விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை - 02. விலை ரூ.75

வாசகர்களின் கேள்விகளும் பத்திரிகையாளர் மதனின் பதில்களும் அடங்கிய தொகுப்பு. பலதுறை தொடர்பான வாசகர்களின் சந்தேகங்களுக்கு வியக்க வைக்கும் ஆதாரங்களுடன் பதிலளித்திருக்கிறார். அனைத்துக் கேள்விகளுக்கும், அந்தந்தத்

பாப்லோ நெருதா பார்வையில் இந்தியா - ஈரோடு தமிழன்பன், பாப்லோ நெருதா ஸ்பானிய, லத்தீன் அமெரிக்க ஆய்வு நிறுவனம், 81, அபிபுல்லா சாலை, தியாகராய நகர், சென்னை - 17. விலை ரூ.60

நோபல் பரிசு பெற்ற கவிஞர் பாப்லோ நெருதாவின் கவிதைகள், கட்டுரைகளின் தமிழாக்கப் பதிவுகள். இந்தியா பற்றிய இந்த மக்கள் பாடகரது கருத்துகள், பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கை அவலம், உலகைப் பற்றிய ஞானத் தெளிவு போன்ற பலதரப்பட்ட அவரின் படைப்புகளை, பாரதிதாசனின் கவிதைகளோடு ஒப்பிட்டு ஆய்கிறார் கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

- மித்ரா

புத்தக விமர்சனம்

மின்மினியின் வெளிச்சம்!

எஸ்.நடராஜன்



கடந்துசெல்லும்
பாதையெங்கும்
போர்வையாய்
விரிந்துகிடக்கிறேன்
உன் வருகை சுமந்து.

சாலையின் ஓரங்களில்
பூத்துக்கிடக்கும்
என் பூக்களின் காம்புகளை
கிள்ளிக் கிள்ளி
எறிந்து போகிறாய்.

பாதை முழுக்க
மயங்கிக் கிடந்த
பூக்களை எழுப்பி
என் கூடை முழுக்க
திணித்துத் திரிகிறேன்.

உலர்ந்த அதன்
சருகுக் குவியல்
மலைபோல
அடர்ந்துகிடக்கிறது
வனமெங்கும்.

ஒரு மின்மினிப் பூச்சியாய்
உன்னால்
வேறென்ன செய்வதற்கியலும்
விட்டு விட்டுப் பறந்து
வெளிச்சம் கொடுப்பதைத் தவிர.

ஹிந்துஸ்தான்

வெள்ளிக்கிழமை பக்ரீத். வாப்பாவும் ஹுசேனும் பெருநாள் தொழுகைக்குப் போய் விட்டு வீட்டுக்குள் பிரவேசிக்கையில், மஞ்சள் நீரைக்கொண்டு தலையைச் சுற்றிப்போட்ட பர்வீன், தொடர்ந்து ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாள்.

"வாப்பா, இன்னிக்கு டின்னருக்கு என்னோட ஃப்ரண்ட் சாதனா வர்றா."

குண்டு, வாப்பாவுக்கு இல்லை; ஹுசேனுக்குத்தான். அதிர்ந்துபோன அவன் உடனே ஆட்சேபக் குரலெழுப்பினான்.

"நோ, நோ... நான், ஒரேயொரு நாள் லீவ்ல திருச்சியிலிருந்து மெட்ராஸுக்கு வந்திருக்கேன், நம்ம ஃபேமிலியோட இருக்கலாம்னா. இன்னிக்கு அனாவசியமா எதுக்கு இன்னொருத்தருக்கு பார்ட்டி...?"

"ஐ'ம் ஸாரி பிக் பிரதர். நான், சாதனாவ ஏற்கெனவே இன்வைட் பண்ணியாச்சு. ஷி இஸ் கமிங். அம்மா, அவளுக்குன்னு ஸ்பெஷலா வெஜிடபிள் பிரியாணி செய்யப் போறாங்க; என்னம்மா?"

"வெஜிடபிள் பிரியாணியா? பக்ரீத் அன்னிக்கு, ஒரு முஸ்லிம் வீட்ல வெஜிடபிள் பிரியாணியா! ஹை, வாட் எ ஜோக்! இங்க பார் பர்வீன், நாளைக்கு சனிக்கிழமை, எனக்கு செகண்ட் ஷிஃப்ட் ஸோ, காலைல சுபுஹ் தொழுதுட்டு, பஸ் புடிச்சி நான் திருச்சிக்குப் போய்ச் சேரணும். இந்த ட்வெண்ட்டி ஃபோர் அவர்ஸும், நான் நம்ம ஃபேமிலியோட இருக்கணும்னு நெனக்கிறேன். இதுல ஒரு மூணாவது அணி தலையிட அலவ் பண்ண முடியாது."

"யூ ஆர் ஸோ ஸெல்ஃபிஷ்."

"நீ என்னவேணா சொல்லு, பக்ரீத் அன்னிக்கு, நம்ம வீட்ல ஒரு காஃபிருக்கு விருந்தா? வாட் நான்ஸென்ஸ்!"

சொன்னதுதான் தாமதம் படபடவென்று பொரிய ஆரம்பித்துவிட்டாள் பர்வீன்.

"அவங்க அப்பா, அம்மா சொன்ன கடவுளை அவ சின்ஸியராத் தொழுறா. சாதனா, நாஸ்திகி இல்லை. நீ ஒரு ஃபானட்டிக் மாதிரி பேசற. இது இஸ்லாத்துக்கே விரோதம்! ஒன்னோட வக்கிர புத்தியை மாத்திக்க."

"நீ என்ன கத்தினாலும் நான் சொன்னது சொன்னதுதான். இந்தப் புனிதமான பெருநாளை ஒரு நான்-முஸ்லிமோட பங்கு போட்டுக்கறதா இல்ல."

"உனக்கு அறிவு மழுங்கிப் போச்சு. நீ ஒரு படிச்ச முட்டாள்; எக்ஸ்ட்ரீமிஸ்ட்;



"என்ன செய்ய ஹுசேன், பர்வின் ரொம்ப கம்பல் பண்ணினா."



டெர்ரரிஸ்ட்; பாகிஸ்தானுக்குப் போக வேண்டிய ஆள்.''

தங்கையின் ஆவேசத் தாக்குதலை ரகசியமாய் ரசித்தபடி ஹுஸேன் பின் வாங்கினான்.

பேப்பர் படிக்கிற மாதிரி இந்த வாக்கு வாதங்களைக் கவனித்துக்கொண்டிருந்த வாப்பா, வாயைத் திறந்தார்.

''காம் டௌன் பர்வீன். இன்னிக்கு வீடு பூரா ஒரே கவிச்சி வாடையா இருக்கும்மா. ஒன்னோட ஃப்ரண்ட் வெஜிடேரியன், ரொம்பச் சங்கடப்படுவா. நீ கூப்பிட்டதுக்கு மறுப்பு சொல்லமுடியாம சம்மதம் சொல்லியிருப்பா. ஹுஸேன், திருச்சிக்குப்

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி



போய்ச் சேரட்டும். சாதனாவை நாளைக்கு வரச் சொல்லு. நாம எல்லாரும் அவளோட சேந்து வடை பாயசத்தோட லஞ்ச் சாப்பிடுவோம். உனக்குச் சொல்றதுக்குத் தர்மசங்கடமா இருந்தா, அவ நம்பரைக் கொடு. நானே அவகிட்ட பேசறேன்.''

வாப்பா சொன்னதைக் கேட்டு ஹுசைன் ஆசுவாசப் பெருமூச்சுவிட, அடுத்து வாப்பா அவனை முன்னிலைப் படுத்திப் பேசினார்.

''ஹுசேன், ஒன்னோட ஐடியாவையெல்லாம் நீ கொஞ்சம் மாத்திக்கணும். மத்தவங்கள வெறுக்கச் சொல்லி இஸ்லாம் போதிக்கல. நாம் ஒரு காஸ்மாபாலிட்டன் சொஸைட்டில வாழ்ந்துட்டிருக்கோம். நமக்குப் பரந்த மனப்பான்மை வேணும்.''

வாப்பா பேசப்பேச, ஹுசேனுக்கு 'அப்பாடா' என்றிருந்தது.

சாயங்காலம் திரும்பவும் உடம்பில் ஸென்ட் அடித்துக் கொண்டு ஹுசேன் வெளியே கிளம்பிய போது, வாப்பா வழி மறித்தார்.

''என்னமோ ட்வெண்ட்டி ஃபோர் அவர்ஸ் ஃபேமிலியோட இருக்கப் போறேன்னு சொன்ன மாதிரியிருந்தது?''

'அதுக்கு? என்னோட ஃப்ரண்ட்ஸையெல்லாம் போய்ப் பாக்க வேண்டாமா' என்று நழுவினான் ஹுசேன்.




மெரினாவில் காத்திருந்தான் ஹுசேன்.

அவள் வந்தாள். சிவப்புச் சுரிதாரில் அட்டகாசமாயிருந்தாள்.

''நம்ம கட்சிக்கு உன் பொண்டாட்டி தலைவரா இருந்தா நல்லா இருக்குமா, ஏன்?''

''வீட்டுலயும், கட்சியிலயும் தனித்தனியா பயப்பட வேண்டிய அவசியம் இருக்காதே!''

– வெ.சீதாராமன்



இவனைப் பார்த்ததும் மலர்ந்து சிரித்தாள்.

''வந்து ரொம்ப நேரமாச்சா ஹுசேன்?''

''போ... நான் ரொம்பக் கோவமாயிருக்கேன்.''

''அதைச் சிரிச்சுண்டே சொன்னா?''

''என்ன செய்யச் சொல்ற, உன்னைப் பாத்தவுடனே உருகிப் போயிர்றேனே. அதிருக்கட்டும், ஏய் மண்டு, நா எஸ்.எம்.எஸ். குடுத்தேன்ல, 'நாம் இன்னிக்கு பீச்ல மீட் பண்றோம், அப்புறம் சேந்து ஒரு ஹோட்டல்ல டின்னர் சாப்பிடறோம்'னு? என்கிட்ட நீ சரின்னுட்டு, வீட்டுக்கு வர்றேன்னு பர்வீன்கிட்ட சொல்லியிருக்க?''

''என்ன செய்ய ஹுசேன்? பர்வீன் ரொம்ப கம்பெல் பண்ணினா. நேக்கு என்ன செய்யறதுன்னு தெரியலை. நல்லவேளை ஒங்க வாப்பா, மை வருங்கால மாமனார், ஃபோன் பண்ணினதால நான் தப்பிச்சேன்! ஆமா, பர்வீன எப்படிச் சமாளிச்சே?''

''அதை ஏன் கேக்கற சாதனா, ஒரு ஆட்டம் ஆடிட்டா! என்னை பாகிஸ்தானுக்குப் போடான்னு சபிச்சிட்டா. ஆனா, இதுல ஒரு நல்ல காரியமும் நடந்திருக்கு. ஒரு டிராமா போட்டு வாப்பாவோட விசாலமான மனசைத் தெரிஞ்சுக்கிட்டேன். நீ வேணா பார் சாதனா, வாப்பா நமக்கு ஓ.கே. சொல்லிடுவார்.''

''ஹுசேன்?''

''ம்ம்?''

''நீ பாகிஸ்தானுக்குப் போறச்ச என்னையும் கூட்டிண்டுதானே போவ?''

''ச்சீ மண்டு'' என்று சாதனாவின் மண்டையில் செல்லமாய் ஒரு குட்டு வைத்தான் ஹுசேன்.

இந்தளூருக்குச் சென்றதுண்டா?

பாகம் - 2

சொல்லாது ஒழியகில்லேன்; அறிந்த சொல்லில், நும் அடியார்
எல்லாரோடும் ஒக்க எண்ணியிருந்தீர் அடியேனை;
நல்லார் அறிவீர்; தீயார் அறிவீர்; நமக்கு இவ் உலகத்தில்,
எல்லாம் அறிவீர் ஈதே அறியீர், இந்தளூரீரே!

திருமங்கை மன்னனின் திருவிந்தளூர் பாசுரங்களில் ஒன்று பகவானுடன் அவரது நேரடியான சகஜ பாவத்தை உணர்த்துகிறது.

'எனக்குத் தெரிந்த சொற்களில், உன் புகழைச் சொல்லாமல் என்னால் இருக்க முடியாது. உன் அடியவர்கள் எல்லோரையும்போல என்னையும் எண்ணியிருந்தீர்கள். இந்த உலகத்தில் நல்லவர் யார், கெட்டவர் யார்? எல்லாம் நீங்கள் அறிவீர். இதுகூட உங்களுக்குத் தெரியாதா இந்தளூர்க்காரரே!'

திருமங்கையாழ்வாரை ஒரு repentant poet என்பார்கள். 'சிறுவயதிலிருந்து நான் நிறைய தப்பு செய்துவிட்டேன். அதையெல்லாம் ஒப்புக்கொள்கிறேன். இப்போது என்னை மன்னித்து ஆட்கொள்ளும்' என்று வேண்டும் பாடல்கள் பல இயற்றியுள்ளார். இந்தப் பாடல்களின் அடிப்படையில்தான், திருமங்கை ஆழ்வாரின் சரித்திரமும் அமைந்திருக்கிறது.

'சோழ சேனாதிபதியாக இருந்த நீலன், ஓர் அழகான பிராமணப் பெண்ணைப் பார்த்து ஆசைப்பட்டு, அவள் விருப்பத்தைக் கவர வைணவனாகி, ஆயிரம் பேருக்குச் சோறு போட்டு, பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு, வழிப்பறி செய்து, பெருமாளையே மிரட்டப் போனபோது அஞ்ஞான அருள் அகன்றது' என்னும் அவரது சரித்திரம், படிக்கச் சுவையானது.

(படிக்கலாம்)

வாரம் ஒரு பாசுரம் - 12


சுஜாதா



கல்லூரி கலாட்டா!

அசத்தல்

மகளிர் தினம்னா சீரியஸா உரிமைக் குரல் கொடுக்கறது ஒரு பக்கம் இருக்கட்டும்... இதோ ஒரு மைப்பாஸ் மாநாடு போடறாங்க தஞ்சாவூர் போன் செக்கர்ஸ் மகளிர் கல்லூரியின் மாணவிகள் சிலர். 'அசத்தப் போவது யாரு' பாணியில அவங்க பத்து நிமிஷம் பேசியே 'யம்மா... முடியல... வலிக்குது... வயிறு'ன்னு வடிவேலு மாதிரி சொல்ல வைச்சிட்டாங்க. அவற்றில் சில உங்களுக்காக.



முதலில் அசத்த வருகிறார் ஜமீனா:

● ''வாழ்க்கையில எதுவுமே இல்லைன்னா போரடிக்கும்.

தலையில் எதுவுமே இல்லைன்னா 'ஷைன்'அடிக்கும்.''

● ''தோசையைத் திருப்பிப் போட்டா ஏன் ஒட்டையா விழுது தெரியுமா?''

''ஏன்னா தோசைய நாம சுடுறோம்.''

(இந்த ஜோக்கை நீங்க எங்க சுட்டீங்க?)

ஜமீனா ஜம்முன்னு அசத்தினாங்க. அடுத்ததா அசத்த வருகிறார் ஜெரினா...

● ''ஒரு பையனுக்கு 'ஆறு' விரல் இருந்துச்சு. அவன எல்லாரும் 'சூர்யா'ன்னு கூப்பிட்டாங்க... ஏன் தெரியுமா?''

''ஏன்னா அவன் பேரே சூர்யாதான்!''

(நல்ல வேளை பேரு ஜெரினா இல்லைல)

● ''கோல மாவுல கோலம் போடலாம். ஆனா, கடலை மாவுல கடலை போட முடியுமா?''

(அரைச்ச மாவையே எத்தனை நாளுதான் அரைப்பீங்க?)

அடுத்ததாக அசத்த வர்றாங்க அபர்ணா:

● ''மின்னலைப் பார்த்தா கண்ணு போயிடும்... பார்க்கலைன்னா மின்னல் போயிடும்''

(கண்ணுபடப் போகுது அபர்ணா! முதல்ல உங்களுக்குச் சுத்திப் போடணும்!)

● ''எவ்வளவுதான் சிடுமூஞ்சியா இருந்தாலும் பல்தேய்க்கும்போது 'இஞ்' காட்டித்தான் ஆகணும்.''

(எல்லோரும் ஒரு தடவை ஜோராய் 'இஞ்' காட்டுங்க.)

இஞ் காட்டியபடியே அசத்த வர்றாங்க ஜெனி:

● ''ஒரு லிட்டர்ல ஒரு சொட்டு



மன்னிகள்!

போயிடுச்சுன்னா மிச்சம் எவ்வளவு?''

(ஆங்... எக்ஸ்கியூஸ் மி... நாங்க கணக்குல கொஞ்சம் வீக்!)

''இதுகூடத் தெரியாதா?
மூணு சொட்டு இருக்கும்.
ஏன்னா? லிட்டருக்கு நாலு சொட்டு!''

(நீங்க 'உஜாலா'வுக்கு மாறினதை ஊருக்கே சொல்லிட்டீங்களே!)

ஓ.கே. நம்ம நிகழ்ச்சியில கடைசியா கலக்க வர்றாங்க சுஜிதா:

● ''சார்... எல்லா இடத்துல இருந்தும் எல்லாத்தையும் எடுத்திட முடியாது; எங்க இருந்து வந்ததுன்னும் சொல்ல முடியாது. உதாரணம்: ''வேர்ல இருந்து வந்ததால அதுக்குப் பேரு வேர்க்கடலை. அப்ப... கொண்டைக் கடலை, கொண்டையில இருந்தா வந்துச்சு? யோசிங்க...''

அம்மா தாயி! இந்த கடிங்கல்லாம் உங்க மூளையிலேருந்து வந்துச்சா, இல்லே காத்து வாக்குல மிதந்து வந்ததை மடக்கிப் புடிச்சு வீசறீங்களா!

- மாமதி முருகன்

விஜய் டி.வி.யில் ஒளிப்பரப்பாகும் 'மதுரை' தொடரின் நூறாவது நாள் போஸ்டர், சென்னையில் திரும்பிய பக்கமெல்லாம் காட்சியளிக்கிறது. கிராமத்தைக் கதைக் களமாகக்கொண்டு மற்ற தொடர்களிலிருந்து வித்தியாசப்படுத்தி, ரசிகர்களைக் கவர்ந்துள்ள 'மதுர' டீமை, சந்தித்தோம்.

''பெண்களை மையமாக வைத்துதான் மெகா தொடர் செய்ய முடியுங்கற விதியை

ஒவ்வொரு வீட்டிலும்

உடைச்சு, கதாநாயகனுக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படறதால மாறுதலாவும் ரசிகர்களிடம் அதிக வரவேற்பும் கிடைச்சிருக்கு'' என்கிறார் தொடரின் கதாநாயகன் செந்தில். இவர் கோயம்புத்தூர் 'ரேடியோ மிர்ச்சி'யில் ஜாக்கியாகப் பணிபுரிகிறார். இந்தத் தொடர் மூலம், இப்போது இரட்டை குதிரையில் ஜோராகச் சவாரி செய்கிறார். இவர் பிறந்து வளர்ந்தது சென்னையில். ஆனால், படித்தது மதுரையில்.

அதனால் மதுரைத் தமிழ் இவர் நாவிலும் விளையாடுகிறது. ''யூனிட்டிலும் எப்போதும் மதுரைத் தமிழ் உலாவுவதால் அந்த மண்ணிலேயே இருப்பது போன்ற பிரமிப்பு இருக்கும்'' என்கிறார்.

இயக்குநர் ஜோராடும் மதுரைக்காரர். ''இப்பவும் மதுரை தன்னுடைய பாரம்பரியத்தை இழக்காமல் இருக்கு. அந்த மண்ணின் மக்களோடு பின்னிப் பிணைந்திருக்கும் கலை உணர்வை, எந்த நவீனமும் வந்து மாத்த முடியாது'' என்று மண்ணின் பெருமையைப் பேசியவர் முகத்தில், வெற்றியின் பெருமிதம் தெரிந்தது.

''வட்டார மொழி பேசும் புதுமுகங்களைத் துணிந்து தேர்வு செய்தேன். அவர்களும் கதாபாத்திரமாகவே மாறிவிட்டார்கள். கதாநாயகி ஸ்ரீஜாவைத் தேர்ந்தெடுத்ததும் அப்படித்தான்'' என்றார்.



* ராதாமணாளன்

''ஏசியாநெட்டில் சுவாமி ஐயப்பன் தொடரைத் தயாரிக்கும் கார்த்திகேயன்தான், என்னை இயக்குநர் ஜோராடுவிடம் அறிமுகப்படுத்தினார். கதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. தொடருக்குக் கிடைத்த வரவேற்பு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது'' என்கிறார் ஸ்ரீஜா.

* பானு



'மதுர' குறித்து 'மதுரை' மைந்தர்களின் கருத்து:

ராதாமணாளன் *(ரேடியோ ஜாக்கி- மதுரை)* : இந்தத் தொடரின் நாயகி மீனாட்சி மாதிரி ஒவ்வொரு ஆணின் வாழ்க்கையிலும் ஒருத்தி இருந்தால், அவன் முழு மனிதனாக இருப்பது நிச்சயம்.

பானு *(தனியார் நிறுவன ஊழியர்)* : இந்த சீரியலின் டைட்டில் பாட்டான 'வீரம் விளைஞ்ச மண்ணு'தான் என் செல்போனின் ரிங்டோன். எவ்வளவுதான் சினிமா



பாட்டுக் கேட்டாலும், எங்க ஊர் பேரைத் தாங்கி இருக்கும் இந்தப் பாட்டுக்கு இணை யில்லை. மண்வாச னையை சினிமாவுல மட்டுமில்லாம, சீரியலி லும் தரமுடியும்னு முதல் முறையா நிரூபிச்சிருக்காங்க.

பட்டாபிராமன் (ஓய்வு பெற்ற தனியார் ஊழியர்) : நண்பர்களோட வற்புறுத்தலாலதான் முதல்ல இந்த சீரியலைப் பார்க்க ஆரம்பிச்சேன். இப்ப நானே நாலு பேர்கிட்ட சொல்லிப் பார்க்க வைக்கறேன். மண்ணோட மணத்தைத் திரையில பார்க்கிறபோது மனசுக்கு இதமா இருக்கு. கொஞ்சம் பின்னோக்கி பால்யகாலத்துக்கே நீச்சலடிச்சுப் போயிடுது.


● தர்மாம்பாள்


● பட்டாபிராமன்

திருமதி. தர்மாம்பாள் (ஓய்வு பெற்ற ஆசிரியை) : நம்ம ஊரைப் பத்தி இவ்வளவு விஷயங்கள் இருக்கான்னு இந்தத் தொடரைப் பார்த்த பின்னாடி தெரிஞ்சுக்கிட்டேன். நான் மதுர ஆள் என்று பெருமைப்படுவதற்கு, இந்த சீரியல்ல நல்ல விஷயங்கள் நிறைய இருக்கு. இதுல வர்ற மீனாட்சி மாதிரி, ஒவ்வொரு வீட்டிலேயும் ஒரு மீனாட்சி இருந்தா குடும்பத்துல பிரச்னையே இருக்காது.

– **ராகவ்குமார்**

சட்டுன்னு ஒரு சமாளிப்பு



சூடான சுந்தரிகளாக இருக்கவேண்டிய சில இடங்கள் உண்டு. ஆனால், பல நேரங்களில் தம்முடைய சமயோஜித புத்தியால் சட்டென்று சமாளிப்புக் கலையைக் காட்டும் இல்லத்தரசிகளே இல்லறத்தை இனிமையாக்குகின்றனர். மகளிர் தின கொண்டாட்டமாக அப்படிச் சில 'சமாளிஃபிகேஷன்'கள் இங்கே...

விஜயலட்சுமி *(கணவர் - ராம் ஆதிநாராயணன்)* : எங்களுக்குக் கல்யாண மான புதுசுல, அவரோட ப்ரெண்ட்ஸ் குடும்பத்தோட பிச்சாவரம் போயிருந் தோம். எல்லாரும் போட்டிங் போக லாம்ன்னு சொன்னாங்க. ஆனா என் வீட் டுக்காரர் 'தண்ணின்னாலே எனக்குப் பயம். நான் வரமாட்டேன். நீ வேணும்ன்னா போயிட்டு வான்'னு என்கிட்ட மெதுவா சொன்னார்.

'சரியான பயந்தாங்கொள்ளியா இருக் காரே உங்க வீட்டுக்காரர்'ன்னு மத்தவங்க கிண்டலடிச்சாங்க. எனக்கு என்னமோ போல ஆயிடுச்சு. இத எப்படியாவது சமாளிக்கணுமேன்னு நினைச்சப்ப சட்டுன்னு ஒரு ஐடியா தோணுச்சு. ''நான் உங்ககூட வாழ்க்கையில இன்னும் எவ்வளவோ பயணம் பண்ண வேண்டியிருக்கு. இதுக்கே இப்படிப் பயந்தா எப்படி?''ன்னு சென்டிமென்ட்டா ஒரு டயலாக் விட்டேன். அவ்வளவுதான். 'வா போட்டிங் போகலாம்'னு அழைச்சிட்டுப் போனார்.

ஆனா, அவர் கையெல்லாம் 'கிடு கிடு'ன்னு நடுங்கினது எனக்கு மட்டும் தான் தெரியும். ஏன்னா, நடுங்கின அவர் கையை நான்தான் அழுத்தமா பிடிச் சிருந்தேன்.

500 ரூபாய்

சுமதி *(கணவர் - சேகர்)* : என்மேல அன்பு மழை பொழியக்கூடியவர் என் கணவர். கோயில் வழிபாட்டுல ரொம்ப கரெக்டா இருப்பார். ஒரு முறை, ''பூஜை பொருள் எல்லாம் வாங்கி வைச்சிட்டு ரெடியா இரு; ஈவினிங் கோயிலுக் குப் போகலாம்''ன்னு சொல்லிட்டுப் போனாரு.

அப்புறம் அவசர அவசரமா பஜாருக்குப் போனேன். பாதி வழியிலதான் ஞாபகம்

வந்துச்சு. பர்ஸ மறந்துட்டுப் போனது. திரும்பி வீட்டுக்குப் போயிட்டு வந்தா ரொம்ப லேட்டாயிடும். என்ன பண்றதுன்னு ஜன்ஸ்டீன் ரேஞ்சுக்கு யோசிச்சேன். சட்டுன்னு ஒரு ஐடியா வந்துச்சு.

போற வழியில, கம்ப்யூட்டர் சென்டர்ல வேலை பார்க்கற என் ப்ரெண்ட் ஒருத்திகிட்ட, '500 ரூபாய் முழு நோட்டு ஒண்ணு கொடு, கொஞ்ச நேரத்துல திருப்பித் தந்திடறேன்'ன்னு வாங்கிட்டுப் போனேன்.

பூ மாலையை வாங்கிட்டு, 500 ரூபாய் தாளை நீட்டினேன். 'என்கிட்ட சில்லறை இல்லம்மா. நாளைக்கு வரும்போது கொடுங்க'ன்னு அந்த வியாபாரி சொல்லிட்டார்.

இப்படியே ஒவ்வொரு அபிஷேக சாமான் வாங்கும்போதும் சொல்ல, நானும் 'நாளைக்கு வீட்டுக்காரரிடம் பணத்தைக் கொடுத்தனுப்புறேன்'னு சொல்லிட்டு, என் ப்ரெண்ட்கிட்ட 500 ரூபாயைக் கொடுத்துட்டு வீடு வந்து சேர்ந்தேன்.

இருக்கறது இல்லை''ன்னு என் கணவர் ஒரு நாள் வீட்டையே ரணகளமாக்கிட்டார்.

அவசரமா அந்தப் பணம் தேவைப் பட்டதால, ரொம்ப டென்ஷனா இருந்தார். உடனே நான், 'இந்தாங்க உங்க பணம்'ன்னு கொடுக்க, அத வாங்கிட்டு வேகமா கிளம்பிப் போயிட்டார்.

கொஞ்ச நாளைக்குப் பிறகு, ஒரு ஞாயிற்றுக்கிழமை பீரோவைச் சுத்தம் பண்ணிக்கிட்டு இருந்தார். அப்ப அவர் வைச்சிருந்த இரண்டாயிரம் ரூபா கிடைச்சுது. அப்புறமா என்கிட்ட மேட்டரைக் கேட்டவுடனே, உண்மையைப் போட்டு உடைச்சேன்.

உடனே அவர் பேரைப் போலவே அவரோட முகத்துலயும் அப்படியொரு பிரகா(ஷ்)சம்..! அந்தச் சமாளிஃப்பி கேஷனுக்குப் பிறகு இப்ப வரைக்கும் சாவிக்கொத்து என் கையிலதான்!

– வள்ளிக்கணவன்

:.பிளாஷ்பேக்!



எல்லாம் முடிஞ்ச பிறகு ஃப்ளாஷ்பேக் ஓப்பன். அவர் செல்லமா என் கன்னத்தைத் தட்டிக் கொடுத்தார்!

அமுதா (கணவர் - பா.து.பிரகாஷ்) : ''எங்க வைச்சேன்னு தெரியலயே. இரண்டாயிரம் ரூபாயைக் காணோம். இந்த வீட்டுல எதுவுமே வைச்ச இடத்துல

* அமுதா



* சுமதி



* விஜயலட்சுமி



ஸ்ரீ லலிதா - இரண்டாம் பாகம்

தஞ்சம் என்றே உரைப்பீர்...

சுதா சேஷய்யன்

அம்பாளைக் குறித்துச் சொன்ன ஆதி சங்கரர், 'தரித்ராணாம் சிந்தாமணி குணநிகா' என்று சொன்னார்.

''தரித்திரர்களாக நாங்கள் வந்து நிற்கிறோம். எங்களுக்கு நீ சிந்தா மணியாக இருக்கிறாய்...'' என்கிறார்.

முழுக்க முழுக்க முழுக்க சிந்தாமணி குணத்தோடு இருக்கக்கூடியவள் அம்பாள். எவ்வளவு சிறியதாக இருந்தாலும் சரி, ஒரு சிந்தாமணி கல் இருந்துவிட்டால் போதும், அது நாம் கேட்டதையெல்லாம் கொடுத்துவிடும். எங்கள் அம்பாள் எப்படித் தெரியுமா? எவ்வளவு பெரிய சிந்தா மணியாக இருக்கிறாள்! அவளிடம் எதைக் கேட்டாலும் பெறலாம்; கேட்கக்கூட வேண்டாம்; அள்ளித் தந்துவிடுவாள். அவள் பக்கத்தில் போய் நின்றாலே, நமக்கு என்ன வேண்டும் என்பதை அறிந்து, தரக்கூடியவள் அம்பாள்.

அந்த அம்பாள்தான் பக்தர்களுக்குக் கல்பலதிகாவாக - **பக்திமத் கல்பலதிகா**வாக இருக்கிறாள். வெறுமே 'கல்பலதிகா' என்று இந்தத் திருநாமம் அமையவில்லை! எத்தனையோ திருநாமங்கள் - **விஜயா, விமலா** என்று அடைமொழி இல்லாத திருநாமங்கள் வருகின்றன ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாமத்தில். ஆனால், 'கல்பலதிகா' என்பது 'பக்திமத்' என்பதோடு சேர்ந்து வருகிறது. வேறு எதையும் அம்பாள் எதிர்பார்க்கவில்லை. பக்தியோடு வந்தால் போதும். அப்படி வரக்கூடியவர்களுக்கு, எதைக் கேட்டாலும் தரக்கூடியவள் அம்பிகை பரமேஸ்வரி. பக்தியோடு போய் நின்றாலே போதும்; கேட்கக்கூட வேண்டாம். கல்பக விருக்ஷம் எப்படித் தருமோ அந்த மாதிரி அனைத்தையும் தரக்கூடியவள் - எதையும் என்றால், தன்னையும்கூடத் தரக்கூடியவள். தன்னையும் தன்னுடைய சாயுஜ்ய பதவியையும் உவந்து தரக்கூடியவள் அம்பாள்.

பாரதியார் பார்வையில்...

சமீப காலத்து சக்தி உபாஸகர்களுள் மிகுந்த பிரேமையோடு உபாஸித்தவர் மகாகவி பாரதியார். நமக்கு என்ன வேண்டும் என்பதை மிகவும் தெளிவாக, உறுதியாக, உரிமையுடன் சக்தியிடம் கேட்டவர். இந்த உலகத்துக்கு உதவியாகத் தாம் வாழ வேண்டும் என்பதையும் சக்தியிடம் சொன்னவர் அவர். தாம் எப்படி வாழக் கூடாது என்பதையும் சக்தியிடம் சொல்லி, விண்ணப்பித்து, கேள்வி கேட்டவர்.

மனிதர்களாக இருக்கக்கூடியவர்கள், எப்படி வாழக்கூடாது என்பதையும் முக்கியமாகத் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். விதியாக உள்ளவற்றை அனுசரித்து நாம் வாழவேண்டும். அதே சமயத்தில் எது நிஷேதம், (எது கூடாது) என்பதை அறிந்து வைத்துக் கொண்டு, முதலில் அதைத் தூக்கி அகற்றி வைத்துவிட வேண்டும். ஒருவேளை, கூடாத விஷயங்கள் நமக்குப் பழக்கமாகி விட்டால் அதற்குப் பிறகு, அந்தப் பழக்கத்தைத் தூக்கிப் போடுவது ரொம்பக் கஷ்டம். 'பழக்க தோஷம்' என்று நாம் சாதாரணமாகச் சொல்வோம். 'சகவாச தோஷம்' என்றும் சொல்வோம். சகவாசத்தினாலும் பழக்கத்தினாலும் தவறுகள் ரொம்ப சுலபமாக நடந்துவிடும். சிலவற்றைச் 'செய்ய வேண்டாம்' என்று மனம் சொன்னாலும் அறிவு சொன்னாலும், அவற்றைச் செய்யும்போது மனமும் அறிவும் பிடித்து நம்மைப் பின்னுக்கு இழுத்தாலும், சகவாசத்துக்காகச் செய்துவிடுகிறோம் ('பீயர் கம்பெனி'ஸ்


26
ப்ரவர்த்த ஸ்ரீமதி
லால்குடி

லேக்' என்று ஆங்கிலத்தில் சொல்வதுண்டு). அடுத்தவர்கள் நம்மைத் தவறாக நினைத்துவிடுவார்களோ என்கிற போலி கௌரவத்தினால் செய்துவிடுகிறோம். இப்படிச் செய்ய ஆரம்பித்து பழக்கமாகி விடுகிற விஷயங்களை அதன் பிறகு போக்கடிப்பது என்பது ரொம்பக் கஷ்டம். பழகவே கூடாத தவறுகள்தான் மிகச் சுலபமாகப் பழக்கமாகிவிடும்!

ஆகவேதான் எதையெதைச் செய்யக் கூடாது என்று பாரதியார் ஒரு பெரிய பட்டியல் போட்டார். யாரிடம்...? பராசக்தியிடம் போய் பட்டியல் போட்டார்!

''நான் எப்படி வாழவாகாது தெரியுமா...? வேடிக்கை மனிதனாக வாழலாகாது - வாழ மாட்டேன்!'' என்றார்.

வேடிக்கை மனிதன் என்றால் என்ன அர்த்தம்? யார் வேடிக்கை மனிதன்?

தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி -
மனம்....
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும்
- பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ?

'தேடிச் சோறுநிதந் தின்று' என்றார்! பாரதி மாதிரி, சில வார்த்தைகளை - சாதாரண வார்த்தைகளை வலிமையோடு தூக்கிப் போட்டவர்கள் கிடையாது. காரணம் என்னவென்றால், அம்பாள் உபாஸகராக இருக்கக் கூடியவர்களிடத்தில் மிகச் சாதாரண வார்த்தைகள்கூட பெரிய சக்தியோடு, வலிமையோடு வரும். அந்த மாதிரி வந்து விழுந்தது அந்த வார்த்தை!

சோறு 'உண்டு' என்று சொன்னால் அது நாகரிகமாக இருக்கும். 'தின்று' என்று குறிப்பிடுகிறபோது, அது எப்படி இருக்கிறது...? அந்த வார்த்தையைச் சொல்லும் போதே அது மனிதர்களுக்கான சொல் அல்ல என்று தெரிகிறது. மனிதர்களைப் பற்றிப் பேசும்போது 'தின்பார்கள்' என்று நாம் சொல்வதில்லை. தின்னுகிற செயலுக்குரியது எது என்பது நமக்குத் தெரியும்!

தேடிச் சோறு நிதம் தின்று பல சின்னஞ் சிறுகதைகள் பேசி...!

- பெரிய கதையாகப் பேசுவதற்குக்கூட பொறுமை கிடையாது! குட்டிக் குட்டிக் கதையாகப் பேசி, நடுவிலே கொஞ்சம் நேரம் தூக்கம் போட்டு, திரும்பவும் எழுந்து...

மனம் வாட பல செயல்கள் செய்து - தன்னுடைய மனசும் வருத்தப்பட்டு, பிறர் மனசும் வருத்தப்பட்டு வாடுகிற மாதிரி பல செயல்கள் செய்து...

நரைகூடி கிழப் பருவம் எய்தி - நரை கூடுவதும் கிழப்பருவம் எய்துவதும் நாம் பிரயத்தனப்படுவதால் நடப்பவை அல்ல; தாமாகவே நடக்கிற விஷயங்கள். சீனியர் என்று அந்தஸ்து சொல்வார்கள். அதற்கு நாம் ஒன்றுமே பண்ண வேண்டாம். காலம் தன்னால் ஓடும். நாட்கள் ஆண்டுகளாகும் - நரை கூடி, கிழப்பருவம் வந்துவிடும்!

கொடுங் கூற்றுக் கிரையெனப் பின் மாயும் வேடிக்கை மனிதர்...

தான் இருக்கக்கூடிய இடத்தைச் சுற்றி ஓர் உலகத்தை நிர்மானித்துக் கொண்டு, அந்த உலகம் சரியாக இயங்க வேண்டும் என்று பாடுபடுகிறாள் பெண்.

''ஒரு வேடிக்கை மனிதனாக நான் வாழ்ந்துவிடுவேன் என்று நினைத்தாயா பராசக்தி? அப்படி நான் வாழக்கூடாது!'' என்று கேட்டவர், அந்த பராசக்தி எப்படி இருப்பாள் என்பதற்கும் ஒன்று சொன்னார்:

எனக்கு ஒருவேளை துன்பம் நேர்ந்தால் அதைத் துடைக்கக்கூடியவள். எப்படி...? 'பஞ்சுக்கு நேர் பல துன்பங்களாம் இவள் பார்வைக்கு நேர் பெரும் தீ!'

பாரதியை மாதிரி வேறு யாரும், துன்பங்களைப் 'பஞ்சு' என்று பாடியதில்லை. 'ஐயோ, மலை போல் துன்பம்!' என்றுதான் சொல்வார்கள். பாரதிதான் 'பஞ்சுக்கு நேர்' என்றான். காரணம் என்ன தெரியுமா...? 'இவள் பார்வைக்கு நேர் பெரும் தீ'! பராசக்தியினுடைய பார்வை பெருந்தீயாக இருக்கிறபோது, நெருப்புக்கு முன் பஞ்சாகிவிடுகின்றன துன்பங்கள். அவ்வாறு அவை

அழிந்துபோவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்...? 'தஞ்சம் என்றே உரைப்பீர்!' - அம்பிகை பராசக்தியிடம் தஞ்சமடைய வேண்டும். எவ்வாறு..? வஞ்சனையின்றி, பகையின்றிச் சூதின்றி அவள் பாதங்களில் சரணடைய வேண்டும்! அப்படி நெஞ்சில் வஞ்சமில்லாமல் செய்கிறபோது, அந்த சக்தியாக இருக்கக்கூடியவள், லோக ஜனனியாக இருக்கக்கூடியவள் எல்லாவிதமான நன்மைகளையும் நமக்குத் தருவாள்.

- இதுதான் அம்பாளை ஆராதிப்பவர்கள் அனுபவபூர்வமாக, அனுபூதி ரீதியாகச்



சொல்லியிருக்கிற உண்மை. அந்த அனுபூதியின் அழகைத்தான் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் பல்வேறு விதங்களில் நமக்குக் காட்டுகிறது.

அப்படிப்பட்ட ஒரு திருநாமம்தான் பக்திமத் கல்பலதிகா. **லதிகா, லதா** என்றாலே கொடி. கற்பக மரமாக, தருவாக அம்பாள் இருக்கிறாள் என்று சொல்வதைவிட, கொடியாக இருக்கிறாள் என்று சொல்வதில் ஓர் அழகு இருக்கிறது.

கல்பகவிருக்ஷத்துக்கும் கல்பகக் கொடிக்கும் என்ன வித்தியாசம்? இரண்டுமே கேட்டதைக் கொடுப்பவைதான். ஆனால், மரம் கொஞ்சம் வலிமையானது! ஆனால், கொடி எவ்வளவு மென்மையாக இருக்கிறது! பக்கத்தில் பக்தர்கள் அணுகி நிற்பதற்கு ஒரு கொடி எவ்வளவு மென்மையாக இருக்கிறதோ அவ்வளவு மென்மையாக இருக்கிறாள் அம்பாள். இதைக் காட்டுவதற்கு வந்த திருநாமமே **பக்திமத் கல்பலதிகா**.

அபிராமி பட்டர் பாடுகிறபோது 'கொடியே!' என்பார். கொடி, சாதாரணமாக எதன் மீதாவது படரும்; ஒரு கொழுக்கொம்பை எப்போதும் தேடும். பெண்களும் அப்படி தங்கள் குடும்பம், கணவன் - குழந்தைகள் அல்லது தங்கள் அலுவலகம் என்கிற ஒன்றை மையமாக வைத்துக்கொண்டு, அதனைச் சுற்றி தங்கள் உலகத்தை அமைத்துக்கொள்கிறார்கள். இதற்கு வெளியேயான உலகம் பெரிதாக இருந்தாலும், அவர்கள் சார்ந்துள்ள இந்த இடம்தான் அவர்களுக்குப் பெரிது! தான் இருக்கக்கூடிய இடத்தைச் சுற்றி ஓர் உலகத்தை நிர்மாணித்துக்கொண்டு, அந்த உலகம் சரியாக இயங்கவேண்டும் என்று பாடுபடுகிறாள் பெண்.

அம்பாள், எல்லாவற்றுக்குமே கொழுக்கொம்பாக அல்லவா இருக்கிறாள்! அவளைப் போய்க் கொடி என்று சொல்லலாமா..? என்று கேட்கத் தோன்றும். ஆனால், அம்பாளுக்கோ, கொழுக்கொம்பாக இருப்பதைவிட கொடியாக இருக்கத்தான் ஆசையாம்! தன் பக்தர்களாகிய குழந்தைகள் அறிந்தும் அறியாமலும் சொல்கிற மழலை மொழிகளையெல்லாம்கூட, தாயின் வாத்ஸல்யத்துடன் கேட்கிறாள், அனுபவிக்கிறாள். ஆகவேதான் ஜகன் மாதாவான அவளே பக்திமத் கல்பலதிகா ஆகிறாள். தனது பக்தர்களையே ஆதாரமாகக்கொண்ட கொடியாக இருப்பதில் ப்ரீதி அடைகிறாள்.

இத் தொடரில் இடம் பெறுபவை, சென்னை, வீனஸ் காலனி, ஆஸ்திக சமாஜத்தில் டாக்டர் சுதா சேஷய்யன் ஆற்றிய உபன்யாஸங்களின் தொகுப்பு.

ஸ்ரீ லலிதா இரண்டாம் பாகம் நிறைந்தது. மூன்றாம் பாகம் சிறிது இடைவெளிக்குப் பின் தொடரும்


சமீபத்தில் ஸ்ரேயாவிடம் பேசியபோது அவர் உதிர்த்த 'சினி' மொழிகள்!



● கடைசியா என்ன படத்துல நடிச்சோமோ அதை வைச்சுத்தான் சினிமாவில் நமக்கு மதிப்பு.

ரஜினியோட காந்த சக்தியால, எனக்கும் நிறைய ரசிகர்கள் கிடைச்சிருக்காங்க.

● என்னை ரொம்ப அழகா காண்பிச்ச காமிராமேனுக்கும், உடை வடிவமைப்பாளருக்கும் இந்தச் சமயத்துல நான் நன்றி சொல்லணும்.



● குட்டைப் பாவாடைகள் அணிஞ்சு எனக்குப் பழக்கமாயிடுச்சு. மத்தபடி என்னால யாரும் வருத்தப்படக்கூடாதுன்னு நினைக்கறவ நான்.

● இந்தப் பிரச்னையால என்னைப் பத்தி இந்தியா முழுக்கப் பேசினாங்க. என்னை நேர்ல பார்க்காதவங்க எல்லாம், எனக்கு ஆதரவா பேசினது மனத்துக்கு இதமா இருந்துச்சு. ஒரு நல்ல நடிகையா மட்டும் மக்கள் மத்தியில் பரபரப்பா பேசப்படணும்னு நினைக்கிறேன்.



● என்ன உடை உடுத்தினாலும், பார்க்க அழகா இருக்கணும்னு நான் நினைப்பேன்.

● சிவாஜி படத்துல ஒர்க் பண்ணும்போது, ஷங்கர் சார் இம்சை அரசன் டி.வி.டி. கொடுத்தார். நான் அந்தப் படத்தையும் வடிவேலு காமெடியையும் ரொம்ப ரசிச்சேன். 'ஜிம் கேரி' ஸ்டைல்ல நம் ஊர்ல இருக்கற காமெடியனா நான் வடிவேலுவைப் பார்க்கறேன்.



● 'சேது' பார்த்தபிறகு நான் விக்ரமோட பெரிய ரசிகை. அவரோட நடிக்கறது என்னோட லக்குன்னு நினைக்கிறேன்.

● த்ரிஷா என் பெஸ்ட் ஃப்ரெண்ட். எப்போ சந்திச்சாலும், சினிமாவைத் தவிர மத்த எல்லா விஷயங்களையும் பேசுவோம். எனக்கு, சிவாஜி வாய்ப்பு கிடைச்சபோது முதல்ல போன் பண்ணி, வாழ்த்துச் சொன்னவர் த்ரிஷாதான். நீண்ட நாள் நட்பு எங்களுடையது.



● ஃபேவரிட் ஃபைவ் ஃபிலிம்ஸ் : 'சில்ட்ரன் ஆஃப் ஹெவன்', 'கலர் ஆஃப் பேரடைஸ்', 'காக்க காக்க', 'பிதாமகன்', 'இதயத்தைத் திருடாதே'...

– சநகன்


“என்னால் யாரும்
வருத்தப்படக்கூடாது...”



புள்ளிகள்... கோலங்கள்...

பருதவம் சுகுமாரன்

வாரந்தோறும் பார்த்தும், கடற்கரை சலிப்புத் தராத ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. வீட்டில் இரைச்சல் அதிகம் என்பதால், பொன்ராஜ் கடற்கரைக்குப் புத்தகங்களோடு வந்து, விளக்கு வெளிச்சத்தில் படிப்பான்.

வளர்ந்து, தொழில் துவங்கி, இட மாறுதலாகிவிட்டான். இங்கே வருவதற்கு அவகாசம் அமைவது அபூர்வமாகி விட்டது.

நீண்ட இடைவேளைக்குப் பின் வந்திருக்கிறோம்.

ஆனால், எந்த வேலைக்காக வந்திருக்கிறோம் என்று நினைத்தபோது எரிச்சலாக இருந்தது.

இப்போது, கடற்காற்று மட்டுப்பட்டு கறுப்பு நதியின் (கூவம்) நாற்றம் மேலெழுந்தது.

கடிகாரத்தில் நேரம் பார்த்தார். 'அவன்' குறிப்பிட்டிருந்த நேரம் கடந்திருந்தது. முன்னும் பின்னும் நடை போட்டார்.

ஒவ்வொரு மணித்துளியையும் கரன்ஸியாக மாற்றுபவருக்கு, ஒரு அனாமத்து ஆளுக்காக மணிக்கணக்கில் நேரத்தை வீணடிப்பது கொடுமையாகப்பட்டது.

அலுவலாக நிமிர்ந்தபோது, போலீஸ் அதிகாரி கிட்டத்தில் வந்து,

''அவன் வரமாட்டான் சார். சும்மா மிரட்டிப் பார்த்திருக்கான். நீங்க கிளம்புங்க. இன்னொரு முறை ஃபோன் வந்தால் பார்த்துக்கலாம்'' என்று வழியனுப்பினார்.

பொன்ராஜ் ஏமாற்றத்துடன் காரில் அமர்ந்து, உயிர்ப்பித்தார்.

கார் அடையாறு பாலத்தில் ஏறிய போது, பைக் ஒன்று வழிமறித்தது.

பொன்ராஜ், வண்டியின் வேகத்தைக் குழப்பத்துடன் குறைத்தார். பைக் அருகில் கொண்டுபோய் நிறுத்தினார்.

ஹெல்மெட் அணிந்த 'பைக்வாலா' வண்டியை அவர் பக்கம் நகர்த்தி வந்து, ஹெல்மெட்டைக் கொஞ்சம் தளர்த்தி,

''என்னைப் பின்தொடர்ந்து வாங்க. மறுபடியும் போலீஸுக்கு முயற்சி பண்ண வேண்டாம்'' என்று எச்சரித்து, பைக்கை முன்னால் செலுத்த...

பொன்ராஜ் ஒரு நொடி யோசித்து பின் தொடர்ந்தார்.

வலது கையால், ஸ்டியரிங்கைக் கையாண்டபடி, இடது கையால் டாஷ் போர்டைத் திறந்து பார்த்து மூடினார்.

உள்ளே, கைத்துப்பாக்கி பதுங்கியிருந்தது.

பைக் வழிகாட்டிக்கொண்டு முன்னால் போய்க்கொண்டிருந்தது. 'சட்'டென்று ஏதோ ஒரு வளைவில் திரும்பி மாயமாகியது. சிறிது நேரத்தில் எதிர் வரிசையில் வந்து ஹாரன் அடித்தது.

''அரைவட்டம் அடித்து, என்னை ஃபாலோ பண்ணுங்க...'' என்றான்.


'என்ன கண்ணாமூச்சி இது..!' பற்களை நெரித்தார் பொன்ராஜ்.

(தொடரும்)

ஒரு பக்கத் தொடர்

அஞ்சலி

அண்மையில் மறைந்த கிறிஸ்தவ மதபோதகர் டி.ஜி.எஸ்.தினகரன் பற்றிய நினைவுகளை, நம்மோடு பகிர்ந்து கொண்டார் புகைப்படக் கலைஞர் யோகா.



"என்னுடைய மனைவி இரண்டாவது முறையாகக் கருவுற்று இருந்த நேரம், ஸ்கேன் வசதிகள் இல்லாத காலம். மருத்துவர்கள் ஆளுக்கு ஆள் ஏதோ சொல்ல நாங்கள் குழம்பிப் போயிருந்தோம். ஒருவர் 'இரட்டை', இன்னொருவர் 'குழந்தை அதிக வளர்ச்சி' என்றனர். மற்றவர் 'கருப்பை திரவ அளவு அதிகம்' என்றார்.

கால் நூற்றாண்டு வாஞ்சை!

சகோ.தினகரனிடம் ஆலோசனை பெற எண்ணி அப்பாயின்ட்மென்ட் கேட்டேன். அவர் அப்போதுதான் ஜெருசலம் பயணம் முடித்து வந்திருந்தார். இரண்டு நாட்கள் கழித்து, 'பிரதர் உங்களை அழைக்கிறார்' என்று செய்தி வந்தது; போனோம். புன்னகையோடு எங்களை வரவேற்று, என் மனைவி சாவித்திரியிடம் இரண்டு பேரிச்சம் பழங்களைக் கொடுத்தார். பிறகு மனைவியின் தலையைத் தொட்டு பிரார்த்தனை செய்தார்.

"தம்பி, ஒண்ணும் கவலையே வேண்டாம். இது இரட்டைப் பிள்ளைங்கதான். சுகப் பிரசவம் ஆயிடும்'' என்றார் தினகரன். அப்படியே சுகமாக குழந்தைகள் பிறந்தன.

அவரைப் பற்றி நிறைய சொல்லிக் கொண்டே போகலாம். இலட்சக்கணக்கானவர்களின் சுகத்துக்காகப் பிரார்த்தனை செய்த சகோதரருக்கும் சோதனை வந்தது. ஒரே மகள் ஏஞ்ஜெலினா, அவருடைய கண்முன்னாலேயே விபத்தில் பலியானார். மனிதன் என்கிற முறையில் அவரும் பெரும் துயர் அடைந்திருப்பார். ஆனாலும் தேவ ஊழியத்தில் ஈடுபட்டிருந்தால் சீக்கிரமே சமநிலைக்கு வந்து, மற்றவர்களுக்காக ஜெபிக்கத் தொடங்கிவிட்டார்.

'இந்த மாதிரியான சோகம் எத்தனை கொடுமையானது' என்பதை இறைவன் எனக்குக் காட்டியிருக்கிறார். அப்போது தான் மற்றவருடைய துயரங்களுக்காக கடவுளிடம் நான் முறையிட முடியும்' என்கிற மாதிரி அவர் கூட்டத்தில் குறிப்பிட்டதை நினைத்துக்கொள்கிறேன்.

கால் நூற்றாண்டு காலம் சகோதரர் என்னை வாஞ்சையோடு, 'தம்பி' என்று அழைக்கும் பேறு பெற்றிருந்தேன். சிறிதளவு கூட என்னிடம் தம்முடைய மதக்கோட்பாடுகளை வலியுறுத்தியது இல்லை. காஞ்சி பெரியவர்கள், புட்டபர்த்தி சத்யசாயி போன்ற நான் வணங்கிப் போற்றும் பெரியவர்களின் வரிசையிலே தினகரனும் இருக்கிறார்.

- எஸ்.பால்



அடிக்கடி சிறுநீர் கழித்தால் ஆபத்தா?

பல்லில் கூச்சம் ஏற்பட்டால் எவ்வளவு நாட்கள் வரை பொறுத்திருந்து, டாக்டரை அணுக வேண்டும்? பல் கூச்சம் தானாகவே மறைந்துவிட வாய்ப்பு உண்டா?

- தேவிப்ரியா, திருச்சி

பல் மருத்துவர் டாக்டர் ஆறுமுகம் : கூச்சம் எதனால் ஏற்பட்டது என்பதைப் பொறுத்துதான் சிகிச்சை செய்ய முடியும். பல்லில் சொத்தை ஏற்பட்டு அதனால் கூச்சம் ஏற்பட்டால், அதற்கு மருத்துவ ஆலோசனை கட்டாயம் தேவை.

சில சமயம் சைனஸ் காரணமாகவும் பல் கூச்சம் (முக்கியமாக மேல் கடைவாய்ப்பல்) உண்டாகலாம். சைனஸுக்கான மாத்திரைகளை உட்கொண்டு, அது குணமாகும்போது பல்கூச்சம் மறைந்துவிடும். அதேபோல காஸ்டிரிடிஸ் காரணமாக, அதிக அமிலம் உருவாகி (Hyper acidity), அதனாலும் பல் கூச்சம் ஏற்படலாம். மேற்படி நோய் குணமாகும்போது, அதன் விளைவுகளில் ஒன்றாக பல்கூச்சமும் மறைந்துவிடும்.

ஐஸ்கிரீம் சாப்பிடும்போது, எப்போதாவது பல்லில் கூச்சம் ஏற்பட்டால் பரவாயில்லை; பொறுத்துப் பார்க்கலாம். ஆனால், காபியோ தண்ணீரோ கூட குடிக்க முடியாத அளவுக்கு, பல்லில் கூச்சம் என்றால், அதாவது நம் தினசரி வாழ்க்கையையே பாதிக்கும் அளவுக்கு இந்தக் கூச்சம் இருந்தால், உடனடியாக பல் மருத்துவரை அணுகுவதுதான் நல்லது.

எனக்கு வயது 54. இப்போதெல்லாம்

ப்ரிஸ்கிரிப்ஷன்

நான் அதிக நேரம் சிறுநீர் கழிக்கிறேன். இது இயல்பான விஷயமா, டாக்டரை ஆலோசிக்க வேண்டுமா?

- சுந்தரமூர்த்தி, கரூர்

சிறுநீரக இயல்துறை நிபுணர் டாக்டர் கோபால கிருஷ்ணன் : அதிக தடவை சிறுநீர் கழிப்பது, சர்க்கரைநோய் எனப்படும் நீரிழிவு நோய்க்கு ஓர் அறிகுறியாக இருக்கலாம். ஆனால், நீங்கள் அதிக நேரம் சிறுநீர் கழிப்பதாகக் குறிப்பிடுகிறீர்கள். ஆண்களின் உடலில் உள்ள பிராஸ்டேட் சுரப்பி விரிவடைவதன் காரணமாகவும் சிறுநீர்வரும் பாதை நெருக்கப்படலாம். இதன் காரணமாக சிறுநீர் குறைவான அளவில் வெளியேறலாம். (அதனால்தான் அதிகமாகிறது). ஆனால், 51 வயதில் பிராஸ்டேட் சிக்கல் வருவது கொஞ்சம் அபூர்வம். அறுபது வயதுக்கு மேல்தான் இது ஏற்பட வாய்ப்பு அதிகம்.

'யுரெத்ரா' எனப்படும் சிறுநீர்க் குழாயில் அடைப்பு ஏற்படுவதன் காரணமாகவும் சிறுநீர் குறைவான அளவில் வெளியேறலாம்; சிறுநீர் வெளியேறும் இடத்தில் ஏற்பட்ட கிருமிகள் காரணமாகவும் இந்த அடைப்பு உண்டாகலாம். ஏன், காசநோய்கூட இந்த அடைப்புக்குக் காரணமாக இருக்கலாம். எந்தவித காரணம் இல்லாமலேயேகூட அடைப்பு உண்டாகலாம்.



● ஆறுமுகம்

எனவே, மருத்துவரைச் சந்தித்து, தேவைப்படும் பரிசோதனைகளைச் செய்து கொண்டு, அவரது ஆலோசனையைப் பெறுவதுதான் நல்லது.

- ஜி.எஸ்.எஸ்.

கிரிக்கெட்

ச.ந.கண்ணன்







விளையாட்டு என்கிற புனித அடையாளத்தைத் தாண்டி, பல பரிமாணங்கள் எடுத்துவிட்டது கிரிக்கெட்.

மைதானத்தில் ஒருவருக்கொருவர் நண்பர்களாக இருக்க முடியாது என்று சென்ற மாதம் சைமண்ட்ஸ் சொன்னார். இப்போது அதையே டோனியும் வழி மொழிகிறார். இன்று அயல் வீரர்களோடு கைகோர்த்துக் கொண்டு, சச்சினையும் கங்குலியையும் எதிர்க்க, இதர இந்திய வீரர்கள் தயாராகிவிட்டார்கள். 'நாட்டுக்காக விளையாடுவதைவிட வேறு என்ன பெருமை இருக்க முடியும்' என்று கிரிக்கெட் வீரர்கள் பேட்டிக் கொடுத்ததெல்லாம் பழைய கதையாகிவிட்டது.

கிரிக்கெட் வீரர்கள் இன்றைக்கு நுகர்பொருளாக மாறிவிட்டார்கள். டோனியை வைத்து இவ்வளவு சம்பாதிக்க முடியும் என்று கணக்குப் போட்டு, அவரை ஆறுகோடிக்கு ஏலம் எடுக்கிறது இந்தியா சிமெண்ட்ஸ். விளம்பரங்களில் நடிக்க கிரிக்கெட் வீரர்கள் ஒவ்வொருவருக்கும் இத்தனை கோடி ரூபாய் என்கிற மதிப்பீடு, இன்று மைதானம் வரைக்கும் வந்துவிட்டது. சர்வதேச வீரர்களை மூன்றாயிரம் கோடிக்கு இதர அணிகளிடம் 'விற்றிருக்கிறது' பி.சி.சி.ஐ. (டி.வி. உரிமம் மட்டும் நான்காயிரம் கோடி ரூபாய்)! ஆனால், இதில் உள்ள ஒரு முரணை எல்லோரும் கவனிக்கத் தவறி விட்டார்கள். கபில்தேவை மையமாகக்கொண்ட ஐ.சி.எல். உள்ளே நுழைந்தபோது, பி.சி.சி.ஐ. அணித் தலைவர் பவார் கூக்குரலிட்டார். 'டெஸ்ட் மேட்ச்தான் உண்மையான கிரிக்கெட். பணம் ஒன்றே ஐ.சி.எல்லின் குறிக்கோள்' என்றெல்லாம் பேசினார். ஆனால், இன்று அதே பணம்தான் அவர் வாயையும் அடைத்திருக்கிறது.

சரி, பணம்தான் எங்கள் உயிர்மூச்சு என்று வந்து விட்ட பிறகு அதில் பாகுபாடு பார்த்திருக்கக் கூடாது. சச்சின், கங்குலி, யுவ்ராஜ் சிங் போன்ற சில வீரர்களை 'ஐகான்' என்று முத்திரையிட்டு, அவரவர் மாநிலத்துக்கு நேர்ந்து



விட்டார்கள். இதனால், சச்சினை விடவும் டோனிக்கு ஒன்றரை கோடி அதிகச் சம்பளம். இதில் இருக்கக் கூடிய நியாயத்தை ஆராய முற்படுவது வியர்த்தம்! இன்று உலகிலேயே சிறந்த பந்து வீச்சாளராகக் கருதப்படுபவர்கள் ப்ரெட் லீயும் முரளிதரனும்தான். இந்தியாவில் ஜாகிர் கானுக்கு நிகர் என்று யாரையும் சொல்ல முடியாது. ஆனால், இவர்கள் எல்லோரையும் தூக்கிச் சாப்பிட்டிருக்கிறார் நேற்று வந்த இஷாந்த் சர்மா! இன்று உலகிலேயே அதிக அளவில் விலை போன பந்துவீச்சாளராக 3.80 கோடியை பாக்கெட்டில் போட்டிருக்கிறார்! துக்கடா 1.80 கோடிக்கு விலை போயிருக்கிறார் ஜாகிர் கான்.

இதைப் பார்த்து, முன்னாள் பிரபலங்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு நேர்ந்த அனுபவம் அப்படி. 1956-ல் இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்கும் டெஸ்ட் மேட்ச் தொடர் நடைபெற்றது. அப்போது ஒரு நாளைக்கு ஐம்பது ரூபாய் டெஸ்ட் மேட்ச் வீரர்களுக்குச் சம்பளம்! ஒரு டெஸ்ட் மேட்சில், நான்கு நாளில் நியூசிலாந்தை வெற்றி கண்டது இந்திய அணி. அந்த ஒரு காரணத்துக்காகவே ஐந்தாவது நாளுக்கான கட்டணத்தை வீரர்களின் சம்பளத்திலிருந்து கழித்து விட்டார்கள்! தர்க்கம் புரிந்த வீரர்களுக்குக் கிடைத்த பதில் - 'உங்களை யார் நான்கு நாட்களில் ஜெயிக்கச் சொன்னார்கள்?'

அதேபோல 1952ல் இங்கிலாந்து சென்ற இந்திய அணியிலிருந்து வினோத் மன்கட் நீக்கப்பட்டார். சொல்லப்பட்ட காரணம், இங்கிலாந்து கவுண்டி கிளப்பில் விளையாடி கூடுதலாகச் சம்பாதித்ததால்!

பண முதலைகள் நிறைந்த இந்த உலகில் வி.வி.எஸ்.லக்ஷ்மண் செய்த காரியம், அடுத்த நூறு ஆண்டுகளுக்குப் பேசப்படும். சச்சின், கங்குலிபோல அவரையும் 'ஐகான்' என்று முத்திரை குத்தியது பி.சி.சி.ஐ. அதன்படி, ஹைதராபாத் அணியில் ஏலம் போகும் உச்சபட்ச வீரரைக் காட்டிலும், அவருக்குப் பதினைந்து சதவிகிதம் கூடுதலாகச் சம்பளம் வழங்கப்படும். ஆனால், அதிக விலை கொடுத்து மட்டுமே சிறந்த வீரரைத் தேர்ந்தெடுக்க முடியாது என்று ஐகான் தகுதியிலிருந்து விலகினார் லக்ஷ்மண். அதன்பயனாக சைமண்ட்ஸை 5.4 கோடிக்கு வாங்கியது ஹைதராபாத் அணி.

வரும் காலங்களில் ஒரு புதிய கிரிக்கெட் உணர்வைத் தூண்டப் போகின்றன ஐ.பி.எல்.லும் ஐ.சி.எல்.லும். சென்னை அணியும் மும்பை அணியும் ஆடும்போது சச்சின் விக்கெட்டை சென்னை வீரர் மார்கல் வீழ்த்தினால், நாம் யாருக்காகச் சந்தோஷப்பட முடியும்? இத்தனை நாட்களாக சச்சினையும் கங்குலியையும் நம் பிரதேசத்து மனிதர்களாகப் பாவித்துவிட்டோம். திடீரென்று எப்படி அவர்களை அந்நியர்களாகக் கருதப்போகிறோம்?

குளோபலைசேஷன் ஆஃப் கிரிக்கெட் என்பது இதுதான் போலும்!



'காளை' படத்தின் இயக்குனர் தருண்கோபி, சற்று வித்தியாசமானவர். சுனாமியில், பெற்றோர்களை இழந்த ஏழு குழந்தைகளைத் தத்தெடுத்து திருவண்ணாமலை ஆசிரமத்தில் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார். அவருடனான சந்திப்பிலிருந்து...

'காளை', 'திமிரு' படத்தை ஞாபகப் படுத்துதே...?

திமிரு படத்தோட கதையும், காளை படத்தோட கதையும் வேறு வேறு களம். ஆக்ஷன் படமா இருக்கிறதுன்னால உங்களுக்கு அப்படித் தெரியுது. திமிரு படத்தோட திரைக்கதை வேகம், 'காளை' படத்துலயும் இருக்கணும்னு நினைச்சேன். நான் நினைச்சது வந்தது. ஆனால் ஆடியன்ஸ்தான் கொஞ்சம் புரியலைன்னு சொல்லிட்டாங்க;

சிம்புவின் தலையீடு இருந்ததா..?

சிம்பு, நல்ல மனிதர். மேலும், சினிமாவின் எல்லாத் துறையிலயும் அனுபவமும், திறமையும் உள்ளவர். 'காளை' படத்தோட கதையைக் கேட்டதுமே ஓ.கே. சொல்லிட்டாரு. எனக்கு ஒண்ணும் தெரியலைனாதான் மத்தவங்க தலையீடு இருக்கும். கருத்து யாரு சொன்னாலும் நான் கேட்டுக்குவேன். ஆனா, முடிவு நான்தான் எடுப்பேன்.

அடிதடி ஆக்ஷன் படமா பண்றீங்களே? யதார்த்தமான கதையைத் தேர்ந்தெடுக்க பயமா?

நான் யதார்த்தவாதி. எனக்கு சாஃப்டான கதைகளும் ரொம்பப் பிடிக்கும். முதல் ரெண்டு படமும் ஆக்ஷன் படமா கொடுத்ததினால, எல்லோரும் ஆக்ஷன் படத்தையே எதிர்பார்க்கிறாங்க. கண்டிப்பா யதார்த்தமான கதையை நான் டைரக்ட் பண்ணுறதுக்காகக் காத்திருக்கிறேன்.

உங்க படமெல்லாம் ஹீரோவை மையமா வைச்ச படமா இருக்கே? ஹீரோயினுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது இல்லையே?

ஹீரோவை நம்பித்தானே பிஸினஸ் இருக்கு. அப்புறம், ஹீரோயினுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது இல்லைனு சொல்றது தப்பு... காளை படத்தோட கதையே ஹீரோயினைச் சுற்றித்தான் நடக்கும். என்னோட படத்துல எல்லா கேரக்டர்களும் பேசப்



“நான்

இயக்குனர் தருண்கோபி

படணுமுன்னுதான் நினைப்பேன்.

சங்கீதா நல்ல நடிகை, அவங்களுக்கு ஏத்த மாதிரி கதாபாத்திரம் கொடுக்கலையே ஏன்?

என்னோட படத்துல பெரிய நடிகை சின்ன நடிகைன்னுலாம் பிரிச்சுப் பார்க்கமாட்டேன். எல்லார் குள்ளயும் திறமை இருக்கு. அதை வெளியே கொண்டு வர்றதுதான் இயக்குனரோட வேலை. மேலும், சங்கீதாவோட கேரக்டர் நல்லாவே பேசப் பட்டதே...

இப்ப வர்ற இயக்குனர்கள் உடனே தயாரிப்பாளர், ஹீரோன்னு உருமாறுறாங்களே நீங்க?

அந்தந்தத் துறையில் திறமை இருந்தா யாருவேணாலும் ஹீரோவா ஆகலாம். இப்ப நான்கூடத் தான் ஹீரோவா நடிக்கப் போறேன். என் அண்ணன் பேருல 'மதுரா



"யதார்த்தவாதி"

டாக்கீஸ்'னு ஒரு கம்பெனி ஆரம்பிச்சியிருக்கேன். திறமையுள்ள ஆஃபீஸ் பாய்ஸைக் கூட உதவி இயக்குனரா நான் அறிமுகப்படுத்தியிருக்கேன். என்கூட பதினைந்து உதவி இயக்குனர்கள் இருக்காங்க. படம் இல்லாம வீட்டில இருக்கும்போதுகூட என்னோட உதவி இயக்குனர்களுக்கு மாதா மாதம் சம்பளம் கொடுக்கிறேன்.

யாரோட படத்துல ஹீரோவா நடிக்கிறீங்க...?

கண்டிப்பா என்னோட படம் இல்லை. என் உதவி இயக்குனர்களில் ஒருவரோட இயக்கத்துல நடிக்கறேன். அவர் யாரு? படத்தோட டைட்டில் என்ன எல்லாம் விரைவில் அறிவிப்பு வரும்.

ரீமேக் படம் சினிமாவுக்கு ஆரோக்கியமானதா?

ஆடியன்ஸ் ரசிக்கிறது மாதிரியான படத்தைக் கொடுத்தா, எதுவுமே ஆரோக்கியமானது. பழைய படத்தைச் சிதைக்காத அளவுக்கு இருக்கணும்.

அடுத்து நீங்க என்ன பண்றீங்க...?

வி.ஏ. துரை சார் தயாரிப்புல, ஆர்யா நடிக்க ஒரு படம் பண்றேன். தெலுங்குல யும் ஒரு படம் பண்ண பேச்சு வார்த்தை நடக்குது. கூடவே நானும் ஹீரோவா நடிக்கப் போற கதையோட வேலையும் நடக்கிறது.

– ஆ. முத்துராமலிங்கம்




ஓலைச்சுவடிகளில் இருந்த அரிய தமிழிலக்கியச் செல்வங்களைத் தேடிச் சேர்த்துத் திரட்டித் தந்தவர் தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர். தமிழக அரசின் சார்பில் அவரது சொந்த ஊரான உத்தமதான புரத்தில் எழுப்பப்பட்ட நினைவு இல்லத் திலும், அரசியல் புகுந்து விளையாடுவதால் வழக்கம்போல இன்னும் திறக்கப்படாம லேயே கிடக்கிறது. அண்மையில் இந்தப் பிரச்னையில் தலையிட்டுப் போராட்டத்தில் குதித்தது அ.தி.மு.க. தரப்பு.

இது குறித்து, **'உதிர்ந்து விழும் உ.வே.சா.வீடு!'** என்கிற தலைப்பில் 5.12.2001 கல்கி இதழில் கட்டுரை வெளியாகி யிருந்தது. அப்போதைய தமி ழக முதல்வர் ஜெயலலிதா, உ.வே.சா. இல்லம் 23







இலட்ச ரூபாய் செலவில் நினைவு இல்லமாகக் கட்டித்தரப்படும் என அறி வித்திருந்தார். அதன் பின்னர், இந்த நினைவு இல்லத்தை நிர்வகிக்க, உ.வே.சா. பேரன் க.வெங்கடகிருஷ்ணன் உட்பட பதின்மூன்று பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

சுமார் 2,600 சதுர அடி மனையில், 1,600 சதுர அடியில் தரைத்தளம் மற்றும் முதல் தளம் கட்டத் தீர்மானிக்கப்பட்டு, அதன் பணிகள் 2006ஆம் ஆண்டு மே மாதத்தில் தொடங்கப்பட்டன. இரண்டு ஆண்டுகள் நிறைவு பெறவிருக்கும் இச் சமயத்தில், இன் னமும் உ.வே.சா. நினைவு இல்லம் திறக் கப்படாதது, தமிழ் ஆர் வலர்கள் பலரையும் முகம் சுளிக்க வைத்திருக்கிறது

''ஆயிரத்து அறுநூறு சதுர அடியில் ஒரு கட்டடம் கட்டிமுடிக்க ரெண்டு வரு ஷமா தேவைப்படும்? அ.தி.மு.க. ஆட்சியில கொண்டு வந்த திட்டம்னு பாரபட்சம் பார்க்கறாங்க. அ.தி.மு.க. சார்பா போராட்டம் நடத்தப்படும்னு அறிவிச்சதுக்கு அப்புறம், ரெண்டு நாள்ல மின் இணைப்பு வாங்கி யிருக்காங்க. ஜெயலலிதா அறிக்கை விட்ட பின்னாடிதான், வேலையே வேகமா நடந்து கிட்டிருக்கு'' என்கிறார் திருவாரூர் மாவட்ட அ.தி.மு.க இலக்கிய அணி துணைத் தலைவர், கோடைவிடி குருசாமி.

''ஜெயலலிதா அறிக்கை விட்டதுக் கப்புறம்தான் வேலைகள் வேகமா நடக் குதுன்னு அ.தி.மு.க.வினர் சொல்றதெல்லாம் அரசியல் ஸ்டண்ட். கட்டிட காண்ட்ராக்டர் தன்னோட வேலையப் பாதியில விட்டுட்டுப் போயிட்டார். அதனாலதான் கொஞ்சம் லேட்



உயிர் பெறுமா உ.வே.சா. நினைவு இல்லம்?


ஆ யி டு ச் சு. மத்தப்படி அ.தி.மு.க ஆட்சி யில கொண்டு வந்ததுங்கறதுக்காக, தி.மு.க. எதையும் ஒதுக்கலை. அவங்க ஆட்சியில, ஸ்கூல் பிள்ளைங்களுக்கு இலவச சைக்கிள் தந்தாங்க. அதுக்காக தி.மு.க. அதை நிறுத்தியாவிட்டது. உ.வே.சா. நினைவு இல்லப் பணிகள்ல அரசியல் வேறுபாடு எப்படி வரும்? உ.வே.சா. நம் உலகத் தமிழர் கள் அனைவருக்கும் உரித்தானவர். அவரை அ.தி.மு.க.வோ, தி.மு.க.வோ பங்கு போட் டுக்க முடியாது!'' என்று குற்றச்சாட்டை மறுத்தார் பாபநாசம் பேரூராட்சி மன்றத் தலைவர் ஷேக் தாவூது.

நாம் பார்த்தவரையில் பணிகள், தொண் ணூற்றைந்து சதவிகிதம் நிறைவு பெற் றுள்ளன. மின் இணைப்புக் கிடைத்த பின்னர் தற்போது, தரைக்கு மார்பிள் பாலிஷ் போடும் வேலை நடைபெற்று வருகிறது. மின் உப யோகப் பொருட்கள் பொருத்தப்பட்டிருக் கின்றன. தரைத்தளம் ஆய்வரங்கமாகவும், முதல் தளம் ஓலைச் சுவடிகள், புத்தகங்கள் அடங்கிய நூலகமாகவும் இயங்க உள்ளன.

''**உ**த்தமதானபுரத்துக்குச் சாலை வசதி யும் இல்லை; பேருந்து போக்குவரத்து வசதியும் கிடையாது. நினைவு இல்லப் பணிகளை விரைந்து முடித்து, திறப்புவிழா நடத்தவேண்டுமென கிராமசபைக் கூட் டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளது. இன்னும் இரண்டு மூன்று வாரங் களில் வேலைகள் பூர்த்தியாகிவிடும். உள் ளூர் அமைச்சர்களை வைத்துத் திறப்பு விழா நடத்தப்படலாம் எனத் தகவல்கள் வருகின்றன. ஆனால், நி னை வு இல்லத்தை, தமிழக முதல்வர் கரங்களால் திறந்து வைக்கப்படுவதையே உத்தம தானபுரப் பொதுமக்கள் பெரிதும் விரும்புகின்றனர். உ.வே.சா. நினைவு தினமான ஏப்ரல் 28ஆம் தேதிக்குள் திறப்பு விழா நடை பெற வேண்டுமென்பதே எல்லோரு டைய எதிர்பார்ப்பு!'' எனக் கூறுகிறார். உத்தமதானபுரத்தைச் சேர்ந்த கோகிலா முத்தமிழ்ச் செல்வன்.

செய்திச் சித்திரம் :

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



- **ஏ.கே. நாசர்,**
திருப்பட்டினம்.

நட்டைக் காட்டிலும் உயர்ந்தது எது...?

இதே கேள்வியை என் நண்பனிடம் கேட்டேன். அதற்கு அவன், 'எவரெஸ்டைக் காட்டிலும் உயர்ந்தவன், அதன் சிகரத்தைத் தொட்ட டென்சிங்' என்ற உயர்வான பதிலைக் கூறினான். வாழ்க்கையில் எது உயர்வு, எது தாழ்வு என்பதை நமக்குச் சுட்டிக்காட்டும் நியாயத் தராசே, நமக்குக் கிடைத்த உயர்ந்த நட்புதான்.

- **மல்லிகா, மதுரை.**

பண்டைய மன்னர்களுக்குக் குடிப்பது, புகை பிடிப்பது போன்ற பழக்கங்கள் இருந்திருக்குமா...?

இதற்கெல்லாம் ஆதாரம் காட்ட கல்வெட்டு, ஓலைச்சுவடியை அனாவசியமாகத் தேடிப் போக வேண்டாம். அதான் Drin'king' Smo'king' இரண்டிலும் 'king' இருக்கிறதே...


- **மீனா ரங்கநாதன், மேற்கு மாம்பலம்**

சுஜாதாவுக்கு வயது ஏறாதது போல், அவரது பாத்திரங்களும் (கணேஷ் - வஸந்த்) வயது ஏறாமல், இளமையாக இருக்கிறார்களே எப்படி?

அர்ச்சுனனுக்கு 'ஸவ்யசாசி' என்று வேறு ஒரு பெயர் உண்டு. 'ஸவ்யசாசி' என்றால், இரண்டு கைகளினாலும் வில்லைவிடும் தேர்ச்சி பெற்றவன் என்று பொருள். எழுத்தாளர்களில் சுஜாதா ஒரு 'ஸவ்யசாசி'. ஒரு கையால் முதிர்ச்சியான 'இலக்கியமும்' படைப்பார். இன்னொரு கையால் இளமைத் துடிப்போடு 'கலக்கியமும்' செய்து காட்டுவார். உதாரணம் : இந்தியன், அந்நியன், சிவாஜி பட வசனங்கள். இந்தக் கேள்வியைச் சாக்காக வைத்து, 'சுப், சுஜாதா ஸாஹேப் கோ, சாஹித்ய அகாடமி அவார்ட், தேங்கே...?' என்று தமிழ்கூறும் நல்லுலகம் சார்பாக, நான் குரல் கொடுக்க விரும்புகிறேன். இப்போதாவது நீங்களும் என்னோடு சேர்ந்து, வீட்டு மொட்டை மாடிக்குச் சென்று, டெல்லிக்குக் கேட்கும் அளவுக்கு உரத்த குரலில் படிக்கும்படி, பணிவன்போடு உங்களைப் பல வந்தப்படுத்துகிறேன்.



விழிகள்



- **எம். அசோக்ராஜா,**
திருச்சி

விழிகளால் மொழி பேச பெண்களால் மட்டும் முடிகிறதே எப்படி...?

பேச வேண்டிய நமது வாயால் 'ஆ'வென்று பொளந்தபடி பார்த்துக் கொண்டிருந்தால், பெண்களின் விழிகள் மொழி பேசும்... காது கவிதை பாடும்... நாசி நான்மறை ஓதும்...!

- **ஜி.மாதேஸ்வரன்,**
தருமபுரி

மகாபாரத கிளைக் கதைகளில் உங்களைக் கவர்ந்த கதையைக் கூற முடியுமா?

கிரேஸியைக் கேளுங்கள்

நள மகாராஜாவின் கதை. இதை தர்மபுத்திரருக்கு வியாசர் சொன்னார். எனக்குச் சொன்னது திருப்பூர் கிருஷ்ணன்... ஹைக்கூ முறையில் சொன்னால், 'நளனின் கைப் பிடித்தாள் தமயந்தி... கால் பிடித்தான் சனி...' இந்தக் கதையைப் படிப்பவர்களை சனி பிடிக்காது என்பார்கள். அமுதசுரபி ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணனின் 'நள சரிதம்' படிப்பவர்களின் நாக்கில் சனி நிச்சயம் அமராது. இவரது உரை நடை, தமயந்தியின் சொகுசான அன்னநடை போல உள்ளது. விறு விறுப்பில், நளனின் தேர் போல வேகம்... நமது அறிவுப் பசியைப் போக்கவல்ல அற்புதமான



சார், உங்க மனைவியோட விழிகளைப் பற்றி என்ன நினைக்கிறீங்க!?

பேசும் மொழி!




நளபாகம், திருப்பூர் கிருஷ்ணனின் நள சரிதம். அவசியம் படியுங்கள். கிடைக்குமிடம், திருப்பூர் குமரன் பதிப்பகம்... சென்னை-2.

● **அ. ஷண்முகசுந்தரம், தருமபுரி.**

உலகின் முதல் ஜோக் எது...?

ஆதாம் : (ஆப்பிளைக் கடித்தபடி அசமஞ்சமாக) ''அன்பே ஏவாள்... என்கிட்ட எதைப் பார்த்து மயங்கி 'ஐ லவ் யூ' சொன்ன...?''

ஏவாள் : (தன் மோவாய்க் கட்டையை ஆதாம் தோளில் இடித்து) ''என் தலையெழுத்து, உன்னை விட்டா வேற ஆள் கிடையாது லவ் பண்ண... வேற வழியில்லாம 'ஐ லவ் யூ' சொன்னேன் போதுமா...! மயங்கறதுக்கு உன்கிட்ட ஒரு புண்ணாக்கும் லைசி; ஓர் ஆப்பிளும் இல்ல... இருந்த ஆப்பிளையும் நீயே தின்னு தீத்துட்ட...!''



கிரிக்கெட் வீரர்களை ஏலத்தில் எடுப்பது சரியா

● எம்.பாஸ்கர், திண்டுக்கல்

? ''எல்லோருமே சாதம் சாப்பிடுவதால் அரிசி விலை உயர்கிறது. இனிமேல் அது குறைய வாய்ப்பில்லை. எனவே, கேரள மக்கள் கோழி, முட்டை, இறைச்சி, பால் சாப்பிடப் பழகிக் கொள்வணும்'' என்று கேரள விவசாய அமைச்சர் ரத்னாகரன் கூறியுள்ளது பற்றி...?

! 'ரொட்டி இல்லாவிட்டால் கேக் சாப்பிடுங்கள்' என்று யோசனை சொன்ன பிரெஞ்சு அரசியின் அடியொற்றிய 'அற்புதமான' வார்த்தைகள். நல்லவேளை! ரிஷிகளைப் போல் காற்றை உண்ணும் ஆற்றலைப் பழகிக்கொள்ளும்படிச் சொல்லாமல் போனாரே!

● பத்மா சுப்பிரமணி,
சென்னை - 11

? ஜார்கண்ட் மாநிலத்தில், குழந்தைகளை நாய்க்குத் திருமணம் செய்து வைத்தால், நீண்ட ஆயுள் பெறுவர் என்ற நம்பிக்கையில், ஒரு சிறுமியை நாய்க்குத் 'திருமணம்' புரிந்துள்ளார்களே?

! தரமான கல்வி எல்லோருக்கும் கிடைத்தால்தான் இது போன்ற மூடநம்பிக்கைகள் வெகுவாகக் குறையும்; மறையும். இல்லையெனில், எத்தனை பெரியார்கள் வந்தாலும் தொடர்ந்துகொண்டு தான் இருக்கும்.

● ச.நாகரத்தினம்,
திருப்பூர்

? அரசியல்வாதியின் வாக்குறுதி, கதாநாயகனின் 'பஞ்ச்' டயலாக் - ஒப்பிடுக...

! முதலாவது - சீக்கிரமே பறந்துவிடும் பஞ்சு; இரண்டாவது - இன்னொன்று தோன்றும் வரை வளைய வரும் 'பஞ்ச்'சு!







• இரட்டை.... •... அபாயம்!

• வெ.நா.சிவகுமார், சென்னை - 33

? காதலுக்கு விலை உண்டா?

! உண்டு; கல்யாணம்!

• யமுனா ரெங்கநாதன், திருச்சி

? ஆந்திராவிலும் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குத் தரும் திட்டம் அறிமுகமாமே?

! இதனால் அங்கேயும் தமிழகம் போல் கடத்தல்தான் அதிகரிக்கும்; பொதுச் சந்தையில் அரிசி விலை மேலும் ஏறும். நம்மைப் போன்ற சாமானியர்கள் தவிக்க, கடத்தல்காரர்கள் கொழிக்க... அரசியல்வாதிகள் வழி செய்து தருகிறார்கள்.

• சத்தியமூர்த்தி, மதுரை

? ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் கிரிக்கெட் வீரர்களை ஏலத்தில் எடுக்கும் முறை சரியானதுதானா...?

! சட்டரீதியாகச் சரியாக இருக்கலாம்; விளம்பரம் வாயிலாக தொழில் வளர்ச்சிக்கு உதவவும் செய்யலாம். ஆனால், நல் மரபுகள், விளையாட்டு உலகப் பண்பு போன்றவற்றின் படுகொலை இந்த வியாபாரம்.

• க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பரிந்துரைக் குழுவில் கனிமொழி இடம் பெற்றுள்ளாரே...?

தராசு
நீங்கள் கேட்டவை

! வழக்கமாகத் தேர்தல் நடத்தப்படும் இப்பொறுப்புக்குப் போட்டியின்றித் தேர்வாகியுள்ளார் என்பதையும் கவனிக்க!

• அகிலா அன்புமணி, ஈரோடு

? 'நான் அமெரிக்க அதிபரானால், அவுட்சோர்ஸிங் முறையைத் தடுக்கக் கடும் நடவடிக்கை எடுப்பேன்' என்று ஹிலாரி கிளிண்டன் கூறுகிறாரே?

! ஒபாமா சொன்னதன் எதிரொலிதான் ஹிலாரியின் அறிவிப்பு. எனவே, இந்தியப் பொருளாதாரத்துக்கு இரட்டை அச்சுறுத்தல்! யார் வென்றாலும் ஆபத்து!

• தி.வி.கிருஷ்ணமூர்த்தி, மும்பை★

? நம் நாட்டில் எழுபது சதவிகிதம் பேர் இளைஞர்கள் (35 வயதுக்குட்பட்டவர்கள்). இவர்களுள் மூன்றில் ஒருவர் படிப்பறிவில்லாதவர் என்பது புள்ளி விவரம் - இது குறித்து...?

! வேலை வாய்ப்பை 'உறுதி' செய்தது போல, கல்வி பெறுவதையும் 'உறுதி' செய்து உத்தரவாதம் அளிக்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது. 'ஆண்டொன்றுக்கு நூறு நாள் கல்வி; அதை அளிக்க முடியாமல் போனால், ஆசிரியரின் நூறு நாள் சம்பளம் மாணவருக்கு' என்று திட்டம் வகுக்கலாம்!

• இரா. இராஜேஸ்வரி, ஏருகுடி

? தமது யோகா ஆசிரியர் தேசிகாச்சாரை, 'நாராயணாய நமஹ' என்பதற்குப் பதிலாக, 'ஞாயிறு போற்றுதும்' என்று கூற வைத்ததாக கருணாநிதி சொல்லிக் கொள்கிறாரே?

! எப்படிச் சொன்னாலும் அர்த்தம் ஒரே பேருண்மையைத்தான் உணர்த்துகிறது. வெறும் வார்த்தைக்கு முக்கியத்துவம் தராமல், 'ஞாயிறு போற்றுதும்' என்று மாற்றிக் கொண்ட தேசிகாச்சாரின் அறிவுதான் தெளிவு பெற்ற அறிவு. வார்த்தைக்கு மல்லுக்கட்டி வெற்றி பெறுவதில் பெருந்தன்மை

• ஏற்றுக்கொண்ட மாற்றம்





● சொகுசு பயணம் !



● புதிய சதவிகிதம்

இல்லை.

● **எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்**

? தனிநாடு கோரிக்கையைக் கைவிட்டு, இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால அரசு அமைக்கும் திட்டத்துக்குப் புலிகள் சம்மதிக்க வேண்டும் என்று, பிரபாகரனுக்குத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் ஆனந்த சங்கரி கடிதம் எழுதியிருக்கிறாரே?

! உடனே ஏற்க வேண்டிய கருத்து. எனினும், பிரபாகரன் அதை ஏற்க மாட்டார். இது தெரிந்தும் கடிதம் எழுதிய ஆனந்த சங்கரியின் பொறுப்புணர்வு போற்றத்தக்கது. தமிழகத் தலைவர்களுக்கு இத்தகைய பொறுப்புணர்வு இல்லையே!

● **கே.கணேசன், மறைமலைநகர்**

? "2004ஆம் ஆண்டு வடக்கும் தெற்கும் இணைவதற்காகப் பாலம் அமைத்தவர் கருணாநிதி. அது உடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது காங்கிரஸின் பொறுப்பு" என்று டி.ஆர்.பாலு எச்சரித்துள்ளது பற்றி...?

! பாலத்தின் தூண்களாக காங்கிரஸும், மேலே அமைந்த சாலையாக தி.மு.கழகமும், ஓடும் சொகுசுக் கார்களாக அதே கட்சிக்காரர்களும் எப்போதுமே நீடிக்க முடியாதல்லவா!

● **அ.அனிதா, அகஸ்தீஸ்வரம்** ☐

? இந்தியாவில் மனிதாபிமானம் மறைந்து, மத அபிமானமும் தீவிரவாதமும் மலிந்து வருகிறதே ஏன்...?

! வோட்டு அறுவடைக்கான ஆயுதமா, மத அபிமானத்தை அரசியல்வாதிகள் பயன்படுத்துவதால்தான். அந்த ஆயுதம் இருபுறமும் கூர் உள்ள கத்தியானதால், மனிதாபிமானத்தை அழித்துவிடுகிறது.

● **இரா.சக்கரபாணி, மதுரை**

? தி.மு.க.வுடன் நூற்றுக்கு இருநூறு கூட்டணியில் இருப்பதாக பா.ம.க. தலைவர் கூறியுள்ளது பற்றி?

! மார்ச் 26ஐ மனதில வைச்சுக்கிட்டு அப்படிப் பேசியதாக நூற்றுக்கு இருநூறு நம்பலாம்.

● **ஏ.டபிள்யூ. ரபீ அஹமத், சிதம்பரம்**

? வசதி படைத்த முதியோர்கள்கூட இலவச முதியோர் பணம் கேட்கிறார்களே...?

! வசதியற்றவர்களுக்கு மட்டுமே என்று சட்டம் இயற்றியிருந்தால் கேட்க முடியாதே!

● **என்.சீதா லட்சுமி, சென்னை - 40**

? 'பெண்கள் பயன்படுத்தும் சானிடரி நாப்கின் போன்ற பொருட்களைக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டும்' என்று பெண்கள் அமைப்புகள், நிதி அமைச்சரிடம் கேட்டுள்ளனவே - சமையல் பொருள்களின் விலை உயர்வு தெரியவில்லையா?

! தெரிகிறது. அதை எல்லோரும் சொல்வார்கள். இதைக் கூற மாட்டார்கள். உணவுப் பொருட்களைப் போலவே இந்த அத்தியாவசிய சுகாதார சாதனத்தின் விலையும், அனைத்துப் பெண்களுக்கும் கட்டுப்படி ஆகும் அளவுக்கு அமைவது அவசியம். நோய் நொடிகளைத் தவிர்க்கவும் பெண்கள் சுதந்திரமாக எல்லா நேரங்களிலும் இயங்கவும் இது உதவும்.

☐ ரூ 100 பரிசு பெறுபவர்:
அ. அனிதா, அகஸ்தீஸ்வரம்

★ ரூ 50 பரிசு பெறுபவர்:
தி.வி.கிருஷ்ணமூர்த்தி, மும்பை

அஞ்சாதே

இரு நண்பர்கள் பற்றிய மற்றுமொரு படம். ஆனால், சொல்லிய விதத்தில் வித்தியாசம் காட்டி ஜெயித்திருக்கிறார் இயக்குநர் மிஷ்கின். குடியும், கும்மாளமுமாக அலட்சியத்தோடு திரியும் நரேனையும், எஸ்.ஐ.ஆவதையே வாழ்வின் இலட்சியமாக வரித்துக்கொள்ளும் அஜ்மல் அமீரையும் யதார்த்தம் இடம் மாற்றிப் போடுகிறது. குறுக்கு வழியில் நரேன் போலீஸாகி கடமையுணர்வுள்ள ஆசாமியாக மாறுவதும், ஏமாற்றமும், வெறுப்பும் நெருக்கித்தள்ள அஜ்மல், கிரிமினலாக உருவெடுப்பதும்தான் கதை. இதற்கிடையே வில்லத்தனத்தால் விஸ்வரூபம் எடுக்கும் பிரசன்னா வேறு.

நரேனுக்கு 'சித்திரம் பேசுதடி' படத்துக்குப் பிறகு, மீண்டும் நடிப்பதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கும் படம். அதை நன்கு பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். தப்பு செய்த மனைவியைக் கண்டம் துண்டமாக வெட்டி, சாக்கில் கட்டிக் கொண்டு போலீஸ் ஸ்டேஷன் வரும் கணவன், அனாதையாக தெருவில் விழுந்து கிடக்கும் மனிதனின் பரிதாபம், நல்லவனாக வாழ நினைத்தும் யதார்த்தத்தில் முடியாமல் திணறும் முன்னாள் இருடன்... என நரேனைச் சுற்றி நடக்கும் ஒவ்வொரு சம்பவமும் முகத்தில் அறைகிற ரகம். ஆத்திரத்தையும், இயலாமையையும் நடிப்பில் கலந்து கட்டிக் கொடுத்திருக்கும் அஜ்மல் அசத்தலான அறிமுகம். அவர் பாதை மாறிச் செல்லும் காட்சிகளில் அழுத்தம் அதிகம். இதுவரை திரையுலகம் கண்டிராத வித்தியாசமான வில்லன் பிரசன்னா. தன்னுடைய சின்னச் சின்ன மேனரிசங்கள் மூலம் ஆடியன்ஸின் மொத்த அப்ளாஸையும் அள்ளிக்கொண்டு போகிறார். அதிலும் அவர் கைக்கடிகாரத்தில் நேரம் பார்ப்பது மிரட்டல் கவிதை.

விஜயலட்சுமிக்கு 'சென்னை-28' கதாபாத்திரம். சொல்லிக் கொடுத்ததை அளவாகச் செய்கிறார். பொன்வண்ணனுக்கு போலீஸ் டிரஸ் அசத்தல் மிடுக்கு. பயமும், குரூரமும் கலந்த சரிவிகித கலவை பாண்டியராஜனின் பாத்திரப் படைப்பு. லிவிங்ஸ்டன், குருவியாக வரும் நபர், என பாத்திரப் படைப்பில் தேர்ச்சி தெரிகிறது.

கோடம்பாக்கத்தின் முக்கிய இயக்குநராகிவிட்ட மிஷ்கின் திரைக்கதையில் மிரட்டியிருக்கிறார். இயல்பாக நகரும் கதையில் இடையிடையே நெருடும் நாடகத்தனமான காட்சியமைப்பு அலுப்பைத் தருகின்றன.

மகேஷ் முத்துசாமியின் கேமரா யதார்த்தம் மீறாமல் கதைக்குள்ளாகவே சுழன்றிருக்கிறது. பாடல்களிலும் பின்னணி இசையிலும் சுந்தர் சி.பாபு மிரட்டல் ரகம். 'சித்திரம் பேசுதடி' வாளமீன் போல, 'கத்தாழை கண்ணாலே குத்தாதே! நீ என்ன...' பாடல் அருமை. சபாஷ் கபிலன்!

நீண்ட நாட்களுக்குப் பிறகு அடர்த்தியான திரைக்கதையோடும், தேர்ந்த திரை ஆளுமையோடும் வெளிப்பட்டிருக்கும் நல்ல படம். இயக்குநர் மிஷ்கினுக்கு வாழ்த்துகள்!

- **கபிலன்**


அஞ்சாதே
படத்தில்
நரேன், விஜயலெட்சுமி

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG s Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.